கப்பிரம்மருஷி பா... ...வனு... ...க்கு உபதேசித்தருளிய

ஸ்ரீ பாகவதமென்னும்
மஹாபுராணத்தில் கிருஷ்ணமூர்த்தி உத்தவருக்குப் போதிக்கு
மோருபாக்கியானமாகிய,

# அவதூத யது சம்வாதம்.

---

இஃது
மகாராஷ்டிர பாஷையில்
பரமபாகவத சிகாமணியான
**ஸ்ரீ ஏகநாத சுவாமிகள்**
அருளிச்செய்த ஏகாதச ஸ்கந்த வியாக்கியானத்தின்படி
ஹைதராபாத் D.P.W. ஹெட் அகௌண்டெண்டாக விரு...
**வே. பாலகிருஷ்ண முதலியாரவர்களால்**
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

ம-ா-ா-ஸ்ரீ,
**பெ. மாணிக்கசுவாமி முதலியார் பி. ஏ. அவர்களால்**
சீர்திருத்தப்பட்டு,

சென்னை, பச்சையப்பன் கல்விச்சாலை
தமிழ் உபாத்தியாயர்
**ம-ா-ா-ஸ்ரீ அ. சிங்காரவேலு முதலியார்**
அவர்களால்
பரிசோதிக்கப்பட்டது.

---

இரண்டாவது பதிப்பு

---

சென்னை மவுண்ரோட்
"ஆரே" அச்சுயந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1922.
(Copy Right.)

24 JAN 1922

R4
N22
68102

சுகப்[illegible]

மஹாபுராண[illegible]

# அவதூத ய[illegible]

இஃது
மகாராஷ்டர பாஷையில்
பரமபாகவத சிகாமணியான
**ஸ்ரீ ஏகநாத சுவாமிகள்**
அருளிச்செய்த ஏகாதச ஸ்கந்த வியாக்கியானத்தின்படி
ஹைதராபாத் D.P.W. ஹெட் அகௌண்டென்டாக விருந்த
**வே. பாலகிருஷ்ண முதலியாரவர்களால்**
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

ம-ா-ா-ஸ்ரீ,
**பெ. மாணிக்கசுவாமி முதலியார் பி. ஏ. அவர்களால்**
சீர்திருத்தப்பட்டு,

சென்னை, பச்சையப்பன் கல்விச்சாலை
தமிழ் உபாத்தியாயர்
**ம-ா-ா-ஸ்ரீ அ. சிங்காரவேலு முதலியார்**
அவர்களால்
பரிசோதிக்கப்பட்டது.

**இரண்டாவது பதிப்பு**

சென்னை மவுண்ரோட்
"ஆரூ" அச்சுயந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

(Copy Right.)

24 JAN [illegible] MADRAS

2087

...சுகட
விசேஷ
; யடைய
...வக சிலணுகி
விட்டுப் பற்ற
...கிடமாம். இந்தக்
...ன்மையாக வுணர்த்

---

## விஷய சூசிகை.


| ...பரம். | பக்கம். |
|---|---|
| பூமி ... ... ... | 7 |
| வாயு ... ... ... | 9 |
| ஆகாயம் ... ... ... | 11 |
| ஜலம் ... ... ... | 12 |
| அக்கினி ... ... ... | 14 |
| சந்திரன் ... ... ... | 15 |
| சூரியன் ... ... ... | 16 |
| புருப்பக்ஷி ... ... ... | 17 |
| மலைப்பர்ம்பு ... ... ... | 25 |
| சமுத்திரம் ... ... ... | 26 |
| விட்டிற்பூச்சி ... ... ... | 27 |
| தேனீ ... ... ... | 28 |
| தும்பி ... ... ... | 30 |
| ஈ ... ... ... | 31 |
| யானை ... ... ... | ,, |
| மான் ... ... ... | 32 |
| மீன் ... ... ... | 33 |
| பிங்களைவேசி ... ... ... | 34 |
| குரரம் ... ... ... | 43 |
| பாலகன் ... ... ... | 45 |
| குமாரி ... ... ... | 46 |
| சரகாரன் ... ... ... | 50 |
| சர்ப்பம் ... ... ... | 51 |
| சிலந்திப்பூச்சி ... ... ... | 55 |


---


சென்னை, நரசிங்கபுரம்,

பெ. லோ. திருவேங்கிடசாமி முதலியாரால்

27—9—1922. பிரசுரிக்கப்பட்டது.



ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீபார்த்தசாரதி குரவேநம:

இது மகாராஷ்டிர பாஷையில்

ஸ்ரீ ஏகநாத சுவாமிகள் அருளிச்செய்த

ஏசாதசஸ்கந்த பாகவத வியாக்கியானத்தில்,

# அவதூத யது சம்வாதம்.

## అవధూత యదు సంవాదము.

24 JAN 1923

### வரலாறு.

பிராயோபவேசம் பண்ணின பரிக்ஷன் மகாராஜனுக்குச் சுகப்பிரம்மருஷி பரமாத்மாவான நாராயணனுடைய சுவரூப ரூப குண விபூதிகளைச் சொல்லும் பாகவதார்த்தங்களைப் பத்து ஸ்கந்தங்களிற் போதித்துக் கிருஷ்ணமூர்த்தியினுடைய லீலாவதார சரித்திரம் சமாப்தமாகு மவசரத்தில், பரம பக்தரான உத்தவர், கிருஷ்ணமூர்த்தியினிடம் வந்து தாம் கிருதார்த்தனும் பொருட்டு இதோபதேசம் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கு ஸ்ரீ கண்ணபிரான் சகலார்த்தங்களையு முபதேசிக்கத் தொடங்கி, முதலில் ஆத்மாவே முக்கியாசாரியரென்று தெரிவிக்கும் பொருட்டு "அவதூத யது சம்வாத" மென்பதை யருளிச்செய்ததைப் பதினொராவது ஸ்கந்தத்தில் நிரூபித்தார். அதனை இந்தக் கிரந்தம் சமஸ்கிருத சுலோகங்களுடன் ஏகநாதர் செய்த வியாக்கியான தாற்பரியத்துடன் விவரிக்கிறது.

ஏகநாதரென்பவர் வடதேசத்தில் புகழ்பெற்ற பக்தசிரோமணியா யிருந்தார். அவரது சரித்திரம் பக்தமாலையென்னும் தெலுங்கு கிரந்தத்தில் விசதமாக நிரூபித்திருக்கிறது.

68102

R4

இந்த உபாக்கியானம் ஸ்ரீ பாகவ[illegible] ஏகாதச ஸ்கந்த்தி[illegible] ஏழாவது அத்தியாயம் 24-வது சுலோகந் தொடங்கி 9-வது அத்தியாயம் 33-வது சுலோகம் வரைக்கும் சொல்லப்படும்.

### శ్రీభగవానువాచ.

శ్లో॥ అత్రాప్యుదాహరంతీమ మితిహాసంపురాతనం ।
అవధూతస్యసంవాదం యదోరమితతేజసః ॥ 1.

தாத்பரியம்.—ஸ்ரீ கண்ணபிரான் உத்தவருக் குரைசெய்த வாக்கியம். ஓ யுத்தவரே! என் வம்சத்தில் முதற்பிறந்தவரான யதுவென்னும் மகாராஜர், பிரம்மக்கியானத்தை யடையும்பொருட்டு ஒரு அவதூதருடன் செய்த சம்வாதத்தைக் கூறுகிறேன் கேளும். இவ்வரசன் சூரியவம்சத்திற் பிறந்த க்ஷத்திரியர்களைப் போலவே சந்திரமரபிலுதித்தவனாகி ஆசாரியனிருந்த இலக்ஷணத்தைக் கேட்டுணர்ந்து சாயுஜ்ய முத்தியை யடைந்தனனென ஒரு புராதன கதையுளது.

శ్లో॥ అవధూతంద్విజంకంచి చ్చరంతమకుతోభయం ।
కవింనిరీక్ష్యతరుణం యదుఃపప్రచ్ఛధర్మవిత్ ॥ 2.

தா.—தன் தேஜஸ்ஸால் பிரகாசம் பொருந்திப் பிரம்மானந்தத்திலாழ்ந்து, பிரம்ம சூத்திரத்தைத் தரித்தவராயும், பயமும் சங்கையும் தன்னை யணுக வொட்டாமலும், பிராணன்களை வெளிமுகமாக்காமலும், பிராணுபானன்களைச் சுபாவத்தில் சமானமாக வடையப்பெற்றும், திருசியங்களை நோக்காது தரிசனத்திற்குப் பிரதமாபாசமான திருக்குவாக விருந்து, கருமமும் காரியமும் கர்த்தாவும் தானேயாகித் தேகம் மித்தையென வுணர்ந்து அதன்மீது சற்றுமபிமானமின்றி நான்காச்சிரமங்களையும் நிராகரித்து, அனுதினமும் ஹோமத் துவாரத்தில் பிரம்மாக்கினியை யேகரீதியாக வளர்த்தி, அந்தத் தீயில் சாஸ்திர சிரவண விதிவாதங்களைத் தகனஞ்செய்து அதிலுண்டாகுஞ் சாம்பரும் தன் னஸ்தத்திற் படாமற் செய்து கொண்டிருந்த ஒரு அவதூதரை யது மகாராஜன் சந்தித்துப் பின்வருமாறு விண்ணப்பஞ் செய்யலாயினன்.

### యదురువాచ.

శ్లో॥ కుతోబుద్ధిరియంబ్రహ్మన్నకర్తుసువిశారదా ॥
యామాసాద్యాభవాల్లోక విద్వాంశ్చరతిబాలవత్ ॥ 3.

## யதுமஹாராஜன் வாக்கியம்.

ஓ சுவாமி! அபூர்வமான புத்தி உம்மிடமிருக்கக் காண்கிறேன். இயம நியம தர்மங்களை யாசரிக்கு மவர்கள் பெறுதற்கரிய ஞானத்தைப்பெற்று வஸ்துவி னிலக்கணம் முழுதும் முணர்ந்தவராகி நிச்சலத்தை வகித்து நீர் அகர்த்தரைப்போல விருக்கிறீர். பாலகன் ஏதுவற்றிருப்பதுபோல நீர் ஆத்மபோதத்தில், கர்த்தாவாகாமலிருக்கிறீர், பாலபுத்திபை யுடையீரெனினும் சர்வக்ஞனாக விளங்குகின்றீர் புருஷார்த்தத்தை யும்மிட மின்று கண்டேன்.

శ్లో॥ ప్రయోధర్మార్థకామేషు వివిత్సాయాంచమానవాః।
హేతుష్వైవసమీహంతె ఆయుషోయశసఃశ్రియః॥ 4.

தா.—இவ்வையத்தில் பெரும்பாலார், அறம் பொரு ளின்பங்களை யடைவதற்கே தமது நுண்ணிய வறிவை யுபயோகிக்கிறார்கள். நாங்கள் சுவதர்மத்தைப் புரிகின்றோமென்று பலர் மெச்சப் பறைசாற்றுவார்கள். திரவியமடையும் நிமித்தம் அவர்கள் காயத்திரி ஜெபம் செய்தபோதிலும், வேதார்த்தமாகத் தாங்கள் செய்வதாகவும், வேதமார்க்கத்தை ஸ்தாபிக்கவே தாங்கள் மேற்குறித்த காரியங்களைப் புரிவதாகவும், பிறருக்குக் கூறி யுண்மையில் தாங்கள் ஜீவிகாயோகமே செய்து சுவர்க்க லோகபோகங்களைக் கோருவார்கள். இத்தகையரில் ஒரு பாலார் நாங்கள் கர்மநிஷ்டர்கள் என்று நவில்வர். இன்னொருபாலார், தர்ப்பைப் புல்லையும் மிருத்திகையையும் ஜலத்தில் போட்டு யாசகர்கள் வரின் பிச்சையிடார். வேறுசிலர், டாம்பீகத்திற்காக வைஷ்ணவ சின்னங்களைத் தரித்தும் பூஜா பாத்திரங்களைப் பளபளவெனத் துலக்கியும் வெகு சீலர்களெனக் காட்டிக்கொண்டும் தாங்கள் அஹிம்சா தர்மத்தை யவலம்பித்தவர்களெனப் பிறருக்குத் தெரிவித்துத் தாவர ஜங்கம ஜீவராசிகளைக் கொலைபுரிவதில் மனங் கூசாதவராகி அவைகளைப் புஜித்துத் தேக்கிட்டு முலாவி வருவார்கள். இன்னும் சிலர், தம்முடைய கீர்த்தி பிரக்யாதி யாகும்பொருட்டுத் துலா புருஷதானஞ் செய்வார்கள். மற்றுஞ் சிலர், இத்தேகம் மலமூத்திரங்களாலாயது; இதை நிறையிடைத்தனத்திற்கு விற்கிரயஞ்செய்து தம்முடைய ஆத்ம தத்வத்தை மறந்து விவேகத்தைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள்; இது என்ன ஆச்சரியம்! இத்தகையோர் தனத்திற்காக இலக்ஷ்மியை யுபாசிக்கிறார்கள். இலக்ஷ்மி நாயகனாகிய ஸ்ரீயஃபதியைப்

பாக்கிய ஹீனனாகிப் பஜிக்கிறதில்லை. நோய் நிவாரணமும் நீண்ட ஆயுளும் வேண்டிச் சூரியனை யுபாசிக்கிறார்கள், இவர்கள் உடல் பொய்ப்புறவை மனதில் நினையார்போலும். இவ்வாறான போலிப் பக்தர்கள், ஆயுளுக்காகவும், கீர்த்திக்காகவும் ஸ்திரீகாமராகப் பஜித்து நிலையில்லாமையான விஷய போகங்களைப் பெறுவார்கள். வேதாந்தப் பொருள்களை வாயினாற் பிதற்றி அத்துவித பிரம்மத்தைப் பிரதிபாலிப்பவர்கள்போல நடித்து எள்ளளவேனுஞ் சுவானுபவமின்றித் தமது சாஸ்திர ஞானத்தைப் பிறருக்கு விற்பனை செய்கிறார்கள். தாங்கள் யோக ஞானிகளென்று கூறி யுலகினருக்கு வாயு தாரணையைக் காட்டித் தியானத்திலிருப்பதுபோல் நடிப்பார்கள். இதுவும் விஷயானுபவத் தன்மையான ஜீவனத்திற்கன்றி விச்ராந்தி யடைவதற்கல்ல. இப்படி வீண் சாதனங்களைச் சாதித்து மூர்க்கராகிறார்கள். நீரோ அம்மார்க்கங்களைத் தவிர்ந்து ஆத்மசுகத்தையே சாதிக்கின்றீர். ஜீவத்வத்தைத் துரும்புபோற் செய்து உலக சம்பந்தமான யாவையுந் துச்சப்படுத்தி நிஜாத்ம நிஜத்தில் வேரூன்றி நிற்கின்றீர்.

శ్లో॥ త్వంతుకల్పః కర్దక్షః సుభగోమృతభాషణః ।
నకర్తా నేహ నేకించిజ్జడోన్మత్తపిశాచవత్॥ 5.

தா.—நீர் எல்லாவற்றையுங் கண்டறியும் ஞாதாவாகின்றீர். அறியாமையைத் தலையெடுக்க வொட்டாமல் நசிக்கச் செய்திருக்கின்றீர். சங்கற்ப நாசராகவு மிருக்கின்றீர். நிஜசாந்தியைச் சடத்வத்தால் காண்பிக்கின்றீர். எப்பொழுதும் சாக்ஷிமாத்திரமாக நின்று சலனமற்றுச் சும்மாவிருக்கின்றீர். அங்கத்தில் வ்யங்கமும் ரூபத்தில் ஸ்வரூபமுந் தோன்றுகின்றன. ஞானத்தினால் நீர் ஒருவராகவே யிருக்கின்றீர். இரண்டாம் பொருளில்லை யாதலின் பரதேசியாக விருக்கின்றீர். செய்கையிருந்து மகர்த்தாவாக விருக்கிறீர். இவைதாம் உம்மிடத்திலிருக்கும் பெருமை. பிரம்ம ரசமென்று சொல்லு மமிர்தத்தை நீர் பானஞ்செய்து கொண்டிருக்கின்றீரல்லவா? பிரம்மானந்தமென்னு மயக்கத்தினால் உன்மத்தராகித் திரிகின்றீரல்லவா? உம்முடைய திருஷ்டிக்கு ஒருவருந் தோன்றாரல்லவா? இதனால் அகங்கார மமகாரமற்றுப் பித்தரைப்போல அவனியிலுலாவிக் கொண் டிருக்கின்றீரல்லவா? பிராப்பியஞானத்தால் சித்தியடைந்து பரமானந்தத்துடன் சஞ்சரிக்கின்றீர்.

శ్లో॥ జనేషుదైహ్యమానేషు కామలోభదవాగ్నినా ।
నతప్యసేగ్నినాముక్తో గంగాంభస్థఇవద్విపః ॥ 6.

தா.—காமலோபமென்று சொல்லும்படியான தாவாக்கினியானது திரிலோகங்களையுந் தகிக்க நீர் மாத்திரம் அதிலகப்படாது சேஷித்துச் சஞ்சரித்து வருவது மிக வியப்பைத் தருகின்றது. காட்டுத்தீ, கங்கை நதியிலிருபக்கத்திலும் எரிந்துகொண்டிருக்க ஒரு யானையானது கங்காஜலத்தில் மூழ்கி அத்தீவயப்படாது இருப்பது போல் நீர் துவிதமற்றுப் பிரம்மானந்த தீர்த்தத்தில் மூழ்கி விளங்குகிறீர்.

శ్లో॥ త్వంహినఃపృచ్ఛతాంబ్రహ్మ న్నాత్మన్యానందకారణం ।
బ్రూహిస్పర్శవిహీనస్య భవతఃకేవలాత్మనః ॥ 7.

தா.—நீர் பிரம்மத்தை யோர்ந்த பிராமணராவீர்; நீர் ஞானந்தத்தால் பூரணானுபவியாகவிருத்தலின், அந்த வானந்தத்திற்குக் காரண மிற்றிதென அடியேனுக்குப் புகட்டி யருளல் வேண்டும். நீர் தேகத்துடன் கூடியும் விதேகியாக விருக்கிறீர். விஷயங்களோ, உம்மைப் பாதிக்கச் சக்தியற்றவைகளா யிருக்கின்றன. இத்தசை யுமக்கு நேர்ந்தவண்ண மெவ்வாறு? மேலும் நீர் இராஜசன்மானத்தை விரும்பாமலும் தனவான்களை யனுசரியாமலும் தீன ஜனங்களை மன்னித்தும் உமது நிஜபோதத்தால் மனோரதத்தைப் பூர்த்திசெய்துகொண்டும் காருண்யமே ஒரு வடிவாக வகித்திருக்கின்றீர். இஃதன்றியும் ஆர்த்த ஜனங்களுக்குப் பந்துவாகவும் தீனரிடம் தயையுடையவராகியும் ஆத்ம பாவனையினால் பக்தவற்ஸலத்தை யடைந்தவராயு மிருக்கின்றீர் என்று இவ்வாறு துதித்து மிக வினயத்துடன் விண்ணப்பஞ் செய்துகொண்டு தன் எதிர் நின்ற யது மகாராஜனை நோக்கி அவதூதர் சொல்லலுற்றார்.

అవధూత ఉవాచ,

శ్లో॥ సంతి మేగురవోరాజన్ బహవోబుద్ధ్యుపాశ్రితాః ।
యతోబుద్ధిముపాదాయ ముక్తోటామిహాతాఙ్ శృణు ॥ 8.

தா.—ஓ அரசனே! ஆசாரியனின்றி ஆத்மப் பிராப்தி சித்திக்காதாதலின் என்னுடைய விவேகத்தா லாராய்ந்து அனேக ஆசாரியர்களை யான் தேடிக்கொண்டேன். பூதங்களில் எவ்வெவ்விடத்துச் சத்குணங்களைக் கண்டேனோ அவ்வவ்விடத்து நிலைகளைப் பிடித்துக்

குருபுத்தியா லங்கீகரித்துத் தாரணையினால் தைரியத்தை வகித்து முக்தனாகிச் சுயேச்சையாய் அவனியில் சஞ்சரித்து வருகிறேன். சத்புத்தி யில்லான் சம்சாரத்திற் கத்தியந்த தாசனாகி அல்லும் பகலும் * விர்ாமமற்று அனந்த துக்கங்களாற் பீடிக்கப்படுகிறான். வைராக்கியமுண்டாகி நான் உய்யும் வகை எது என்னும் விசாரம் அன்னோனுக்குக் கனவிலு முதியாது, வைராக்கியத்தால் சத்புத்தி யுண்டாயின் சம்சாரநாசம் மிகுசுலபம். சமுசாரநாசத்திற்கு மூலம், பிரத்தியக்ஷத்தில் பார்க்கப்பட்ட வஸ்துக்களின் விவேசனை (ஆராய்வு.) யான் சொல்லப் புகும் குருக்களனைவரும் பூதகோடிகளின் இலக்ஷணங்களேயாம். அவைகளே உபாயமாகக் கொள்வதே விவேகத்தி னிலக்ஷணமாம். ஒரு லக்ஷணத்தைத் திருஷ்டாந்தமாக வெடுத்துக்கூறுகிறேன் கேளாய்; முறத்திலிட்ட தானியங்களை நோம்பித் தாத்தினால் பதர்கள் கீழே விழுந்து நற்றானியங்கள் எப்படி முறத்திலேயே யிருக்கின்றனவோ அங்ஙனம் விவேக விசாரணையினால் தியாஜ்ஜியமானவைகளை விட்டு ஸ்வார்த்த மானவைகளைக் கைக்கொள்ளல் வேண்டும். இவ்வண்ணம் விசாரணை பண்ணுமளவில் கையிற் கண்ணாடியைப்போல உண்மைவிளங்கும். நான் சொல்லப் போகுமவைகளைச் சாவதானமாக மனதிற் றரிக்கச் செய்க. நான் முன் கூறியவண்ணம் வஸ்துக்களின் குணங்களைக் கடைப்பிடித்து அவைகளைக் குருவுகளாக்கிக்கொண்டேன். ஆகையா லிப்புவியிலுள்ள யாவு எனக்கு ஆசிரியர்களாகத் தோன்றுகின்றன. நற்குணங்களைக் கிரகிக்கு நிமித்தம் சில வஸ்துக்களை யான் குருக்களாகச் செய்துகொண்டேன். சில பொருள்கள் துர்க்குணத் தியாகத்தின் நிமித்தம் குருரூபங்களாயின; இவ் வகையான சாதன மெவனுக் குண்டோ அவனே பாரமார்த்தத்தைச் சாதிப்பான். யான் இவ்வாறு(24) குருக்களைச் செய்துகொண்டேன். அவை யாவையெனில்,

శ్లో॥ పృధ్వీవాయురాకాశ మాపోగ్నిశ్చంద్రమారవిః ।
కపోతోజగరఃసింధుః పతంగోమధుకృద్గజః ॥ 9.

శ్లో॥ మధుహాహరిణోమీనః పింగళాకురరోర్భకః ।
కుమారీశరకృత్సర్ప ఊర్ణనాభిఃసుపేశకృత్ ॥ 10.

శ్లో॥ ఏతేమేగురవోరాజన్ చతుర్వింశతిరాశ్రితాః ।
శిక్షావృత్తిభిరేతేషాం మన్వశిక్షమిహాత్మనః॥ 11.

శ్లో॥ యతోయదనుశిక్షామి యథావానాహుషాత్మజ ।
తత్తథాపురుషవ్యాఘ్ర నిబోధకథయామితే॥ 12.

* விராமம்—முடிவு.

தா.—பூமி, வாயு, ஆகாயம் ஜலம், அக்னி, சந்திரன், சூரியன், புருப்பக்ஷி, மலைப்பாம்பு, சமுத்திரம், விட்டிற் பூச்சி, தேனீ, யானை, தும்பி, மான், மீன், பிங்களை யென்னும் வேசி, சூரரம், (கறுத்த மூக்கும் சிவந்த காலுமுள்ள அன்னப்பக்ஷி) பாலகன், குமாரி, சரதர்நன் (பாணத்தை விடுகிறவன்), சர்ப்பம், சிலந்திப் பூச்சி, ஈ, நகுஷபௌத்திரனாகிய ஓ அரசனே! இருபத்தைந்தா மவனைப் பார்ப்பதற்கு இருபத்துநான்கு குருக்களை யானுபாசித்தேன். இவைகளால் சிக்ஷிக்கப்பட்ட விருத்தியினாலும் என்னுடைய யுக்தியினாலும் மனது விகற்பங்களின்றி ஆத்ம ஸ்திதியை யடைந்தது.

## க - பூமி.

శ్లో॥ భూతైరాక్రమ్యమాణోఽపి ధీరో దైవవశానుగైః।
తద్విద్వాన్న చలేన్మార్గాదన్వశిక్షం క్షితేర్వ్రతం ॥ 13.

தா.—பாரமார்த்திகத்திற்கு முக்கியமானது சாந்தி. அது சாதகர்க்கு அவசியமானதாகையால் பூமியை யான்பிரதம குருவாகச் செய்துகொண்டேன். இது பர்வதம், விருக்ஷம், பூமி என மூன்றுவிதங்களாகப்பிரிவுபடும். இவைகளின் இலக்ஷணங்களை மனதில் தரித்திருந்தால் அந்தரிந்திரியமானமனது சாந்தியையும் தாந்தியையுமடையும், பூமியை என்னுடையது, உன்னுடையது என்றுஎண்ணித்தங்கள் தங்கள் விருத்தி விவகாரங்களுக் கனுகூலமாக அதனைப் பின்னப்படுத்தியும் அது அபின்னமாகவேயிருக்க நாம்காண்கிறோம். சிலர் பூமியைப் பூஜிக்கிறார்கள். சிலர் அசௌசமுஞ் செய்கிறார்கள். இப்படியிருந்தும் பூமியானது சந்தோஷத்தையாகிலும் துக்கத்தையாகிலு மடைவதில்லை. இவ்விதமாகவே பிரபன்னர்களும் சர்வபூதங்களால் தமக்கு விளையும் சுகாசுகங்களை நோக்காது அவைகளை நிசாத்மபாவனையால் சமமாகவே பாவிப்பார்கள். இத்தகைய சாந்தியைத் தரித்தன்றோ சாதுக்கள் பகவத் பக்தியை யடைந்திருக்கின்றனர். ஜனங்கள் இலை சருகுகளைக்கொண்டு பூமியை நெருப்பினா லெரித்தபோதிலும் கலப்பையால் உழுதபோதிலும், காலால் மிதித்தபோதிலும் அது அவர்கள்மேல் சீற்றங்கொள்ளாது. அவர்கள் செய்யும் அபராதத்தை மன்னித்து அவர்களுக்கு வேண்டிய தானியங்களைக் கொடுத்துப் பூதங்களைத் திருப்தி செய்கின்றது. அபராதத்தை யொருவன் உபேக்ஷித்திருப்பது சாந்தியாகாது, கரும்பை ஒருவன் வெட்டினால் அது வெட்டுங்கத்திக்கும், தன்னை வெட்டுபவனுக்கும் மதுரத்தையளிப்பதுபோல அபகாரிக்கு உபகாரஞ் செய்வதே சாந்தியாகும்.

శ్లో॥ శశ్వత్పరార్థసర్వేహః పరార్థైకాంతసంభవః ।
సాధుః శిక్షేత భూభృత్తో నగశిష్యః పరాత్మతాం ॥ 14.

தா.—பிருதுவியினுலுண்டானவை பர்வதங்கள். இவைகளையும் ஆசாரியராகச் செய்துகொண்டு நான் கற்றறிந்ததை நீ கேட்பாயாக. இரத்தினங்கள் முதலிய உயர்ந்த கற்களையும், புல், ஜலம் முதலியவற்றையும் பரோபகார நிமித்தம் பர்வதங்கள் தங்களிடத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றன. எவரேனும் அரிவாளைக் கையிலேந்திப் புல்முதலானவைகளை அறுக்கவந்தால் பர்வதங்கள் அவர்களைப் போவென வெருட்டுவதில்லை. யாசகர்கள் இச்சாபூர்த்தியாக அவைகளிடத்திலிருந்து வேண்டியமட்டும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். வெயிற்காலத்தில் யாவுமுலர்ந்துபோக ஈஸ்வரன் மழைபெயச்செய்து தண்ணீர்முதலானவைகளை யதேஷ்டமாக உண்டாக்குகிறான். ஈகையாளன் உல்லாசமாகத் தன்னிடத்திலிருக்கும் பொருள்களைப் பிறருக்குத் தானஞ் செய்யுந்தோறும் அவன் மனதில் விகற்பம் அணுகாவண்ணம் பகவான் அருள்செய்கின்றனன். தன்னால் ஒன்றுமில்லை. பகவானே யாவற்றையும் நடத்திக்கொண்டு வருகிறானென்று எண்ணி எவனொருவன் தானஞ் செய்கிறானோ அவன் வறுமையையும் விகற்பங்களையு மடையான். தங்களிடத்திலுள்ள பொருள்கள் யாவற்றையும் பிறருக்கு வினியோகஞ் செய்தலின் பரோபகார விருத்தியன்றி வேறுவிருத்தியைப் பர்வதங்களறியா. இத்தன்மைபோலவே சாதகன், மனோவாக்குக் காயங்களால் உதாரத்வத்தையடைந்து கோடிலாபம் வந்தபோதிலும் அதனை உபேக்ஷித்து உபகாரசிந்தனையிலேயே நிலைபெற நிற்றல்வேண்டும். உபகாரமே தனது ஸ்வரூபம், பரோபகாரம் ஸ்வரூபத்தின் பகிர்முகவடிவமாகும். இப்படி உத்தமர்கள் உலகில் பிறந்து எண்ணிறந்த பரோபகார கிருத்தியங்களை இவ்வுலகில் புரிந்து வந்திருக்கின்றனர். கரும்பு தனது மதுரத்தை எல்லோருக்கு மளித்து உபகரிப்பதுபோலப் பிரபன்னன் தனது ஞானமாகிய மதுரத்தைப் பிறருக்கருளிப் பரோபகாரம் செய்வான். பர்வதங்கள்மேல் தேவதைகள் வசித்து அவைகளை இரக்ஷிப்பதுபோல உபகாரஞ் செய்பவர்களிடம் இமையவர்கள் குடியிருந்து அன்னோர்க்கொருகுறைவு மணுகாவண்ணம் அவரைக்காத்தளிப்பர். கிருபணத்வ மின்றிப் பர்வதங்கள் உபகாரமளித்தலின் இக்குணத்தைநோக்கி யான் அவைகளைக் குருவாகச் செய்துகொண்டேன். இனி விருக்ஷங்களால் நான் அறிந்துகொண்டதைப் புகல்கின்றேன்.

கேளாய். சர்வாங்க சர்வகால சர்வதேசத்தாலும் பராதீன மடைய வேண்டுமென்பதை யான் விருக்ஷங்களால் அறிந்துகொண்டேன். விருக்ஷமானது தன்னைச் சம்ரக்ஷணை செய்பவனிடத்தும், தன்னை வெட்டுபவனிடத்தும் தான் என்னும் அபிமானமற்று எப்படி உபே க்ஷையுடன் உருப்பெற்று நின்றிருக்கின்றதோ அவ்விதமாகவே பிர பன்னன் தன்னைப் பல்லக்கிலேற்றினாலும் சூலத்திற் குத்தினும் உளை வுறாது உடல்காவல் கைவிட்டிருப்பான். உயிருள்ளவைகட்கும் உயி ரில்லாதவைகட்கும் உள்ளீடாக ஆத்மா பரிபூரணமாக விளங்கியிருத் தலை முழுதுணர்ந்து பிரபன்னன் பிரம்மபாவனையுள் படிந்திருப்பான், துக்கா துக்கங்கள் ஊழுள்ளவாறு விடாதென்றோர்ந்து சகலலோ கங்களையும் ஆத்மபாவனையுடன் கண்ணுற்றுத் தேகாதி விஷயபற் றற்றுப் பரிபூரணானந்த போதத்திலிருப்போன் பிரபன்னன். இன் னொருவிசேடம் யான் விருக்ஷங்களால் தெரிந்து கொண்டேன். விரு க்ஷத்தின் கீழ் ஒரு அதிதி வருவானாகில் அவனுக்கு அவ்விருக்ஷம் வஞ்சனையின்றிப் பத்ர புஷ்பங்களையும், பழத்தையும், நிழலையும் காஷ்டத்தையும் கொடுத்துதவும். தன்னை வெட்ட வந்தவனுக்கும் மேற்கூறிய வஸ்துக்களை விகற்பமின்றிக் கொடுத்து அவனைச் சந்துஷ் டிசெய்யா நிற்கும். விருக்ஷத்தைப்போலப் பிரபன்னனும் நல்லோர் தீயோர் யாவர்வந்து தன்னையடையினும் அன்னோரிடத்துச் சமபா வனையுடனிருந்து அவருக்குத் தாரக போஷணைகளைப் பாராமுகஞ் செய்யாது நல்குவன்.

### உ. வாயு.

ஶ்లో॥ ప్రాణవృత్త్యైవసంతుష్యే మునిర్నైవేంద్రియప్రియైః ।
జ్ఞానంయథానసశ్యేత నావకీర్యేతవాఙ్మనః ॥ 15.

தா.—ஜீவர்கள் விடயங்களை ஐம்பொறிகளாற் பற்றினும் நிரா சையுடனிருப்பரேல் அவர்களை அகங்காரம் தீண்டாது. பிராணத்திற் குப் பசி அப்பிபாசமாக விருக்கிறது. பசியெடுத்தபோது பிராணன் க்ஷோபிக்கும். அதனால் மனோவாக்குக் காயங்கள் சலனமுறும். இந் தப் பிராணாதார நிமித்தம் ஒருவன் தனக்குப் பசி வந்தடையின் அதைத்தணிக்க ஈந்த உணவு அகப்பட்டபோதிலும் அதன் ருசியை நோக்காது அதை யருந்துவான். அப்படியே சாதுக்கள் தேகத்தில் அபிமானம் வையாமல் தீமை நன்மை பொருந்திய எவ்வித விடயங் களையும் நிராசையுடன் சேவித்துவருவர். இந்திரியங்கள் சலனமுறின் ஞானதாரணை திடம் குன்றும். ஆதலின் இந்திரியங்கள் சலனமுறு

திருப்பதற்கு ஆகாரத்தை மிகாமலும் தாழாமலும் சமமாகப் புசித்தல் வேண்டும். பிராணனால் இந்திரியங்களுக்குத் தாருட்டிய முண்டாம். பிராணத்தால் தேகம் சலனமடைகிறது. தேககர்மம் பிராணனை விட்டில்லாவிடினும் பிராணன் அலிப்தமாகவிருக்கும். இந்தப் பிராணனுடைய ஸ்திதி யெவ்விதமெனில் தான் சர்வத்தையும் செய்து அவைகளில் ஆசக்தியில்லாம லிருக்கிறது; பிரம்மாதி தேவர்களின் சரீரங்களையும் பன்றி முதலான தேகங்களையும் பாலித்துக்கொண்டு ஏற்றக் குறைவின்றிச் சமமான பாவத்தால் நிற்கின்றது. இராசாவைப் பிரதிபாலிக்க வேண்டும், ஈனனைக் கைவிடல் வேண்டும் என்கிற எண்ணம் அதனிடத்தில் கிடையாது. ஸ்தான பேதத்தால் அபான சமான உதான வியானனென்னும் நாமங்களைப் பெற்றிருக்கிறதே யல்லது தன்னுடைய சுபாவமான ஏகத்வத்தை என்றும் விடுவதில்லை. இவ்விதமாகவே சாதுக்கள் அந்தஸ்துக்களையும், வர்ண வர்ணங்களையும், அதமோத்தம குணங்களையும் நினைவு கூர்தலின்றித் தமது பூரண ப்ரவத்திலேயே நிலையூன்றி நிற்பர்.

శ్లో॥ విషయేష్వావిశన్ యోగీ నానాధర్మేషు సర్వతః ।
గుణదోషవ్యపేతాత్మా నవిషజ్జేతవాయువత్ ॥ 16.

శ్లో॥ పార్థివేష్విహదేహేషు ప్రవిష్టస్తద్గుణాశ్రయః ।
గుణైర్నయుజ్యతేయోగీ గంధైర్వాయురివాత్మదృక్ ॥ 17.

தா.—வாயுவானது பின்னப் பட்டதுபோலத் தோன்றியபோதிலும் தான்மாத்திரம் ஒருபடித்தாய் என்றும் நிற்றல்போல, யோகியும் பல வியாபாரங்களில் ஈடுப்பட்டிருந்த போதிலும் ஒருமையைச் சாதித்தல் வேண்டும். இவ்வாயுவானது, எல்லாவற்றையுந் தடையின்றி ஸ்பரிசித்த போதிலும் ஸ்பரிசிக்கப்பட்ட பொருட்களின் குண குணங்களால் தனது சுவரூபங் சொஞ்சமேனும் பங்கப்படாது நிற்றல்போல சாதகனும் விடயபோகங்களைப் புஜிக்கும் போது தானவைகளுக்கு அன்னியனென நன்குணர்ந்து அவை வயப்படாது விளங்கல் வேண்டும். ஒருவன் இந்திரிய வயத்தனாகிலன்றே குணதோஷங்களணுகும். அவற்றின் வயப்படானாகில் குண தோஷங்கள் அவனை ஒட்டா. வாயுவானது வஸ்திரம், சந்தனம், ஸ்திரீ, புட்பங்களென்னும் வஸ்துக்களின்மேல் சுதா தாக்குறினும் அவ்வப் பொருட்களின் மயமாகாது என்றும் பரிசுத்தமாய் வேறுப் நிற்றல்போல, சாதுக்களும் விடயபோகங்களை யருந்துங்காலத்து அவையிற்றின் வயமாகாது தாமரை இலைமேற் படிந்திருக்கும் நீர்

த்துளியைப்போல வேறுகவே சம்பந்தமற் றிருப்பார்கள். காற்ருனது, சுகந்தத்தின்மீது வீசின் சுகந்தம் வெவ்வேரு வேளையில் வரும். அதனிடம் விருப்பமில்லாதபோது தோன்ருது. அதுபோலவே ஆத்மாவை அறிந்த சாதுக்கள் தேகாதிகளுட னிருந்தாலும் தேக குணுஸ்ரயங்கள் அவைக்கவையே அனுபவிக்கின்றன. தேக இலக்ஷியத்தைப் பொருந்தாதால் ஆத்மாவுக்கு அவைதோன்ரு. சர்வ பதார்த்தங்களில் ஆகாயம் வியாபித்தாலும் அலிப்தமாயிருத்தல்போலச் சாதுக்களுக்கும் ஆத்மஸ்திதி அப்படியே யாகும்.

## ௯ - ஆகாயம்.

శ్లో॥ అంతర్హితశ్చస్థిరజంగమేషు బ్రహ్మాత్మభావేనసమన్వయేన ।
వ్యాప్త్యావ్యవచ్ఛేదమసంగమాత్మనో మునిర్నభస్త్వం వితతస్యభావయేత్॥ 18.

தா.—அசங்கத்வம், அபேதத்வம் நிர்மலத்வம் ஆகிய இவைகள் ஆகாயத்தின் குணங்களாம். ஆகாயத்திற்கு விஷயத்தில் சமத்வமிருந்தும் அசங்கத்வ முண்டாகிப் பேதமின்றி அபேதத்துடனிருப்பதால் ஆகாயத்தைக் குருவாகச் செய்துகொண்டேன். பாம்புக்கும் கீரிக்கும் பகையுண்டு ஆகாயம் இவ்விரண்டிற்கும் இருதய வாசகமாக விருக்கிறது. ஆகாயத்திற்குப் பகையும் உறவு மில்லாததுபோலப் பிரபன்னர்களுடைய ஸ்திதியும் அப்படியே யிருக்கவேண்டும். ஆகாயம் எல்லாவற்றையும் வியாபித்திருக்கிறதுபோலப் பரமாத்மாவின் வியாபகத்தைச் சாதுக்கள் பிரம்மபாவனையால் நோக்கவேண்டும். ஆகாயம் எல்லாப் பதார்த்தங்களி லிருந்தாலும் அதனிருப்பு எல்லாருக்குந் தோன் றுவதில்லை. அவ்வண்ணமே பிரபன்னர்கள் தரிசன திரிசியங்களுக் கதீததசையிலிருப்பார்கள். ஆகாயத்திற்குச் சலத்தினுலும் அக்னியினுலும் விச்சின்னம் நேரிடாது. அப்படியே சாதுக்களும் துவந்தாதீதர்களா யிருப்பார்கள். ஆகாயம் ஒரு பெரிய மடுவில் மூழ்கி யிருப்பதுபோல் தோன்றினும் அம் மடுவின்னீரால் அது நனைக்கப்படுவதில்லை. பிரபன்னர்களும் தேகாதி விஷயங்களில் மூழ்கியவர்கள்போலத் தோன்றினும் அவைகளில் தாக்கற் றிருப்பார்கள். துஷ்டர்கள் ஆகாயத்திற்கு மை பூச முயல, ஆகாயம் அம்மாலின்யத்தை யடையாது தங்கள் கை மையாவது போலச் சாதுக்கள்மேல் குணதோடங்கள் ஒருவன் கூற யத்தனித்தால் அக்குணதோடங்கள் அவனைப் பொருந்துமே யல்லது சாதுக்களைப் பொருந்தா. சமஸ்த ஜனங்கள் ஆகாயத்தினுள்

ளடங்கி யிருந்தாலும் அவர்களின் குணம் ஆகாயத்தில் ஒட்டுவ தில்லை. இவ்வாறே சகல கர்மங்கள் பிரபன்னர் செய்யினும் அக்கர் மங்களின். பலாபலன்கள் அவர்களைச்சேருவதில்லை. கடத்திலிருக்கும் ஆகாசத்தைக் கடாகாசம் என்று நவில்வர். கடத்திற்கு வெளியில் பார்க்கில் ஆகாய மெங்கும் நிறைந்திருக்கின்றது. இவ்வண்ணமே தேகத்திலிருக்கும் சைதன்னியம் ஆத்மாவென்று சொல்லப்படும். இந்தத் தேகத்தை மித்தியாரூப அநித்யத்தால் பரிணம முடையதாகப் பார்க்கின் பரமசித்தே பரிபூரணமாய் விளங்கும்.

శ్లో॥ తేజోబన్నమయైర్భావై ర్మేఘాద్యైర్వాయునేరితైః ।
న స్పృశ్యతే నభస్తద్వ త్కాలసృష్టైర్గుణైః పుమాన్ ॥ 19.

தா.—பிரிதிவு, அப்பு, தேயு, வாயுக்களின் விகாரங்கள் ஆகாயத்தை யடையா. இடிமுழக்கம் ஆகாயத்தி லுண்டாயினும் ஆகாயம் அலிப்தமாகவிருக்கும். அப்படியே சாதுக்கள் ஆத்மசமரசத்திலிருப்பதினால் பிரகிருதியினா லுண்டாகும் குணங்களுக்குவேறாகவேயிருப்பார்கள். சிந்தாமணிகிடைத்ததாகவும், பிறகு அது பாழ்ங்கிணற்றில் வீழ்ந்ததாகவும் ஒருவன் சுவப்பனங்கண்டு பிறகு சாக்ரா அவஸ்தையில் அதைப்பற்றிச் சிந்திக்காததுபோல, ஆத்ம இக்ஷியத்தையடைந்த ஒரு பிரபன்னன் தனது தேக சங்கத்தைப்பற்றிச் சிந்தியான். தேகத்திற்கு நைஜமான ஜாராமரணங்களையும் நோக்கான். தேகங்களுக்குப் பிறப்பு இறப்புக்களையுண்டாக்கும் மிகு சாமர்த்தியமுள்ள காலன் பிரமாதிதேவர்களைப் பக்ஷிப்பவனானாலும் சாதுக்கள் அடிபணிவான். மின்னலொளி ஆகாயத்தில் பிரகாசித்தபோதிலும் ஆகாயம் அதினால் பேதிக்கப்படுவதில்லை. அவ்வாறே சத்வகுணத்தால் பிரகாசிக்கப்படும் ஞான விருத்தியினால் யோகிகள் சலனமடையார். யோகிகள் விஞ்ஞான சுவரூபிகளாதலால் ஞான விருத்தியையும் கைக்கொள்ளார். சூரியோதயமான பிறகு தீபவொளி அனாவசியமாவது போலச் சகசானந்தம் கை வந்தபிறகு ஞானவிருத்தி எற்றிற்கு? சத்வகுணம் ஸ்வஞானத்தைப் பிரகாசிப்பிக்கிறபடியால் சாதுக்கள் அக்குணத்தையும் கைக்கொள்ளார். ரஜோகுணம் வந்தடையினும், அவர்கள் கர்மநிஷ்டராகார்கள்; ஒருவேளை தமோகுணம் பொருந்தினும், சுவானந்தபோதமென்னும் கல்லோலத்தில் ஆழ்ந்திருப்பவர்களாதலால் குரோத மோஹங்களால் கலங்கார்கள்.

## ௬-ஜலம்.

శ్లో॥ స్వచ్ఛః ప్రకృతితః స్నిగ్ధో మాధుర్యస్తీర్థభూనృణాం ।
మునిః పునాత్యపాంమిత్ర మీక్షోపస్పర్శకీర్తనైః ॥ 20.

தா.—ஜலத்தின் சுபாவம் நிர்மலம். ஜலம் பொருட்களின் அழுக்கைப் போக்கி நிர்மலமாகச் செய்தபோதிலும் நான் அழுக்கைப் போக்கினேனென்று அகங்கரிக்கிறதில்லை. அதுபோலவே சாதுக்கள் சத்பாவத்தால் தங்களை யாச்ரயிப்போருடைய அஞ்ஞான மலினத்தை நீக்கியபோதிலும் தாங்கள் பெரியர் என்னும் அகங்காரத்தை மேற்கொள்ளார். தங்களிடத்தில் வரும் எல்லாருடனும் சாதுக்கள் சாந்தத்தை வகித்து இனிய வசனங்களுடன் சம்பாஷிப்பரேயன்றி வன்சொற் கூறார். நீரின் சுவபாவம் படிந்திருக்கும் மலினத்தை நீக்குமே யல்லது மறுபடியும் மலினம் அணுகாவண்ணஞ்செய்யச் சக்தியற்றது. ஆனால் சாதுக்களோ, கிருபா நோக்கினால் தம்மைத் தஞ்சமென வடைந்த ஜீவர்களின் அஞ்ஞான மலத்தைத் வேரோடே களைந்து இன்னொருதரம் முளைக்கவொட்டாமற் செய்ய வல்லமையுள்ள புனிதர்கள். தண்ணீர் ஏதோ ஒருவேளை சுகத்தைத் தந்து ரசனேந்திரியத்திற்கு மாத்திரம் மதுரத்தை யுண்டாக்குகிறது. பிரபன்னர்கள் அவ்வாறன்றி எக்காலத்தும் சர்வேந்திரியங்களுக்கும் ஆனந்தத்தை யளியாநிற்பர். தண்ணீ ரருந்தித் தாகம் நீங்கியபின் ஜீவர்கள் தாகத்திற்காக ஜலத்தைக்கோரார். ஆனால் பிரபன்னர்கள் கொடுக்கும் சுகம் பவரோகந் தீர்ந்துபோவதுடன் அச்சுகத்திலேயே இடையறாது விருக்கச்செய்யும். மேக மூலமாக நீர் பூலோகத்தில் விழுந்து சகலருக்கும் உபயோகமான அன்னத்திற்குக் காரணமாகிறதுபோலச் சாதுக்கள் இகலோகத்தில் அவதரித்துச் சிரவண கீர்த்தனங்களைச் செய்வித்து நிஜஞானத்தால் உலகத்தை யுத்தரிக்கிறார்கள். கங்கை முதலான தீர்த்தங்களின் தரிசனத்தால்பாபவிமோசனமாகிறது. பிரபன்னர்களுடைய தரிசனம் பாக்கியோதயமின்றி நேரிடாது. யாரொருவருக்குச் சாதுக்கள் திருவடி தரிசனம்சிக்குமோ அவர்களுடைய பவரோகம்அக்கணமே நீங்கிவிடும். சாதுக்கள் தரிசன ஸ்பரிசனங்கள் லபிக்காவிடில் அன்னோரது நாமத்தையாகிலும் ஸ்மரிக்க வேண்டும். நாமஸ்மரணை எங்ஙனம் பவபந்தங்களைத்தொலைக்குமெனச் சங்கித்தல் கூடாது. ஏனெனில் பூர்வத்தில் தேவனுக்குப் பெயரில்லாதிருந்தது. அவரிடம் அன்புகொண்ட பக்தர்கள் நாமரூபாதிசர்வ விலாசங்களையும் தேவனிட மற்பித்தனர். அந்தப் பக்தர்களின் பக்தியே வைகுண்டத்தை ஏற்படுத்தி அதில் பகவானை மேன்மையாக எழுந்தருளச் செய்திருக்கின்றது. ஆதலால் பகவான் பக்தர்மீதிருக்கும் பேரன்பினால் அவர்கள்மதிப்புக்குறையாவண்ணம் அவர்களைப் பரிபாலித்து வருகிறார். அதற்கு நிதரிசனமாகப் பக்த

ஞைபிரகலாதாழ்வான் சொல்லைப் பரிபாலிக்கப் பகவான் நரசிம்ம வடிவங்கொண்டு ஸ்தம்பத்தி னின்றுவெளியே வரவில்லையா? பிரத்தியக்ஷப் பிரமாணமாகப் பக்தர்களின் துதிக்கிணங்கி (பாஷாணபிரதிமைகளில்) அர்ச்சாவிக்கிரகங்களில் ஆவிர்ப்பவித்திருக்க வில்லையா? ஆதலால் பேரருளாளன் பக்தனைக் கன்னியப்படுத்துவதே தனது தொழிலென இருக்கிறுன் போலும்; இது சத்தியமாகலின் பக்தர்களுடைய நாமம் எங்கே யனுசந்திக்கப்படுகிறதோ அங்கே பக்தர்களின் உபகாரம் பிரயோஜனமாகும் பொருட்டும் அவர்களைக் கன்னியப்படுத்தும் பொருட்டும் பகவான் ஓடிவருவார். இவ்விதமாகப் பக்தர் நாமத்தைப் பஜிப்பவன் பவரோகந் துலையும்.

## ரு - அக்னி.

శ్లో॥ తేజస్వీ తపసా దీప్తో దుర్ధర్షోదరభాజనః ।
సర్వభక్ష్యోఽపి యుక్తాత్మా నాదత్తే మలమగ్నివత్ ॥ ௨௧.

தா.—அக்னி தன் தேஜஸ்ஸால் சர்வபக்ஷகனுய்ப் பிரகாசித்துத் தன்னைத் தீண்டவொட்டாம லிருக்கிறது. அவ்வாறே பிரபன்னர் பகவத்பாவனையால் தேஜஸ்ஸுடன் விளங்கியொருவனுக்கும்பிடிபடார். நெருப்புக்கு எந்தப்பிரகாரத்தால் முகமே பாத்திரமாகுமோ அப்படியே பிரபன்னர்கள் எடுத்தற்கும், வைப்பதற்கும் வேறுபாத்திரங்களில்லாதவர்களாய் உதரமாத்திரமா யிருப்பார்கள். அக்னியானது எல்லாப்பொருள்களையும் முன்பு எரித்துத் தன்னைப்போலச் செய்துகொண்டு பிறகு அவைகளைப்பக்ஷிக்கும் சந்தனம் முதலான வாசனைத்திரவியங்களையும், கைப்பு புளிப்பு முதலான சுவையுள்ள வஸ்துக்களையும் பக்ஷிக்கும். பிரபன்னன் தான் அங்கீகரிக்கும் பொருள்களினின்றும் ஆத்மதிருஷ்டியால் தோஷங்களைக்களைந்து நிஜபோதத்தால் ஸ்வீகரிப்பான். போக்கியவஸ்துக்களைப் போகிக்கிறகாலத்தில் ஆத்மபிரதீதியால் போக்தாவானவன் தத்ரூபமேயாவன். அக்கினியில் விழுந்த அழுக்கு அக்னிமுகத்தால் நிர்மலமாகிறது. பிரபன்னன் ஸ்வீகரிக்கும் எந்தவஸ்துவாயினும் பரம மங்களமாகின்றது. அக்னிமுகமாக யாகங்கள் லபிக்கின்றன. அவைகளால் அதிருஷ்டமான ஸர்வபோகங்களும் உண்டாகின்றன. பிரபன்னன் ஈவளீகரித்தவைகளுக்குப் பிரயோஜனம் ஹரிபதமாகும்.

శ్లో॥ క్వచిచ్ఛన్నః క్వచిత్ స్పష్ట ఉపాస్యః శ్రేయ ఇచ్ఛతాం ।
భుఙ్క్తే సర్వత్ర దాతౄణాం దహన్ ప్రాగుత్తరాశుభం ॥ 22.

தா.—ஓமகுண்டத்தில் நெருப்புப் பூர்த்திபாகச் செய்து யக்ய சாலையில் தேஜஸ்ஸுடன் பிரகாசமாகவிருக்க யக்கியம் செய்பவர்கள் தங்கள் யக்கியத்தைச் செய்வார்கள். எங்கெந்த உபாசகர்கள் தங்களிஷ்டப்படி எப்பொருட்டுப்பூஜிப்பார்களோ அந்தந்தப் பலன்களை முன்பின்னான ஆசுசித்வங்களை நீக்கி அவிஸ்ஸால் அடைகிறார்கள். அவ்விதமாகவே பிரபன்னர் தம்மிடத்தில் விசுவாசம்வைப்பவர்களுக்குக்காணப்பட்டு ஏனையோருக்குக்* குப்தர்களாயிருந்து கண்ணுக்குத் தோன்றார்கள். உண்மையான நம்பிக்கையுடன் எவ்வெவற்றை அர்ப்பிப்பாரோ அவைகளால் ஜனங்கள் முமுக்ஷத்வத்தையடைவார்கள். சாதுக்களுக்கு உணவுதந்தவர்கள் தங்கள் சஞ்சிதகிரியைகளைத்தும்வெந்து நிஜபதத்தில் சுகித்திருப்பார்கள்.

ஶ்லோ॥ స్వమాయయాసృష్టమిదం సదసల్లక్షణంవిభుః ।
ప్రవిష్ట ఈయతే తత్త త్స్వరూపోగ్ని రివైధసి ॥ 23.

தா.—அக்னிசகசமாக நிராகாரமானபோதிலும் காஷ்டானுரூபத்தால் நீண்டதாயும் உருளையாயும் விளங்குகின்றது. பகவத்பக்தியும் அத்தன்மையதே. ஈஸ்வரன் தனது மாயையால் கற்பிக்கப்பட்ட கற்பனாரூபத்தினால் வியக்தனாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். கங்கா ஜலத்தில் அலைகளும் கல்லோலங்களும் எப்படித் தோன்றுகின்றனவோ அப்படியே ஜகதாத்மா அகில ஜகதாகாரமாகப் பிரகாசிக்கிறான். சாயாமண்டபத்தில் சித்திரத்திற்குத் தீபப்பிரபை எப்படி விளங்குகின்றதோ அப்படியே நானாவிதங்களான ஆகாரங்கள் முதலானவைகளில் ஸ்ரீய:பதி பிரவேசித்துச் சகசமாக அவைகளை ஆட்டுவித்துக்கொண்டு வருகிறான். அவனைஇவ்வாறு ஏற்பாடானஸ்திதியை நோக்குமளவில் நானாகாரமான வியக்தி தன்னிடத்தில் பார்க்கச் சமவிருத்தி யுண்டாகிப் பேதபிராந்தியில்லாதிருக்கும்.

## சா - சந்திரன்.

ஶ்లో॥ విసర్గాద్యాశ్శ్మశానాన్తా భావాదేహస్య నాత్మనః ।
కలానామివచన్ద్రస్య కాలేనావ్యక్తవర్త్మనా ॥ 24.

தா.—வளர்பிறையிலும் தேய்பிறையிலும் சந்திரனுடைய கலைகள் விருத்தியும் குறைவுமடைகின்றன. ஆனால் நிஜ சந்திரன் உண்மையில் வளர்வதுமில்லை குறைவதுமில்லை. அப்படியே சாதுக்கள், ஜன்மஜராசாதி ஷட்விகாரங்கள் தேகத்திற்கென்றும், ஆத்மா நிர்விகாரியென்றும், கடம் சுபாவமாக நசித்துவிடுமென்றும், நீரிற் பிரதிபிம்பித்த சந்திரச்சாயை நீர் சலனமடையத் தானுஞ் சலனமடைவதேயன்றிப், பிரதான சந்திரன் விகார தோஷங்களின்றி நாசோத்பத்திரகிதனென்றும் நன்குணர்ந்து, தாங்கள் தேகத்தோடு கூடியிருப்பினும், ஜனனதுக்கமும், சரீரம்போனால் மரணதுக்கமுமடையாதிருப்

* மறைவாகயிருத்தல்.

பர். காலன் நாசோத்பத்தியை யுண்டாக்குபவனாதலால் தேகத்தினிடத்து அவன் சாமர்த்தியஞ் செல்லுமல்லது ஆத்மஸ்திதிக்கு அவன் கர்த்தனாகான்.

శ్లో॥ కాలేనహ్యోఘవేగేన భూతానాంప్రభవాప్యయౌ ।
నిత్యావపినదృశ్యేతె ఆత్మనోగ్నెర్యథార్చిషాం ॥ 25.

தா.—காலபுருடன் என்னும் நதி மகாவேகமுடையது. அது சூக்ஷ்மமாகப் பிரவகிக்கும்போது (ஐம்) பூதங்களென்னும் அலைகளையுடைய ஜன்மங்களைப் பங்கப்படுத்தும். பால்யம், யௌவனம் வார்த்திக்கியங்களால் ஜனன மரணங்களென்னுங் கல்லோலங்கள் பாய்ந்து கொண்டிருக்கும். ஆயுளின் குறைவால் சுவர்க்காதி உலகங்கள் நசித்துப் போகின்றன. இந்திரனும் இறந்துபோவான், பன்னகங்கள் பாதாளத்தில் பங்கமாகின்றன. இவ்வண்ணம் காலம் என்னும் நதியின் வேகத்தால், இந்திராதிதேவர்களும் அங்கபங்கங்களுற்று அல்லும் பகலும் அல்லலுக் குட்பட்டவராவார். மகாப் பிரளயத்தில் பிரம்மாதிகளும் அப்பிரவாகத்தில் சிக்குறுவர், காலனுடைய சூக்ஷ்மகதியை யுலகத்தவர் கவனிக்கிறதில்லை. பால்ய யௌவன வார்த்திகத்தால் பிரத்தியக்ஷமாக நமது தேகத்தைக் காலன் தன்வயப்படுத்திக் கொண்டிருப்பதால் அவன் எக்கணமாயினும் அதற்கு நாசமுண்டுபண்ணும் வல்லமை யுள்ளவனென்று உலகத்தார் காண்கிறதில்லை.

## எ - சூரியன்.

శ్లో॥ గుణైర్గుణానుపాదత్తె యథాకాలంవిముంచతి ।
నతేషుయుజ్యతెయోగీ గోభిర్గాఇవగోపతిః ॥ 26.

தா.—சூரியன் தன் கிரணங்களால் ஜலத்தை ஆவியாக்கி மேலேறச் செய்வித்துப் பிறகு அதை உலகத்தாருக்கு வருஷமாகப் பொழிவிக்கவும் செய்கிறான். ஜலத்தை ஆவியாக்கிய லக்ஷணம் அப்போது யாவருக்கும் புலப்படுவதில்லை. மழை தாரைதாரையாய் வருஷிக்குங் காலத்தில்தான் அவ்விஷயம் புலப்படுகின்றது. இவ்வாறே யோகிகளும் உலகோரிடத்துத் தாம் பெற்றவை அற்பமாயினும் வெகுமுகமாக அவர்களிடத்து, அவர்கள் மனோரதத்தைப் பூர்த்திசெய்வார்கள். சாதுக்கள் ஆத்மாராமராகி எவருடைய பிரசாதத்தைச் சேவிப்பாரோ அவருடைய கர்மங்களைப் பூர்த்திசெய்து முடிவில் நிஷ்காமத்தை அவலம்பிக்கச்செய்து அவரை மோக்ஷத்திற்குக் கொண்டுபோவார்கள். இவ்வண்ணம் தமது யோகபலத்தால் இந்திரியங்களுடைய மூலமாக விஷயங்களைச் சேவித்துக் கிருபாபலத்தால்

உலகினர்க்கு எதை யளிப்பரோ அது அபிவிர்த்தியடையும் சாதுக்களுக்கு எதைக்கொடுத்தபோதிலும் அல்லது அவர்களிடத்திலிருந்து எதைப் பெற்றுக்கொண்டபோதிலும் சூரியன், ரஸத்தை வற்றச் செய்து பின்பு கொடுக்கும்போது அலிப்தனுயிருப்பதுபோல்ச் சாதுக்களும் ஆசக்தி யுடையவர்களா யிரார்.

ஶ்లో॥ బుధ్యతేస్వ్యనభేదేన వ్యక్తిస్థయివతద్గతః ।
లక్ష్యతేస్థూలమతిభిరాత్మాచావస్థితో౽ర్కవత్ ॥ 27.

தா.—ஒரு தடாகத்தில் சூரியப் பிரதிபிம்பம் தோன்ற அதைப் பாமரர்கள் கண்டு சூரியன் தண்ணீரில் மூழ்கிவிட்டான் எனக்கூறுவர்கள். யோகியினிடத்தில் தேககிர்த்தியங்கள் கண்டு அந்தயோகி விஷயங்களில் மூழ்கியிருக்கின்றுனென உலகினர் அபிப்பிராயங் கொள்ளுகின்றனர். இது தவறு. தேகபுத்தி சாதுக்களுக்கில்லை. சூரியப் பிரதிபிம்பம் சலத்தில் தோன்றிச் சலம் சலனமடையத் தானும் சலனமடையுங்கால் சூரியன் சலனரகிதனுய் விளங்கி நிற்றல்போல் தேகத்தில் பிரதிபிம்பிக்கும் ஆத்மச்சாயை தேகத்திற்குறிய சுகாசுகங்கள் வரத் தானும் அவைகளைப் பொருந்துங்கால் யோகி சலனமுருது அவைகளுக்கு அன்னியத்தைச் சாதித்து வருவான், யோகிகள் தேகதர்மத்தைப் புரியினும் அவர்கள் விஷயங்களுக்குக் கட்டுப் பட்டிருக்கின்றூர்களென்று மூடர்கள் தம்முடைய புத்தி பேதத்தால் பிதற்றுவார்கள். யோகியினுடைய அபாதிதலக்ஷணமான மர்மஞான மவர்களுக்குத்தெரியாது. இம்மேதினியில் கயிற்றின்பாம்பால் கடிபட்டு மாண்டவர் எவராகிலும்உளரோ? இலர். இவ்விதமாகவே ஆத்மா ஞானகாரமாகஇருக்கிறது. மித்தையான சுபாவத்தால் தேகம் மித்தையாகிக் கர்மமூலமாய்ப் பிம்பாகாரமாகத் தோன்றுகிறது. இது அதிஷ்டானத்திற்குப் பாதகமாகாது. ஒருவன் தனது பிம்பத்தைநீரிற் காணில் தான் நீரில் மூழ்கிவிட்டதாகச் சொல்லவொண்ணுது. அதுபோல யோகியும் தேசாதீதமான ஞானரூபியாகையால் தேககர்மங்களில் மூழ்கிவிட்டானென் றுரைத்தல் தகாது. கானனீர் பூர்த்தியைச்கண்டு மூர்க்கன் கரைகடக்கவோடுவதுபோல மித்தையான இந்தச் சம்சாரத்தைக் கண்டு மூர்க்கன் பயப்படுகிறுன், ஆதலால் மண் பொன் பெண்டு பிள்ளை இவைகள் விஷயத்தில் பிரீதி செலுத்தவொண்ணுது.

அ - புருப்பக்ஷி:

ஶ్లో॥ నాతిస్నేహఃప్రసంగోవాకర్తవ్యఃక్వాపికేనచిత్ ।
కుర్వ్వన్ విందేతసంతాపంకపోతయివదీనధీః ॥ 28.

தா.—சம்சார துக்கத்திற்குப் பீசம்முக்கியமாய் மாதர்மேல் கொள்ளும் ஆசையேயாம். மனிதர்கள் மாதர்மீது மோகங்கொள்வதனுல் மக்கள் ஜனிக்கின்றனர். இவர்கள் மீது ஏற்கனவே காதல் மிபயப்பைய வளருந்தோறும் சுவதந்தரம் குறைந்து பந்தத்திற்குட்பட்டு நாசமடைகிருர்கள். இவ்விஷயத்தைக் கபோதத்தின் கதை நன்குவிளக்கும்.

శ్లో॥ కపోతఃకశ్చనారణ్యేకృతనీడోవనస్పతౌ ।
కపోత్యాభార్యయాసార్ధమువాసకతిచిత్సమాః ॥ 29.

தா.—ஆண்புருவுக்கும் பெண்புருவுக்கும் ஜனிக்குங்காதல் மிக வியக்கத்தக்கதாகும். ஒரு ஆண்புருவும் பெண்புருவும் ஓர் வனத்தில் தருந்த விருக்ஷத்தைத் தக்கபடிகண்டு அதின்மேல் நெடுநாள் வாசஞ் செய்துகொண்டிருந்தன.

శ్లో॥ కపోతౌస్నేహగుణితహృదయౌగృహధర్మిణౌ ।
దృష్టిందృష్ట్యాంగమంగేనబుద్ధింబుద్ధ్యాబబంధతుః ॥ 30.

தா.—இவ்விரு புருக்களுக்கும் ஒன்றன்மீது ஒன்றற்கிருந்த காதலிற்கு அளவு கூறுதலிசையாது. விலாசஸ்திதியால் ஒன்றையொன்று உன்னதோன்னதமாகப் பார்த்துக்கொண்டும் பாஸ்பரமாகக்கிரீடைகள் புரிந்துகொண்டும், பிரத்தியேகமாக வேறுவேருவதற்கு மனம்வராமல் ஒருபிராணனைப்போல இரண்டும் இணைபிரியாமல் இரைதேடும்.

శ్లో॥ శయ్యాసనాటనస్థానవార్తాక్రీడాశనాదికం ।
మిథునీభూయవిస్రబ్ధౌ చేరతుర్వనరాజిషు ॥ 31.

தா.—இவ்விதமாக இரைதேடுங்கால் பேடைக்குமதுரமான உண்டி அகப்படில் அதைத்தன் கணவனுக்குக்கொண்டுபோய் அருந்தக்கொடுக்கும், ஆண்புரு தன்மனைவியை விட்டு வெகுதூரஞ் செல்லாது. இவ்விரண்டு பக்ஷிகளும் பாஸ்பரமாக எஞ்ஞான்றும் இடைவிடாது, தங்கள் கூட்டினும் கூட்டுக்கயலினும் இணைபிரியாது தனியிடத்தே தங்கி விநோதமான ஆட்டங்கள் ஆடிக்கொண்டும், இனிய மொழிகளை வசனித்துக்கொண்டும், ஒன்றின்மேலொன்று பரந்துகொண்டும், ஒரு படுக்கையில் சயனித்தும் இரவும் பகலும் தனியிடமிருந்து மைதுனசுகவைபவ விஸ்வாசத்தினுல் ஜீவபாவத்தின் ஹிதாஹிதங்களை நோக்காது விஷய சம்பிரமத்தால் வனத்தில் வசித்துக்கொண்டுவந்தன.

శ్లో॥ యంయంవాంఛతిసారాజం స్తర్పయంత్యనుకంపితా ।
తంతంసమనయత్కామం కృచ్ఛ్రేణాప్యజితేంద్రియః ॥ 32.

தா.—பெண்புறு தனக்கு மதுரமான உணவு கிடைத்தால் அதைத்தன் கணவனுக்குஅவன் கேட்குமுன்னமே கொண்டுபோய்க் கொடுக்கும், ஆண்புறுவும்அப்படியே அன்னியோன்னியமாய் நடந்து கொண்டுவந்தது. தருமத்தைப் பாராமலும் தீனர்களிடம் தயை வையாமலும், ஸ்திரீயினிடமே கிருபைசெய்து, ஜீவனும் பிராணனும் போல ஆண்பக்ஷி வாழ்ந்துவந்தது, சர்க்கரைக் குவியல்மேல் ஈக்கள் உட்காரின் அவைகளையடித்து ஓட்டுவர் - அப்படி அடித்து ஓட்டும் பொழுது உயிர்க்கு ஹானிநேரிடினும் அதைநோக்காது மீண்டும் மீண்டும் சர்க்கரைச்சுவை வேட்டுண்ணப்புகுந்து தங்களுக்குவரும் ஹானியைக்கவனிக் காததுபோலத் துக்கமளிக்கும் விஷயங்களைப் போகிக்கும்போது அவைகளால்வரும் ஜராமரணங்களை நோக்குவ தில்லை. முன்னோர்களுடைய வாக்கியங்களைச் சத்திவவான்கள் பிரயாசையுடன் பரிபாலிப்பதுபோல மாதர்சுகத்தை உலகத்தார் பெரும்பாலும் பரிபாலிக்கிறார்கள். ஆதமோபரசகர்க்கு அநன்னியார் ஹசேஷத்வம் பொருந்துமாப்போல உலகத்தோர் மாதரைத் தவிர வேறு சுகத்தைவிரும்பார்.

శ్లో॥ కపోతీప్రథమంగర్భం గృహ్ణతీకాలఆగతే ।
అండానిసుషువే నీడేస్వపత్యుఃసన్నిధౌసతీ ॥ 33.

தா.—இவ்வாறு இப்புறுக்களிரண்டும் இன்பக்கலவிகளுடன் ஜீவித்துவருநாளில் பெண்புறு கர்ப்பிணியாயிற்று. கர்ப்பிணியாகவே, உலோபிக்குத் திரவியம் அகப்பட்டாற்போல இப்புறுக்களுக்கு ஒன்றின்மீது ஒன்றிற்கு இருந்தகாதல் மிகுதியாயிற்று. மதுபானம்பண்ணின மற்கடம் கூத்தாடுவதுபோல, பெண்புறு கர்ப்பசம்பிரமத்தைத் தன் கணவனுக்குக் காண்பித்துக்கொண்டு லீலாவினோதங்களுடன் தன் பர்த்தாவுடன் வாழ்ந்து வருநாளில் பிரசுவகாலம் நெருங்கியது. பேடுமுட்டைகளிட்டது. அதைக் கண்ணுற்ற ஆண்புறு மிகச் சந்தோஷத்தை யடைந்தது.

శ్లో॥ తేషుకాలేవ్యజాయంతరచితావయవాహరేః ।
శక్తిభిర్దుర్విభావ్యాభిః కోమలాంగతనూరుహాః ॥ 34.

தா.—ஸ்ரீஹரியினுடைய மாயை அபாரசாமர்த்தியத்தை யுடையது. இரசம்நிறைந்த அம்முட்டைகளின்மேல் இறக்கைகளின் சூடு தாங்கத் தாங்க அந்த இரசம் குஞ்சுருக்கொண்டு காலவடைவில் அம்முட்டைகளினின்றும் கோமலதேகத்துடன் வெளியே வந்தன. இவைகளை அந்தக்கபோதங்கள் கண்டு அகமகிழ்ந்தன.

శ్లో॥ ప్రజాఃపుపుషతుఃప్రీతౌ దంపతీపుత్రవత్సలౌ ।
శృణ్వంతౌకూజితంతాసాం నిర్వృతౌకలభాషితైః ॥ 35.

தா.—அதிககோமலமான குழந்தைப் பருவத்திலிருக்குங் குஞ்சுகளை இந்தப் புருக்க ளினியமொழிகளால் சந்துஷ்டிசெய்து, அவைகளின்மீது அத்தியந்த காதல்வைத்திருந்தன. எச்சமயத்தில் என்னென்ன அக்குஞ்சுகளுக்குக் கொடுக்கவேண்டுமோ அதனை ஊட்டி அவைகளி னினிய கூக்குரலைச் செவிசாற்றி மிகக் களிப்படைந்து வந்தன.

శ్లో॥ తాసాంపతత్త్రైస్సుస్పర్శైః కూజితైర్ముగ్ధచేష్టితైః ।
ప్రత్యుద్గమైరదీనానాం పితరౌముదమాపతుః ॥ 36.

தா.—இப்புருக்கள் குஞ்சுகளினுடைய ஆலிங்கனத்தாலும் ஸ்பரிசத்தாலும்மிகச் சந்தோஷமடைந்திருந்தன. குஞ்சுகள் தங்கள் முன் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்க்கக் களிப்புற்றும் இரை கொடுத்தும் அவைகள் தூரம் சென்றிடில் அவைகளைத் தங்கள் கூட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தும் தீனத்தன்மையுடைய அவைகளுக்கு யாதொரு தீங்கு மணுகவொட்டாமல் அவைகளை முத்தமிட்டும் இரக்ஷித்து வந்தன.

శ్లో॥ స్నేహానుబద్ధహృదయావన్యోన్యంవిష్ణుమాయయా ।
విమోహితౌదీనధియౌశిశూన్పుపుషతుఃప్రజాః ॥ 37.

தா.—விஷ்ணுமாயையால்இப்புருக்களுக்கு வியாமோஹம்உண்டாகி அக்குஞ்சுகளின் மேலிருந்த சினேகபலத்தால் அப்புருக்களின் இருதயங்கள் அன்யோன்யம் கட்டுண்ணப்பட்டவையாகி அவைகளைப் போஷித்து வந்தன. ஆண்புருவுக்குத் தன் பெண்டு பிள்ளைகளின் மேல் மோகம் மிகுதியாயிற்று. இவைகளைக் காப்பாற்ற வேண்டுமென்னும் கிலேசம் தன் உட்புகுந்தபடியால் இரைதேடும் பொருட்டு அலைந்து திரியும்.

శ్లో॥ ఏకదాజగ్మతుస్తాసామన్నార్థంతౌకుటుంబినౌ ।
పరితఃకాననేతస్మిన్నర్థినౌచేరతుశ్చిరం ॥ 38.

தா.—குஞ்சுகள் வளரவளர இரை அதிகம் சம்பாதிக்கவேண்டியதாயிருந்தது. இதனால்இல்லறதர்மம் நடத்துவதில் ஆணும்பெண்ணும் அனுதாபத்துடன் ஒவ்வொருவேளையி லிவ்விரண்டும் இரைக்காகச் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. போதுமான இரை அகப்படுவதில்லாமையால் வேறுவனங்களிலும் வெகுதூரம் சென்று அலைந்து கூட்டிற்கு நேரஞ்சென்று வருவதுண்டு. இவ்வாறு தங்கள் ச்வகீய போஷணையைக் குறைத்துக் குஞ்சுகளுக்கு வேண்டுமளவு கொடுத்து அவைகளைக் காப்பாற்றிக்கொண்டு வந்தன.

శ్లో॥ దృష్ట్వా తాన్ లుబ్ధకః కశ్చిద్యదృచ్ఛాతో వనేచరః ।
జగృహే జాలమాతత్య చరతః స్వాలయాంతికే ॥ 39.

தா.—ஒருநாள் இந்த இரண்டு புறாக்களும் வேண்டுமளவு இரை அகப்படாமையாலும் வெகுதூரம் காட்டிற்குள் பிரவேசித்து இரைதேடிக்கொண்டிருந்தமையாலும் கூட்டிற்கு வரநேரமாயிற்று. அப்போது குஞ்சுகள் பசியால் பீடிக்கப்பட்டவைகளாகி வெளியே வந்து சிரமை பட்டுக்கொண்டிருந்தன. அத்தருணத்தில் பக்ஷிகளைப் பிடிப்பதில் சாமர்த்தியமுள்ள ஒருவேடன் தன் வலையை வீசி அவைகளைப் பிடித்துக்கொண்டான்.

శ్లో॥ కపోతశ్చ కపోతీ చ ప్రజాపోషే సదోత్సుకౌ ।
గతౌ పోషణమాదాయ స్వనీడముపజగ్మతుః ॥ 40.

தா.—சற்றுநேரத்திற்குள்ளாக வெளியே சென்றிருந்த ஆண் புறாவும் பெண்புறாவும் மிகச் சிரமையுடன் இரையை எடுத்துக்கொண்டு பேரன்புடன் கூண்டை சமீபித்தன. பெண்டிராசை துக்கத்திற்கு மூலகாரணமாகும். அவர் கூட்டுறவால் பிள்ளைகள் பௌத்திரர்கள் ஜனிக்கிறார்கள். இதனால் புருடனுக்கு வருந்துன்பம் எவ்வளவு என்று நான் கூறுவேன்.

శ్లో॥ కపోతీ స్వాత్మజాన్ వీక్ష్య బాలకాన్ జాలసంవృతాన్ ।
తానభ్యధావత్క్రోశంతీ క్రోశతో భృశదుఃఖితా ॥ 41.

தா.—குஞ்சுகள் வலையிற் சிக்கிக்கொண்ட வஸ்தைப்படுவதைப் பெண்புறா பார்த்தவுடனே தன் தலையை மோதிக்கொண்டு புலம்பியது. வலையில் அழுதுகொண்டிருக்கும் குஞ்சுகளின் அருகில் அடிக்கடி சென்று ஆராமையான துக்கத்துடன் புலம்பிக்கொண்டிருந்தது.

శ్లో॥ సాసకృత్స్నేహగుణితా దీనచిత్తాజమాయయా ।
స్వయంచాబధ్యతశిచాబద్ధాన్పశ్యంత్యపస్మృతిః ॥ 42.

தா.—தன் பர்த்தாவுக்குத் துக்கத்தைக் கொடுக்கும்பொருட்டு ஆக்கிரந்தத்தால் அழுதுகொண்டு அப்புருஷபக்ஷிக்கு துக்கம் நூறு பங்கதிகமுண்டாகும்படி அதனிடஞ் சென்று யழைத்துவந்து வலையிலகப்பட்டிருக்கும் குஞ்சுகளைக் காண்பித்து அதற்குப் புத்திரசோகத்தால் பைத்தியத்தை யுண்டாக்கியது. பிறகு தானும் நன்மை தீமையைப் பாராமல் மாயாமோஹத்தால் பலாத்காரமாக வலைக்குட் சென்று குஞ்சுகளிருக்கு மிடத்தில் விழுந்தது.

శ్లో॥ కపోతశ్చాత్మజాన్ బద్ధానాత్మనోఽప్యధికాన్ ప్రియాన్ ।
భార్యాం చాత్మసమాం దీనో విలలాపాతిదుఃఖితః ॥ 43.

தா.—தனது மனைவியும் குஞ்சுகளும் தற்செயலாய் வலையில் அகப்பட்டுக் கொண்டதைக் கண்ணுற்ற அந்த ஆண்புரு துக்கசாகரத்திலாழ்ந்து தனது பிராணனைக் காட்டிலும் பிரியமான பாலகர்களும் அனுகூலரூபமாய் தன்மசமமான மனைவியும் இறந்துபோவதை ஆராமையான துக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது.

శ్లో॥ అహో మే పశ్యతాపాయమల్పపుణ్యస్య దుర్మతేః ।
అతృప్తస్యాకృతార్థస్య గృహస్త్రైవర్గికో హతః ॥ 44.

தா.—அறம்பொருளின்பங்களுக்காதாரமான கிரகஸ்ததருமம் காமதிருப்தி குறைவாகிப் பங்கமுற்றது. பூர்வஞ்செய்த துஷ்கர்மவிதியினால் நான் கிருதார்த்தனாகாமல் போயினேன். திரிவர்க்கமில்லாமற் போயிற்று நான்காம் புருஷார்த்தம் மிகுந்திருக்கிறது, ஆசிரம தர்மம் போனாலென்ன. இந்த நான்காம் புருஷார்த்தத்தை யடைவதற்குச் சித்தத்திலிருக்கும் விஷயவாசனையை மறித்தல்வேண்டும். நான் பூர்வத்தில் அற்ப புண்ணியத்தைப் புரிந்திருக்கவேண்டும். அதினாற்றான் என்னுடைய இல்லறதர்மம் இவ்வாறு குறைவுற்றது. பரலோகசாதனத்தை யடையவும் சக்கியமற்றிருக்கிறேன்.

శ్లో॥ అనురూపానుకూలా చ యస్య మే పతిదేవతా ।
శూన్యే గృహే మాం సంత్యజ్య పుత్రైః స్వర్యాతి సాధుభిః ॥ 45.

தா.—ஸ்திரீ புருஷருடைய சுபாவங்கள் தர்ம பிரவிர்த்தியில் அனுகூலமாயிருக்குமாயின் பரலோகசாதனமாம். இவ்வாறன்றிஸ்திரீயானவள் தன்கணவனைத் துரோகஞ்செய்து வெளிப்பட்டாளாயினும், அதிக சண்டாளியாக விருக்கினும், குரோத முதலிய குணங்களை உடையவளாயிருந்தாலும், வாயாடியாக விருந்தாலும் சுகுமாரியாய் விலாசினியாயிருந்தாலும் இல்லறம் சீருற நடத்த முடியாதாகையால் அந்த ஸ்திரீ புருஷருக்குப் பரலோகஞ் சித்திக்காது. என் மனைவி யோ இத்யாதி துர்க்குணங்களையுடையவளல்லள். இல்லறதருமம் நடத்துவதில் எனக்கு அனுகூலமாகவே யிருந்தாள். அவள் தர்மகுணமுள்ளபத்தினியாகையால் என் தர்மசிந்தனை யாவற்றையும் ஆதரித்து வந்தாள். என்னையன்றி அவள் வேறு தெய்வத்தைக் காணவில்லை. என்னை விட்டு ஜலபானமும் செய்யாள். என் சொற்குமீறி நடவாள். இல்லறதர்மத்திற்கு அனுகூலமான இத்தகைய நற்குணங்களைப் பொருந்திய என்மனைவி புத்திரசகிதமாக என்னையும் இல்லறத்தையும் விட்டேகிச் சுவர்க்கம் புகுந்தனளே! ஆ! கெட்டேன்.

ஶ்லோ॥ సోఽహంశూన్యేగృహేదీనో మృతదారోమృతప్రజః ।
జిజీవిషేకిమర్థంవా విధురోదుఃఖజీవితః ॥ 46.

தா.—என்மனைவி மரித்தாள், என்மக்களும் இறந்தனர். இனிநா னிருப்பது எற்றிற்கு? துக்கத்தால் என பிராணன் போய்விடும் உலகத்தாருக்கு என் முகத்தைக் காண்பித்துக்கொண்டு, இனிமேல் நான் எப்படிச் சஞ்சரிப்பேன். சம்சாரசுகம் என்னை விட்டுப்போயிற்று என்னை மூர்க்கனென்று உலகினர் ஏய்ச்சுவர். தனியேவசிப்பதும் நிந்தைக்கு இடமானது. சிரார்த்தாதிகள் செய்யவும் ஒண்ணாது. யாருமில்லாத வீட்டில் தனியே இவ்வுலகில் இருப்பது பரமதுக்கமாகும்.

ஶ்லோ॥ తాంస్తథైవావృతాఞ్శిగ్భిర్మృత్యుగ్రస్తాన్విచేష్టతః ।
స్వయంచకృపణఃశిక్షు పశ్యన్నప్యబుధోఽపతత్ ॥ 47.

தா.—இவ்வாறு கூறிக் கதறி யழுது அந்த ஆண்புரு வும் விவேகத்தை யுடையாது சினேகத்தாலுண்டாகிய பெரும் பாசக்கயிற்றாற் கட்டுண்டதாகித் தன் மனைவியும் மக்களும் காலபாசத்தால் சேஷ்டை யற்றவைகளாக விருக்கக் கண்டு தானும் அவ்வலையின் மத்தியில் விழுந்து உயிரைப் போக்கிக்கொண்டது. குடும்பபாசத்தாற் கட்டுண்ட இவ்வுலகினர் யாவரும் புருக்கள்போலத் தங்களுயிர்க்கு ஹானியைத் தேடிக்கொள்ளுகிறார்கள் என்பதற்கு ஐயமில்லை.

"பிறப்பெனுமுவரிச் சுழியதாமெழிலார்
பெண்டிராதிய வுயிர்ச்சார்வுஞ்
சிறப்புறுபுவியாதிய பொருட்சார்வும்"

தீரநீக்காமல் அவைகளை அபிவிர்த்தி செய்துகொண்டு தங்கள் புருஷார்த்தத்திற்குஹானியைத் தேடிக்கொள்ளுகின்றனரே யன்றித்தங்கள் விவேகத்தைக்கொண்டு ஜன்ம மிருத்யுக்களின் நிவர்த்திக்குப் பாடுபடார். ஸ்திரீ புத்திரர்கள் நிமித்தம் பிராணனை விடுவர். பகவானுடைய பதவியை யடையும் நிமித்தம்ஒரு சாதனமுங் கைக்கொள்ளார்.

ஶ்லோ॥ తంలబ్ధ్వాలుబ్ధకఃక్రూరః కపోతంగృహమేధినం ।
కపోతకాన్కపోతీంచ సిద్ధార్థఃప్రయయౌగృహం ॥ 48.

தா.—குரூரமுடைய வேடன் குடும்பசகிதமான புருக்கள் வலையில் விழுந்தஉடனவைகளைத் தோளின்மீதுசுமந்துகொண்டுதன்காரியம் சித்தியானதால் மிகு களிப்புடன் தன்னிருப்பிடமேகினன். சிசுக்களின் சங்கடம்பொறுது பெண் புரு பிராணத்தியாகஞ் செய்துகொண்டது. இதை ஆண்பக்ஷி கண்டிருந்தும் விவேக சூனியத்தால் தானும் மாண்டது.

ஶ்லோ॥ ఏవంకుటుంబ్యశాంతాత్మా ద్వంద్వారామః పతత్రివత్ ।
పుష్ణన్ కుటుంబంకృపణః సానుబంధోవసీదతి ॥ 49.

தா.—குடும்பசம்ரக்ஷணையில் ஆசைவைத்து விஷயவாசனைகளிலாழ்ந்தவராகி ஸ்திரீ போகங்களில் மிகப் பிரமைகொண்டு கபோதப் பக்ஷிகளைப்போல இவ்வுலகினர் தம் வாழ்நாளை வீணாகப் போக்கி வருகின்றனர்.

ஶ்லோ॥ యంప్రాప్యమానుషంలోకం ముక్తిద్వారమపావృతం ।
గృహేషుఖగవత్సక్త స్తమారూఢచ్యుతంవిదుః ॥ 50.

தா.—ஒருவன் கர்மபூமியில் வந்து உத்தமதேகத்தையடைந்து, அக்ரவர்ணத்திற் பிறந்தும் முத்தியடைவதற்கு ஹேதுவாகிய கிர்த்தியங்களைச் சர்வகாலமுஞ் செய்யாமல் ஜன்மத்தை வீணாக்கினன். பிராம்மணனேயப்படியிருந்தால் இதரவர்ணத்தாரைப் பற்றிஎன்னென்றுரைப்பது. கல்வித்திறமையுடன் ஒருவன் வைராக்கியத்தையடைந்தால் அதுமிகவும் அருமையானதே. வித்வாம்சனாகிச்செய்நேதூங்களுக்குஆசக்தனானல் பாக்கிய வீனனாவான். மானிடதேகமெடுத்து இல்வாழ்வின் நிலையாமையை யுணராது அதில் ஆசையுறின் கபோதபக்ஷியைக் காட்டிலும் அதிகதுக்கத்தை யனுபவிப்பன்; புருஷார்த்தத்தையும் மறந்து விடுவன். விஷயசுகத்தால் ஒருவன் எப்பொழுதும் திருப்தியடையானென்று புராணங்களும் ஸ்மிருதிகளும் ஓலமிடுகின்றன. விஷயபோகங்களை நச்சி அவைகளையருந்தவருந்ததேகம்விழுந்துவிடுகின்றது. இந்த நரதேகத்தின் பெருமை ஆச்சரியகரமானது. இதனிடம்இராமநாமத்தை ஜெபிக்கும் அப்பியாசமுண்டானல் நான்கு முத்திகளும் அதற்கு தாசர்களாகிவிடும். அத்தன்மையான தேகத்தை விஷயசுகங்களுக்கு விநியோகிக்கிறீர்களே! விஷயபோகங்களை அருந்த அருந்த அவைகளின்மேல் ஆசை அதிகரிக்குமேயல்லது அடங்காது. தாகங்கொண்டவன் கானல் நீரால் எப்படிச் சாந்தியடைவான்? அழியாச்சுகத்தை யடையவேண்டுமென்னுமாசை யாவரிடத்துங்குடிகொண்டிருக்க அச்சுகத்தையடையவிஷயாபிமுகமான தேகாபிமானத்தை விடுங்கோள் விடுங்கோள்! அதனல் சாந்தியையும்சமாதானத்தையுமடைந்து பிறவிக்கடலை நீந்துவீர்கள். ஆகலால் விஷயாசக்தியைவிட்டுச் சத்பாவத்தால் ஸ்ரீ ஹரியைப் பஜியுங்கள் பஜியுங்கள். கலியுகத்தில் மோக்ஷசாதனத்திற்கு யாகயோகத்தியாகங்கள் எவையும் வேண்டியதில்லை. லஜ்ஜையைவிட்டுஸ்ரீ ஹரிநாம கீர்த்தனை செய்வதே சுகசாதனமாகும். அதனல் மோக்ஷ இலக்ஷ்மி காலில்விழுவாள். பகவான் பிரத்தியக்ஷமாகப் பிரசன்னமாவார்.

ஶ்லோ॥ సుఖమైంద్రియకంరాజన్ స్వర్గేనరకయేవచ ।
దేహినాంయద్యథాదుఃఖం తస్మాన్నేచ్ఛేతతద్బుధః ॥ 51.

தா.—விஷயசுகங்களை யளக்கும் சொர்க்கம் நரகசமானமாகும். இதிலெந்த வருமானமுமில்லை. ஊர்வசியுடன் போகிக்கும் இந்திரனுக்குச் சுவர்க்கத்தில் என்ன சுகமுளதோ அதேசுகம் அமேத்தியத்தில் பெண்பன்றியுடன் சஞ்சரிக்கும் ஆண்பன்றிக்கு முளது, சாதுக்களிதைக் கண்டறிந்து கனவிலும் இகலோக பரலோக போகங்களை இச்சியார். பிரேதத்தை எவரேனும் ஆலிங்கனஞ் செய்வரா? அவ்வாறே சாதுக்களும் விஷய சுகங்களில் தோய்தலில் நேய முட்கொள்ளார். உயிரோடிருக்கும் சர்ப்பத்தைக்கண்டமாத்திரத்தில் அதனருகேசெல்லவாகிலும் இன்னுமதைக் கையாற் தொடவாகிலும் யாவர்க்கு முடல் நடுக்கமுறுவதுபோல் துங்கமாதவர்கள் விடயபோகங்களைவிரும்பார். துக்கங்கள் பழயவினைக் கீடாக கோராவிடினும் தம்மை வந்தடைவது போல இந்திரிய சுகங்களை யிச்சிக்காதிருக்கினும் அதிருஷ்டமாகவரும் போகங்களை யனுபவித்தே தீரவேண்டுமென்று துக்கத்தை யிச்சியாதது போல விஷயவாஞ்சையைவிட்டுப் பாரமார்த்தத்தைப் பெறவேண்டும். கேவலம் பாரமார்த்தபரனானால் ஆகாரமில்லாமல் தேகத்தை எப்படி நிறுத்தக்கூடும் என்னுஞ் சங்கை தோன்றும். அதற்காக மலைப்பாம்பை யான் குருவாகச் செய்துகொண்டேன்.

## ௬-மலைப் பாம்பு.

ஸ்லோ॥ గ్రాసంసుమృష్టంవిరసం మహాన్తంస్తోకమేవవా ।
యదృచ్ఛయైవాపతితం గ్రసేదాజగరో౽క్రియః ॥ 52.

தா.—மலைப்பாம்பானது ஏதொரு வுத்தியோகமுஞ் செய்யாமல் தன்னிடத்திலேயே படுத்திருந்து சுபாவமாகத் தன் வாயைத் திறக்க அதில் எதுவந்து விழுந்தபோதிலும் அதை ருசிபாராமல் புஜித்து ஜீவித்துவரும். தைரியத்தை யெக்காலும் விடாது சந்தோஷத்திடனிருக்கும். பிரபன்னர்களும் அங்ஙனமே நிசதம நிலையிலிருத்தலால் தமக்கிடையே வருபவையை விருப்பு வெறுப்பின்றி ரசஞசக்தியின்றி யருந்தியிருப்பர். மலைப்பாம்பு வாயைத்திறந்த சுபாவமாகவிருந்து காற்றை யருந்தித் தன்னுடலைப் போஷிக்கும். பிரபன்னரும் வர்தாசனம் பண்ணிக்கொண்டு வர்த்திப்பார்கள். ஆகாரம் கிடைக்கவில்லையே யென்று விபரகூலமடையார், கொஞ்சம் என்றும் அதிகம் என்றும் நன்று என்றும் தீது என்றும் புகலார். சுபாவமாக ஏவது சித்திக்கிறதோ அதைச் சாவகாசமாக உண்ணுவார்கள்.

ஸ்லோ॥ శయీతాహానిభూరీణి నిరాహారో౽నుపక్రమః ।
యదినోపనయేద్గ్రాసో మహాహిరివదిష్టభుక్ ॥ 53.

தா.—மலைப்பாம்பு தனக்கு வெகுகாலம் யதிருச்சாஹாரம் கிடைக்காவிட்டால் தாரணையை விடாமல் தன் ஸ்தானத்திலேயே கிடக்கும். அப்படியே சாதுக்கள் தங்களுக்கு நெடுநாள் அன்னம் அகப்படாவிடினும் நித்திரையின்றிப் படுத்திருப்பார்கள். அவர்களு

க்கு நித்திரையில்லாவிடினும் இரவும் பகலும் உறங்குவர்போல் உலகினருக்குத் தோன்றுவார்கள். தேகத்தின்பொருட்டுப் பிச்சையெடுக்கப் பிரயத்தினஞ் செய்யார். அதிருஷ்டவசமாக எந்தெந்தக் காலத்தில் எது தமக்குக் கிடைக்கின்றதோ அதை யுண்டு திருப்தியடைவார்கள். அதனல் அவருடைய நிஜபோதம் தாரணையால் குன்ருது விளங்கும்.

శ్లో॥ ఓజస్సహోబలయుతం బిభ్రద్దేహమకర్మకం ।
శయానోవీతనిద్రశ్చ నేహేతేంద్రియవానపి ॥ 54.

தா.—மலைப்பாம்பு மிகபராக்கிரமும் பலமும் உடையதாயினும் வேலை யொன்றுமின்றி அசையாது வாயைத் திறந்துகொண்டிருக்கும். அப்படியே யோகிகள் சரீரபலமிருந்தும் சூக்ஷ்ம புத்தியிருந்தும் இந்திரியபடுத்வ மிருந்தும் ஆகாரநிமித்தமாக யாதொரு சிந்தனையுங் கொள்ளார்; மனோவாக்குக் காயங்களுக்கு யாதொரு தொந்தரையுங் கொடார், அன்னோர்க்குச் சாக்கிர சுவப்பனங்கள் கிடையா. சுழுத்தியை விட்டு நித்திரித்திருப்பார்கள். நிஜத்வத்தால் நிஜத்தில் கிடந்திருப்பார்கள்.

## ௰-சமுத்திரம்.

శ్లో॥ మునిఃప్రసన్నగంభీరో దుర్విగాహ్యోదురత్యయః ।
అనంతపారోహ్యక్షోభ్యః స్థిమితోదఇవార్ణవః ॥ 55.

தா.—சமுத்திரத்தை நான் குருவாகச்செய்து கொண்டேன். அது பூர்ண கம்பீரமாயும் நிருமலத்தையடைந்து சதாப் பிரசன்னதையாயிருக்கும். அப்படியே யோகிகள் பூர்ண சாந்தத்தை வகித்து நிருமலத்தையுடையரா யிருப்பார்கள். மலினத்தையுடைய நதிசலம் சமுத்திரத்தில் கலந்த மாத்திரத்தில் தனது மலினம் போய் நிருமலத்தை யடைகின்றது. அப்படியே தேகாதி பிரபஞ்சத்தால் யோகிகள் கருமங்கள்செய்யினும் அவைகள் நிர்மலத்தை யடையும். ஜலத்தால் சாகரம் கம்பீரத்தை யடைகிறதுபோல மாதவர்கள் ஸ்வானுபவத்தால் கம்பீரராயிருப்பார்கள். பாரமான வஸ்துக்கள் கடலிலே மூழ்கி விடுவதுபோலத் தம்மையடைந்தவரின் சமுசாரபாரத்தை யோகிகள் ஒழித்து விடுவார்கள். கப்பல்மூலமாக நடக்கும் தனவான்களுடைய விவகாரத்தைச் சமுத்திரம் மீறித் தடைசெய்யாததுபோலச் சாதுக்களும், அரசர்கள் தேவர்கள் மனிதர்கள் இவர்களுடைய விவகாரங்களுக்கு மாருக எந்தக்காரியத்தையுஞ் செய்யார். தாம்ரபர்ணி என்னும் நதி சமுத்திரத்தில் சங்கமமாகுமிடத்தில் முத்துக்கள் உற்பத்தியாவதுபோலச் சாதுக்களுடன் சிரத்தையுடன் கூடினவர்கள் முமுக்ஷுக்களென்னும் முத்துக்களாய் ஏற்படுவர். சாகரத்தில் பிரவாக மில்லாமல் சலம் நிச்சலமாயிருப்பது போல யோகிகளும் மிருத்யு பயமின்றிச் சஞ்சலமற்றிருப்பார்கள். சமுத்திரம் அவ்வவ்

விடத்தில் பூரணமாகிப் பிரவாக மற்றிருக்கிறது; அப்படியே யோகிகளும் பிறப்பிறப்பின்றிச் சதா பரிபூரணமாயிருப்பார்கள். யோகிகளுக்கும் சமுத்திரத்திற்கும் இருக்கிறமேற்கூறிய குணங்களைவிடச் சில விசேஷகுணங்கள் யோகியரிடத்தில் உண்டு. எப்படி எனில் கடல் நீர் சலனமடையும், உப்பாயிருக்கிறது, அடுத்தடுத்து க்ஷோபிக்கும் பர்வகாலங்களில் மாத்திரம் பூரிக்கும். யோகியரோ இவ்வாறன்றி என்றும் நிச்சலமாயும் யாவர்க்கும் மதுரத்தை யளிப்பவராயும் க்ஷோபிக்காமல் சதானந்த பூரணராகியும் இருப்பார். பரவைப் பான்செய்யும் மழையினீர் வீணாகிவிடுகிறது. அத்தன்மையல்லாது சாதுக்கள் அற்பப்பொருளைக் கிரகித்தாலும் அதனால் பவவேதனை நிவாரணையாகும் பிரயோசனம் லபிக்கும். ஆதலின் முமுக்ஷுக்களானவர்கள் பகவத் பக்தர்களைப் பஜிக்கக் கடவர்.

శ్లో॥ సమృద్ధకామో హీనోవా నారాయణపరో మునిః ।
నోత్సర్పేత న శుష్యేత సరిద్భిరివ సాగరః ॥ 56.

தா.—கார்காலத்தில் காஞறுகள் பெருக்கெடுத்து மிதமிலா ஜலத்தைச் சமுத்திரத்தில் கொண்டுவந்து செலுத்துங்காலத்துப் பூரிப்பும், கோடைகாலத்தில் வறட்சியினால் நதிகள் தன்னிடம் சங்கமமாகாததினால் வாட்டமுமின்றிச் சமுத்திரம் விளங்குதல்போலத் துங்கமாதவர்களும் தமக்குப்பொருள் சமுருத்தி வந்து சேரும்போதும் அது தம்மை விட்டு நீங்கும்போதும் சுகமும் துக்கமுமின்றி நானெனும் துவந்தா துவந்தங்களுக் கதீதமாகிய தமது நிலைகுலையாது விளங்கி நிற்பார்கள். தரித்திரமும் சம்பத்தும் அவர்கள் சித்தத்திற்குச் சமானமாகவிருக்கும். பொருள் சம்பவித்தகாலத்தில் தேகத்தின் மீது அகங்காரம் வைத்து நான் தனவானென்று கர்வங்கொண்டும், மிடிவந்து பொருந்துங்காலத்து யான்தரித்திரன் என்று மெலிந்துங் கூறார்; பிரபஞ்சத்தி லாசக்தியற்றிருப்பர்.

## கக. விட்டிற்பூச்சி - பதங்கம்.

శ్లో॥ దృష్ట్వా స్త్రియం దేవమాయాం తద్భావై రజితేంద్రియః ।
ప్రలోభితః పతత్యంధే తమస్యగ్నౌ పతంగవత్ ॥ 57.

தா.—குணமயமான தேவமாயையே, சகுணரூபமான ஸ்திரிரூபத்தைத் தரித்துப் பிராணிகளை ஸ்திரீசுகத்திற் போகிக்கச்செய்வதற்கு விருப்பமுடையவளாகித் தன் சித்திரமான விலாசங்களாலும், பார்வையென்னும் பாணங்களாலும், புருடருடைய தைரியமென்னும் கவசத்தைப் பேதித்து இருதயக்குகையிற் சஞ்சரிப்பாள். கன்னிகையரின் நோக்கினது கொடுமையானது புருடர்களைப் போகமென்னும் காராக்கிருகத்தில் விழும்படிசெய்யும். ஸ்திரீபோகத்தினுடைய சுகம் கேவலம் துக்கரூபமானது மதுரமான விஷத்தை வாயி

விடின் அது பரிபாகமாகும்போது பிராணுவஸ்தை யுண்டாகும். தீபத்தின் அங்கசங்கத்தால் விட்டிற்பூச்சி என்னசுகத்தைக்கண்டது? ஏதோ பெருஞ்சுகமுதிக்குமென வெண்ணித் தீபத்தை யணைந்து தன்னுயிரை இழந்துவிடும். இது இப்படி யிறந்ததைக் கண்ணுற்ற மற்றவிட்டிர்பூச்சிகளும் அவ்வாறே பிராணத்தியாகஞ்செய்துகொள் வதை நாம் பார்த்திருக்கிறோம். இந்தப் பதங்க ஞாயத்தான் மாதர் மோகத்தை இச்சித்து அவருடைய உறவால் புருஷார்த்தத்தை யிழந்து ஒருவன் மோசம்போவதை உலகத்தார் கண்டும் தாங்களும் அவ்விதமாக விவேகமில்லாமல் பெண்டிராசை கொண்டு புருஷார்த்தத்தை இழந்து அந்தத் தமஸெனும் நரகத்தில் விழுகின்றனர்.

శ్లో॥ యోషిద్ధిరణ్యాభరణాంబరాదిద్రవ్యేషుమాయారచితేషుమూఢః ।
ప్రలోభితాత్మాహ్యుపభోగబుద్ధ్యాపతంగవన్నశ్యతినష్టదృష్టిః ॥ 58.

தா.—பிரஜைகளை அதோகதியி லுய்க்கும்பொருட்டு ஸ்திரீகளையும், சுவர்ணத்தையும், வஸ்திரங்களையும், ஆபரணங்களையும், மாயை நிருமித்திருக்கிறது. ஸ்திரீ ஒருத்தியே தன்னை நச்சினவர்களை நரகத்தி லுய்க்கப் போதுமானவள். இவள் வலைக்குள் பின்னும் இறுக்கிச் சிக்கிக்கொள்ள, நரகஹேதுவான பொன்னையும் ரத்ன பூஷணங்களையும் துகிலையும் மாயை சிருஷ்டித்திருக்கிறது. இவைகளை ஒரு இளம் பாவைத் தன் மேனியிலணிந்து கொண்டு, பிறைநுதலில் சிந்தூரத் திலகமிட்டுக் கயல்விழியோடு புருடரெதிரில் வந்தால், அவர்கள் வியாமோகத்தை யடைவார்கள். சரீரத்தில் பிசாசத்தினு லாவேசமுண்டாகிய ஒருவன் மதுபானஞ்செய்யின் அவனுக்குப் பிரமை யதிகரிப்பதுபோல, மோகமென்னும் மத்தியபானத்தில் உன்மாதத் திரவியங்களைக் கலந்து அந்த இரசத்தைத் புருடனருந்த அப்பொழு துண்டாகும் மயக்கம் இத்தன்மையதென நாவால் நவிலற்பாலதோ? இவையாவும் இந்திரியங்களைக் கவரவல்ல மாயையின் சேட்டையேயாகும். ஆதலின் இந்திரிய நிக்கிரக மில்லாரை இம் மாயை பாதிக்கும். கோவிந்தன்மீது அபாரபிரீதி வைத்திருக்கும் தாசர்களின் சந்நிதியில் மாயை சேட்டியாது. அவர்களைப் பகவான் இரக்ஷிப்பார். ஹரிசனங்களுக்கு விமுகானவர்களை மாயை தன் வயப்படுத்திக்கொள்ளும்.

## கஉ-தேனீ.

శ్లో॥ స్తోకంస్తోకంగ్రసేద్గ్రాసం దేహోవర్తేతయావతా ।
గృహానహింసన్నాతిష్ఠేద్వృత్తింమాధుకరీంమునిః ॥ 59.

தா.—தேனீ புஷ்பங்கள்தோறுஞ் சென்று அம்மலர்களுக்கு ஹானிசெய்யாமல் தேனை நுகர்தல்போல் சாதுக்களும் இல்லந்தோறும் புகுந்து குடும்பிகளுக்கு யாதொருதீங்குஞ் செய்யாமல் அன்னம் மாத்திரத்திற்குப் பைக்ஷியமேற்றுண்டு தமது பிராணதாரத்திற்கு

மாத்திரம் புசியைத் தணித்துக்கொள்ளுவார்கள். இவன் துர்ப்பலன் இவன் சமர்த்தன் என்னும் வித்தியாசங்களை மனதிற் கொள்ளார். தாமரைப் புஷ்பத்தின் மதுரத்தை வேட்டு அதிலேயே தங்கி அஸ்தமனம் நெருங்கும்போதும் அதைவிட்டு நீங்கிவர மனமில்லா அளியானது மலர்குவிய அதிலகப்பட்டுக்கொண்டு நாசமுறும். காஷ்டத்தைத் தொளைக்கவல்ல வண்டு கமலத்திலிவ்வாறு அகப்பட்டு வீகின்றமையின் சாதுக்கள் ஓரிடத்திலேயே தங்கினால் விஷயபோகங்களுக் குட்பட்டு ஸ்வரூபநாசத்தை விளக்கும் பந்தம் உற நேர்வர்.

ஶ்லோ॥ సాయంతనంశ్వస్తనంవా నసంగృహ్ణీతభిక్షుకః ।
మక్షికాఇవసంగృహ్ణన్ సహతేనవినశ్యతి ॥ 60.

தா.—பிச்சை யேற்றுண்ணுஞ் சாதுபுருஷன் இரவிற்கும் பகலைக்கும் வேண்டுமென்று சேகரித்து வைத்தல் கூடாது; சங்கிரகமிருந்தால் நாசமடைவான். இந்த விஷயத்தில் தேனீயை நான் குருவாகச் செய்து கொண்டேன். தேனீ வெகு கஷ்டப்பட்டுத் தேனைத் தன்கூண்டில் சேகரித்து வைக்கும் வேடர்கள் ஈக்களையோட்டிவிட்டுத் தேனையெடுத்துக்கொள்ளுவார்கள். ஆதலின் பிரபன்னர்களும், பக்தர்களும், சன்னியாசிகளும், யோகிகளும், சஜ்ஜனர்களும் எந்தப்பொருளையும் நம்பிக்கையுடன் சேகரிக்கவேண்டுமென்னும் பாவனை கொள்ளக்கூடாது; ஏனென்றால் காலக்ரமத்தில் அது நாசமுறும். ஆகவே, சத்கர்மத்தையே சதாகாலமும் புரிந்து அதனையே சேகரிக்கவேண்டும். இந்த மர்மத்தை யறியாமல் ஜனங்கள் அதமர்களாகித் தம் காமத்தால் நாசத்தை யடைகிறார்கள். திரவியம் விநாசத்தினுடைய பலம்; நாசத்திற்கே மூலம். விசேஷ நாசத்திற்கு மூலம் ஸ்திரி என்றறிந்துகொள். எப்போதெப்போது இவைகளின் மீது காதல் அதிகரிக்கின்றதோ அந்த அளவு சமுசாரவியாதி அதிகரிக்கும் இது திண்ணம். பெண்டிர் பொருள் இவ்விரண்டு விஷயத்திலும் எவன் தன் மனதைச் செலுத்தாமலிருக்கின்றனனோ அவனே இவ்வையகத்தில் ஜனார்த்தன ஸ்வரூபனாவான்; எல்லாரைக்காட்டிலுஞ் சுகமடைய நிச்சயித்தவனாவான். ஆதலின், ஸ்திரி இச்சையை விடவேண்டும்.

ஶ்లో॥ నదేయంనోపభోగ్యంచ లుబ్ధైర్యద్దుఃఖసంచితం ।
భుఙ్క్తేతదపితచ్చాన్యో మధుహేవార్థవిన్మధు ॥ 61.

தா.—தானுமனுபவியாமல் தருமமும் செய்யாமல் தன்து மனைவிமக்களுக்கும் கொடாமல் தேனீ மிக வருத்தத்துடன் தேனைச் சேகரிக்கின்றது. இவ்வள்வு கஷ்டத்துடன் சேகரிக்குந் தேனை வேடர்கள் ஈக்களுக்கு மிகுந்த உபத்திரவத்தை யளித்துப் பல உபாயங்களால் கைப்பற்றிக்கொண்டு காவடிகளில் சுமந்துபோய்த் தனவான்களின் உணவின் பொருட்டு விற்கிறார்கள். அப்படியே தாமுமனுபவியாதுந்

தமது உற்றார் பெற்றார்களுக்கும் ஈயாமலும் பிறருக்குத் தானதருமஞ் செய்யாமலும் ஒருவன் தனத்தைச் சம்பாதித்துச் சேர்ப்பானானல் அதில் சிறிது கள்வரால் அபகரிக்கப்படும், சிறிது இராஜதண்டனைக்குச் சேர்ந்து விடும், மிகுந்ததை நீதிநெறி தவிர்ந்தவர்கள் கைப்பற்றுவார்கள். ஆதலின் நற்குணசீலர்கள் திரவியத்தைச் சேர்க்கும்படியான லோபத்தை வைத்துக்கொள்ளக்கூடாது.

• శ్లో॥ సుదుఃఖోపార్జితైర్ద్రవ్యైరాశాసానాంగృహాశిషః ।

మధుహేవాగ్రతోభుఙ్క్తే యతిర్వైగృహమేధినాం ॥ 62.

தா.—ஒரு கிரகஸ்தன் சிரமத்துடன் திரவியத்தைச் சம்பாதித்து இந்தத் திரவியத்தைக்கொண்டு வீட்டிற்குவேண்டியபதார்த்தங்களைச் சேகரித்து அன்னத்தைப் பாகம் செய்வித்துச் சுவகீயமாகப் போஜனஞ் செய்வான். போஜனம் செய்யுங்காலத்தில் சன்னியாசியாகிலும் பிரம்மசாரியாகிலும் அன்னத்தைக்கோரித் தன்னிடம்வரின் அவர்களுக்கு வேண்டிய உண்டியை முன்பளித்துப் பின்பு தான் உண்ணல் வேண்டும். அதிதிவிஷயத்தில் ஒருவன் பராமுகனாயிருப்பானாகில் அவன் செய்த சகல புண்ணியங்களுக்கும் ஹானிநேரிடும். எவனொருவன் போஜனகாலத்தில் வரும் அதிதிக்கு முன்பு அன்னம் அளிக்கிறானோ அவனே சுவதர்மத்தை இரக்ஷிக்கிறவனாவான்.

## ௧௩-தும்பி.

శ్లో॥ అణుభ్యశ్చమహద్భ్యశ్చ శాస్త్రేభ్యఃకుశలోనరః ।

సర్వతఃసారమాదద్యా త్పుష్పేభ్య ఇవషట్పదః ॥ 63.

தா.—தும்பியானது, சாராம்சமான வாசனையை நுகரக் கருதிச் சிறுபுஷ்பமானாலும், பெரிய மலரானாலும், அதனிடத்திற்சேகிச்சுவையை யுண்ணுமாப்போலச் சாதுக்கள் சாஸ்திர திருஷ்டியால் விவேகத்தையடைந்தவராகிச் சிறிது பெரிது என்று பாராமல் வேதாந்தங்களிற் சொல்லியிருந்தாலும், புராண ஸ்தோத்திரங்களிற் சொன்னாலும், பண்டிதர் சொன்னாலும், சாதாரணமானவர்கள் சொன்னாலும் சாரத்தைக் கிரகிக்கிறவராகி யெவ்வெப்பொருட்களிலும் பிரமஸ்திதியைக் கண்டு களித்திருப்பர். கற்புடைய மங்கை தன் கணவனுக்குப் பிரீதியுண்டாக்கும் நிமித்தந் தனது மாமி மாமன்மார் செய்யுங் குற்றங்களைப் பொருத்துக் கொள்ளுதல் போலும் பாலும் நீரும் கலந்திருந்தால் அன்னப்பக்ஷி பாலைமாத்திரம் கிரகிப்பது போலும் விவேகிகள் சாரமானதை மாத்திரம் கிரகிப்பார்கள். சர்வபூதத்திலும் பகவத்பாவனை யன்றோ முக்கியமான சாரம்? இந்த நிஷ்டை எவனுக்குண்டோ அவனுக் கபாயஞ் சுலப்பனத்திலுங் கிடையாது.

## கச - ஈ.

 శ్లో॥ సాయంతనంశ్వస్తనంవా నసంగృహ్ణీతభిక్షితం ।
పాణిపాత్రోదరామత్రో మక్షికేవనసంగ్రహీ ॥ 64.

தா.—வீடுகளிலிருக்கும் ஈக்கூட்டங்கள் சர்க்கரை இராசியில் உட்கார்ந்து வேண்டியமட்டுங் கைகளாலெடுத்துச் சாப்பிடுகின்றனவேயொழிய இராக்காலத்திற்கேனும் மறுநாளைக்கேனும் வேண்டுமென்னுஞ் சிந்தனை மனதிற்கொள்வதில்லை. அப்படியே சாதுக்களும் கிடைத்த பிச்சையைக் கையிற்கொண்டு வாயிற்போட்டுக்கொள்ளுவரேயன்றிச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டுமென்னுஞ் சங்கற்பம் அவர் மனதிலுதியாது. பிச்சைக்காகக் கரபாத்திரமன்றி வேறு பாத்திரமும் அவரிடத்தில் கிடையாது.

## கரு-யானை.

శ్లో॥ తదాపి యువతీంభిక్షు ర్నస్పృశేద్దారవీమపి ।
స్పృశన్ కరీవబధ్యేత కరిణ్యా అంగసంగతః ॥ 65.

தா.—பெண் யானையின் அங்கசங்கத்திற்காக ஆண்யானை கட்டுப் பட்டுப் போகின்றது. மனிதர் கண்ணுக்குத் தோற்றாத மதயானை பெண்யானையின் சங்கத்தை இச்சிப்பதனால், மனிதன் கையிலகப்பட்டு அங்குசத்தால் அடிபட்டு அவனுக்குப் பயந்து கீழ்ப்படிந்து நடக்கின்றது. பெண்யானை சங்கத்தால் ஆண்யானை சுவாதீனத்தை யிழந்து அளவில்லாத துன்பத்தை யடைதலின், சுவதர்மநிஷ்டரான சன்னியாசிகள் ஸ்திரீகளைப்பார்த்தமாத்திரத்தில் தூரமாய் ஓடிப்போகவேண்டும். மாதர்கோஷ்டியையும் அவர் தரிசனத்தையும் சன்னியாசிகள் அறத் தவிர்தல் வேண்டும். தாம் ஓடும்போது கட்டையாற் செய்த பெண்பதுமையொன்று தம்காலிற்படினும் அதையுற்றுப்பார்ப்பதும் தவறாகும். உஷாகன்னிகை யென்பவள் சுவப்பனத்திற் கண்ட அநிருத்தனைச் சித்திரரேகை மூலமாக வரவழைத்துக்கொள்ளப் பாணாசூரன் அம்மங்கையைச் சிறைச்சாலையி லிட்டான் அவளை விடுவிப்பதற்கு ஸ்ரீ கிருஷ்ணன்வரச் சாம்பமூர்த்தி அவரை எதிர்த்தபடியால் கோரமான யுத்தமுண்டாயிற்று. அப்போதும் அந்த மாது கனவிற்கண்ட புருஷனை விடாதிருந்தாள். அப்படி ஸ்திரீக்குக் கட்டுப்பட்ட புருடன் எங்ஙனம் விடுதலையடைவான். புருடனென்றும் பேர்பெற்றுப் பெண்களைப் பணிவானுக்கு முத்தி எங்ஙனம் சித்திக்கும். ஸ்திரீசங்கம் அதோகதிக்கு ஹேதுவானது. இதற்கு ஐயமில்லை.

శ్లో॥ నాధిగచ్ఛేత్ స్త్రియంప్రాజ్ఞః కర్హిచిన్మృత్యుమాత్మనః ।
బలాధికైఃసహన్యేతగజైరన్యైర్గజోయథా ॥ 66

தா.—ஒரு ஆண்யானை பிடியுடன் கிரீடிப்பதைப்பலமுள்ள மற்ற களிறுகள் பார்த்தால் இந்த யானையைத் தாம் சுவகீயபலத்தால் துறத்திவிட்டுப் பெண்யானையுடன் பலாத்காரமாகப் புணர யத்தனிக்கும். அப்போது அவைகளுக்குள் பெரும் போருண்டாகி ஒன்றை ஒன்றடித்து மடிந்துவிடும். அகலியைச் சேர்ந்ததற்காக இந்திரன் கௌதமரால் சாப மிடப்பட்டான். உடலும் உயிரும்போல் மிக அன்னியோன்னியமாயிருந்த சுந்தோப சுந்தர்கள் என்னும் இரண்டு சகோதரர்களும் திலோத்தமையின் மேல் ஏககாலத்தில் மோகங்கொண்டு அவளைக் கைப்பற்றுவதி னிமித்தம் ஒருவரை யொருவரடித்துக்கொண்டு மாண்டனர். இது பூர்வகாலத்தில் நடந்த கதை. இப்படித் தேவர்களும் மனிதர்களும் மிருகங்களும் ஸ்திரி சங்கத்தால் துக்கத்தை யடைகிறார்கள் என்பது பிரஸித்தம். குல ஸ்திரி சங்கம் வீட்டின்மேல் ஆசையை விளைவித்துக் கலக்கத்தையுண்டாக்கும். அதிலும் வேசியர் சங்கம் துன்பத்தையுண்டாக்கிமாணத்தையே நல்கும். மிதமான ஸ்வஸ்திரி போகமே ஒருவனுக்குப் பாதகத்தை விளைவிக்குமாயின் ஒருவன் பிறன்மனைவி முதலானருடன் கூடின் உன்மத்தனாகி அதோகதியடைவான் என்பதி திண்ணம். புருஷன் பரத்தையர்கள் நரகரூபரென்னும் நிர்ணயத்தில் நாட்டமுடையவனாகவேண்டும்.

## கசு-மான்.

శ్లో॥ గ్రామ్యగీతం న శృణుయాద్యతిర్వనచరః క్వచిత్ ।
శిక్షేత హరిణాద్బద్ధాన్మృగయోర్గీతమోహితాత్ ॥ 67.

தா.—பரத்தையர் இனியகுரலால் பாடுங் கீதங்களைக்கேட்பவர்கள் பந்தத்திற்காளாவார்கள். மான்கள் தீப்பந்தத்தைக் கண்ணினால் கண்டு மணியோசையைக் காதினாற்கேட்டவக்கணமே மெய்ம்மறந்து நிற்குமளவில், அவைகளை வலைஞர் வலையில் எளிதில் பிடித்துவிடுவார்கள். மிருகங்களே இப்படி ஓசையினால் மயக்கப்பட்டால் கணிகையரின் கீதங்களைக்கேட்டு யார்தாம்மோகிக்கார் ருசிய சிருங்க மகருஷி தபசிகளில் மிகச்சிரேஷ்டர். பிறந்தது முதல் ஸ்திரீகளைக் கண்ணினாற்கண்டிலர். ஸ்திரீகளிவ்வாறிருப்பரென்றுந் தெரியாது இங்ஙனம், வெகுகாலம் வனத்திலேயே சஞ்சரித்துக்கொண்டிருக்க, ரோமபீத மகாராஜாவினால்அனுப்பப்பட்ட வேசையர்கள் இவர் ஆச்சிரமத்தை யணுகவே, ருச்யசிருங்க முனிவர் இவர்களும் தன்னை போன்ற தபசியர்களௌன மதித்து வந்தனை வழிபாடுகள் செய்தனர். பிறகு இந்த வேசையர்கள் அதிக நட்ப சூழ்ச்சியான் கானங்களால் தங்களை மோகிக்கும்படிச் செய்தனர். ஸ்திரிவாசனை சங்கம் முதலான ஒன்றுமில்லாதவரே வேசிகளால் மயக்கப்பட்டார்.

ஶ்லோ॥ నృత్యవాదిత్రగీతాని జుషఽ గ్రామ్యాణియోషితాం ।
ఆసాం క్రీడనకోవశ్య ఋష్యశృంగోమృగీసుతః ॥ 68.

தா.—கட்டுப்பட்ட குரங்கைப்போல வேச்யாஸ்திரீகளுடைய ஆடல் பாடல்களைக்கண்டு புருஷர்கள், அவர்கள்மீது இச்சைவைப்பார்கள். கலைக்கோட்டு முனிவர் திருஷ்டிதோஷத்தினாலேயே ஸ்திரிகள் வயப்பட்டு அவர்கள் கோஷ்டியிலேயே வர்தித்தார். காருடக்காரனிடமிருக்கும் குரங்குகள் ஸ்திரிகளுடன் எப்படி விளையாடுமோ அப்படியே புருஷனும் ஸ்திரியைக் கண்டமாத்திரத்தில் பிரமாதமான காமவெறிகொண்டு விவேகத்தை விட்டுத் தவத்தின் மேன்மையை மறந்து பிரமசரிய சங்கற்பத்தை யறுத்துவிட்டு ஸ்திரிகளுக்கனுரூபமாகி ஆடிக்கொண்டிருப்பான். ஒரு குடும்பிக்கு வேச்யா ஸ்திரியினால் வருஞ் சங்கட்த்திற்குச் சமானம் வேறொன்றில்லை ஆதலின் கட்டழகிகள் தரிசனம் ஸ்பரிசனம் வேண்டாம் வேண்டாம். எத்தகையோர்க்கும் அவர் சினேகந் துக்கத்தையே விளைவிக்கும். வேசைகளின் கானத்தைச் செவி யெக்காலத்தும் பானஞ்செய்யக் கூடாது. இது உபசாரவார்த்தை யன்று, கட்டுரையெனக் கொள்ள வேண்டும். எவ்விடத்தில் பரமார்த்தமாக ஹரிகீர்த்தனை ஹரிகதை குருபக்தியுடனே நடக்கிறதோ அவ்விடஞ்சென்று கேட்டு ஞானத்தை யடையவேண்டும். இராம நாமத்தைச் செபித்தல்வேண்டும்.

## கஎ - மீன்.

ஶ்லோ॥ జిహ్వయాంతిప్రమాథిన్యా జనో౽రసవిమోహితః ।
మృత్యుమృచ్ఛత్యసద్బుద్ధి ర్మీనస్తుబడిశైర్యథా ॥ 69.

தா.—திரவியத்தைச் சேகரஞ்செய்தல் துன்பத்தை விளைவிக்கும். மாதர்மேல் மனம்வைத்தல் அதோகதியை உண்டாக்கும். உருசியான உணவின்மேலபேக்ஷைவைத்தல் மரணத்தை விளைவிக்கும். எவனுக்கு ரசனேந்திரியப் பிரீதியுளதோ அவன் அனர்த்தத்தையும் துக்கத்தையும் போகிக்க வேண்டியதாயிருக்கும். மச்சங்கள் இரசமாதுர்ய வேட்கையால் தூண்டிற்களின் முட்களிலகப்பட்டு மாள்கின்றன. உருசியுள்ளவை பார்வைக்கு உத்தமமாகத் தோன்றுகின்றன. ஆனால் அவைகளுள் வியாதிகளென்னும் தூண்டின் முட்கள் குப்தமாக விருக்கின்றன, ரசனாசத்தியுடையவன் பவரோகத்திலுழன்று கொண்டிருப்பான். அன்னோன் சபுத்தியை யெப்படியுடையவனாவான். இந்திரியங்களுக்குப் பலம் ரஸனாதாரமாயிருக்கும். ரசனத்துவரா ருசிபதார்தங்களின் ரசத்தைக் கொள்ளுங்கால் இந்திரியங்களுக்கு உன்மத்த இலக்ஷண முண்டாகிறது. ரஸனேந்திரியத்தை ஜயிக்காவிடில் பலவியாதி தொலையாது.

శ్లో॥ ఇంద్రియాణిజయంత్యాశు నిరాహారమనీషిణః ।
వర్జయిత్వాతురసనం తన్నిరన్నస్యవర్ధతే ॥ 70.

தா.—சாதகர்கள் ஆகாரத்தைக் குறைத்து இந்திரியங்களைச் செயிக்கிறார்கள். நல்லுணவில் மனதைச்செலுத்தினால் அபேக்ஷை யுண்டாகி, யதைப் புசிக்கவேண்டியதாய் வரும். அப்படி யருந்துவதினால் இந்திரியங்களுக்குப் பலமுண்டாகிறது. ஆதலின் இந்திரியங்களின் வலியைக் குறைக்கவேண்டுவோன் உணவைக் குறைத்தல் வேண்டும்.

శ్లో॥ తావజ్జితేంద్రియోనస్యా ద్విజితాన్యేంద్రియఃపుమాన్ ।
నజయేద్రసనంయావ జ్జితంసర్వంజితేరసే ॥ 71.

தா.—உணவைக் குறைக்காமல் இந்திரியங்களைச் செயிக்க முடியுமென்பது பொய்வார்த்தையாகும். ஒருவன் இரசபதார்த்துடன் அன்னத்தை யுண்டபிறகு தனது கர்மத்தில் சாக்கிரதையாயிருக்கவேண்டும். இரசனேந்திரியத்தைச் செயிக்காவிடில் ஜிதேந்திரியத்தையடைவது பொய்யாகும். இரசனேந்திரியத்தைச் செயித்தால் விஷயங்களுடைய மார்க்கந் தப்பும். விஷயானுபவ முடிவில் மதுரத்வத்தை ஆத்மாவில் ஐக்கியம் செய்தால் இரசனேந்திரியத்தை முற்றுஞ் செயித்ததாகும். சகலமும் மதுரத்தினுடைய மதுரமாயிருக்கிறது. அந்த மதுரம் எந்த மதுரத்தை யொட்டியிருக்கின்றதோ அதனாலேயே இரசனம் வசமாம். பின்பு இரசனேந்திரியத்தின் அபாயம் பாதிக்காது. எவன் ரசனேந்திரியத்தைச் சமூலமாக ஜயித்திருக்கின்றனனோ அவனே பிரம்மானந்தத்தைப் புஜிக்கிறவனாவான்.

## கஅ-பிங்களை வேசி.

శ్లో॥ పింగలానామవేశ్యాసీ ద్విదేహనగరేపురా ।
తస్యామేశిక్షితంకించి న్నిబోధనృపనందన ॥ 72.

தா.—ஓ அரசனே ! வேசியை நான் குருவாகச் செய்துகொண்டேன். அவளால் நான் கற்றுக்கொண்ட இலக்ஷணத்தைக் கூறுகிறேன் கேளாய். விதேஹ நகரத்தில் பிங்களை யென்னு மொரு பொதுமகளிருந்தாள். அவள் விருத்தியைக்கண்டு நான் வைராக்கியத்தை யடைந்தேன்.

శ్లో॥ సాస్వైరిణ్యేకదాకాంతం సంకేతఉపనేష్యతి ।
అభూత్కాలేబహిర్ద్వారి బిభ్రతీరూపముత్తమం ॥ 73.

தா.—விரோதிவர்க்கமில்லாமல் சுவேச்சாசாரத்துடன் அந்திவேளையில் அனேகவிதமான. ஆபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு வீட்டுத் தலைவாசற்படியில் நின்றவண்ணம் தன் குலாசார தர்மானுகூல்யமாக வேசியானவள் தன் வீட்டின்வழியா யேகும் புருடர்களி லுத்தமமானவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

శ్లో॥ మార్గఆగచ్ఛతో వీక్ష్య పురుషాన్ పురుషర్షభ ।
తాన్ శుల్కదాన్విత్తవతః కాంతాన్ మేనేర్థకాముకా ॥ 74.

தா.—காமுகரான தனவந்தர்களுடைய திரவியத்தைக் கைக்கொள்ளும் நிமித்தம் அப்பொதுமகள் தன் வீட்டின்வழியாகச் செல்லும் புருடர்களைச் கண்ணினால் மயக்கிக் காமச்சேட்டைகளைக் காண்பிப்பாள்.

శ్లో॥ ఆగతేష్వపయాతేషు సాసంకేతోపజీవినీ ।
అప్యన్యోవిత్తవాన్కోఽపి మాముపేష్యతిభూరిదః ॥ 75.

தா.—வழியே போகும்புருடர்கள் தன்னைப் பார்க்கும்படி செய்ய அவர்களை நோக்கித் தாம்பூலப்பெற்றுக்கொண்டு போம் என்று கூறுவாள். சில் புருடர்களைப் பார்த்து மோஹாநுகுணமான அமர்யாதையாகச் சொல்லுவாள். சில புருடர்களைப் பார்த்து வியாமோக நிரூபணமான சொற்களைக் கூறுவாள். இவள் கூறுஞ் சொற்களைச் செவிகொள்ளாது தங்கள் வேலையின்மேல் கவனத்துடன் செல்லும் புருடர்களை நிந்தித்துக் கொண்டிருப்பாள். ரூப ஈனனை உபேக்ஷித்திருப்பாள். திரவியவான் தன்னிடம்வந்து கைப்பிடித்துக் காமார்த்தியை அணைப்பானென்று அபேக்ஷித்திருந்தாள்.

శ్లో॥ ఏవందురాశయాధ్వస్త నిద్రాద్వార్యవలంబతీ ।
నిర్గచ్ఛంతీప్రవిశతీ నిశీథంసమపద్యత ॥ 76.

தா.—இவள், புருடர்களைத் தன் காமவலையிற் சிக்கிக்கொள்ளச் செய்து அவர்களிடத்திலிருக்குந் தனத்தைக் கிரகிக்குந் துராசையுடையவளாய்ச் சற்றுநேரம் வாசற்படியண்டை நின்றுகொண்டும் சற்றுநேரம் வீட்டிற்குட்சென்றும் இவ்வாறு தெருவாசற்படிக்கும் வீட்டிற்கும் வருவதும் போவதுமாக விருந்தாள். நடு இராததிரியும் ஆய்விட்டது. புருடர்கள் வரும் வேளையுந் தப்பிப்போய்விட்டது. ஆதலால் பிங்களை மிகவிசனமுற்றுள்.

శ్లో॥ తస్యావిత్తాశయాశుష్య ద్వక్త్రాయాదీనచేతసః ।
నిర్వేదఃపరమోజజ్ఞే చింతా హేతుఃసుఖావహః ॥ 77.

தா.—புருடர்கள் வரவை அவ்வேசை வெகுநேரம் எதிர் நோக்கியும் அவர்கள் வாராமையால் மிக வெறுப்படைந்தாள். அவள் வதனம் வாட்டமுற்றது, வாய் உலர்ந்து விட்டது, திரவியம் வரவில்லையே யென்னுஞ் சிந்தை அவள் மனதுட்புகுந்து வாட்டியது. இவ்வாறு தனக்குச் சம்பவித்த ஆர்த்துயரத்தைப்பற்றி ஆலோசனை செய்யத் தொடங்கவே அவளுக்குச் சுகஹேதுவான பரமவைராக்கிய முண்டாயிற்று.

శ్లో॥ తస్యానిర్విణ్ణచిత్తాయా గీతంశృణుయథామమ ।
నిర్వేదఆశాపాశానాం పురుషస్యయథాహ్యసిః ॥
నహ్యంగాజాతనిర్వేదో దేహబంధంజిహాసతి ॥ 78.

தா.—விஷய சுகத்தை நாடியிருந்த அப்பிங்களைக்கு அதனையறுக்கும் வைராக்கிய முண்டாகி விவேகத்துடன் கூடின கீதங்களைப்பாடத்தொடங்கினாள். ஓ அரசனே! அதை யுனக்குச் சொல்லுகிறேன் சிரத்தையுடன் கேள். வைராக்கிய புத்தியில்லாப் புருடனை ஜன்மமரணங்களாதிவியாதிகள் அடிக்கடி தொந்தரை செய்யும். அனுதாப மெவனுக்கில்லையோ அவன் மனதில் விவேகமுதியாது. ஆதலால் அவன் சமுசாரத்திற்குத் தொண்டுபட்டு ஆசாபாசங்களாற் கட்டுப்படுவான் மோக மமதைகளாகிய வன்முடியானது அவனைத் தேகபுத்தியிலிறுக்கி அல்லும்பகலும் விஷயாடம்பரத்திலேயே சேர்ப்பிக்கும். விவேக நேத்திரமு மூடப்படும் அதனால் விதிபூர்வகமான மார்க்கத்திலிருக்காமல் வழிவிட்டுப்போவதால் இருளடைந்த கிணற்றில் விழுந்து திரும்பியெழுந்திருக்க உபாயமறியாமல் துக்கத்தில்முழுகுவன். நீச சாதியின் நித்திய கருமங்களிவ்வண்ணமென் றறியக்கடவாய். வேசைக்கு வைராக்கியமுண்டானதால் தேகக்கட்டையறுக்கும் திருத்தமான வாக்கியங்களாற் றிகழலுற்றாள்.

పింగల ఉవాచ.

శ్లో॥ అహోమేమోహవితతిం పశ్యతావిజితాత్మనః ।
యాకాంతాదసతఃకామం కామయేయేనబాలిశా ॥ 79.

தா.—பொய்யான மோகத்தை நான் விஸ்தரிக்கச் செய்து கொண்டேன். என்னறியாமையை என்னென்றுரைப்பேன். அந்தக்கரணத்தை நியமத்தில் வைக்காமற் போனேன். பிரமை அதிகமாயிற்று. சத்துக்களல்லாதவர்கள்மேல் காமத்தை மனோஹரமென்றுவெண்ணிச் செலுத்தினேன். ஸ்திரிக்குப் புருஷசுகம் வேண்டிய காலத்துப்புருஷன் அருகிலிருந்தால் அபேக்ஷிக்க வேண்டியிருந்தது அப்படி யில்லாதபோது நானபேக்ஷித்தது அவிவேகமாகும். எக்காலும் யான் அசாதுக்களையே பஜித்துவந்தேன்.

శ్లో॥ సంతంసమీపే రమణం రతిప్రదం విత్తప్రదం నిత్యమిమం విహాయ ।
అకామదం దుఃఖభయాధిశోక మోహప్రదం తుచ్ఛమహం భజేజ్ఞా ॥ 80.

தா.—சத்புருஷனுடைய பிராப்தி என் சமீபத்திலிருந்தும் அதை யறியாமல் போனேனே! எவனுடன் நான் ரதிசெய்தேனே அவன் அக்காலத்திலுண்டான காமநோயை நிவர்த்தி செய்தனனேயொழிய மறுபடி அந்நோய்வரவொட்டாது செய்ய அவனுக்குச் சக்தி கிடையாது. ஆதலின் என்றுமழியாச் சுகத்தைத்தர வல்லவன் அலௌகிகனான பகவான் ஒருவனேயாகும். ரதிசுகத்தின்பொருட்டுப் புருஷர் சகல ஐஸ்வர்யத்தையும் சந்தோஷமாக விரயஞ்செய்து ஸ்திரிகளுடன் ரமிப்பர். சர்வ ஜனங்களின் இருதயத்திலிருந்து அவர்களை ரமிக்கச் செய்பவன் பகவான் ஒருவனே. இவ்வண்ணமானவனை விட்ட என்னுடைய இந்த அறியாமையை என்னென்றுரைப்பேன்? காமத்தைக்கொடாத புருஷரைக் காமப் பிராப்தியுடன் தினமும் பஜித்தேன். புருடர்களே தங்கள் காமத்தைத் திருப்திசெய்ய வல்லவரல்லாஞல் என்னைக் காமத்தினின்று மெப்படி விடுதலைசெய்வார்கள். அத்தகைய புருடர் சேர்க்கையென்னும் மோகத்தால், பரமதுக்கத்தை யானடைந்தேன். புருடர்கள் மேலிருக்கும் மோகமானது பயத்திற்கும் சோகத்திற்கும் ஆதிவியாதிகளுக்குங் காரணமாயிற்று.

శ్లో॥ అహో మయాత్మా పరితాపితో వృథా సాంకేత్యవృత్త్యాతి
విగర్హ్యవార్తయా । స్త్రైణాన్నరాద్యర్థతృషోనుశోచ్యాత్
క్రీతేన విత్తం రతిమాత్మనేచ్ఛతి ॥ 81.

தா.—ஜாரபுருஷனுடைய சுகத்தை யிச்சித்த நான் மூடத்தன்மையுள்ளவள். வீண் பரிதாபத்தை யடைந்தேனல்லவா? எனக்கு நானே துக்கத்தை வகித்துக்கொண்டேன். ஸ்திரியினிடம் இச்சை வைக்கும் புருஷர் நராதமர். அதனிலும் பரத்தையர்மீது காதல் வைக்குமவன் அதமாதமனுவான். இவனிலும் கொடியன் கிருபணன். இவ்வண்ணமான புருடர்மேல் நான் இச்சைவைத்திருந்தேனல்லவா? இதனால் வெகு நிந்திதமான விருத்தியை அவலம்பித்தேனல்லவா? வியபிசாரரூபமான யோனித்துவாரா ஜீவனஸ்திதி மிக இழிவானதன்றோ? எந்தப்புருடனுக்குத் தேகத்தை விற்றனனோ அந்தப் புருடன் அத்தியந்த ஈனன், சுகுணமொன்று மில்லாதவன், அன்னோனிலக்ஷணத்தை யென்னென்றுரைப்பேன். விலைமாதரிடம் வித்தமே முக்கியமாகும், அது இல்லாவிடில் காமபூர்த்திசெய்யார்கள். இத்தன்மையோருடன் சுகத்தைக் கோருகிறவன் பரம துக்கத்தையடைவான். ஜாரபுருஷன், முகத்திலும் விழிக்கவொண்ணாது, அவனுடன் சேர்தலுந் தக்கதல்ல. இப்போது இவையாவையும் நினைக்க எனக்கு மிக அருவெறுப்பும் வாந்தியு முண்டாகின்றன. சித்தவிருத்தி மலினமாயிற்று. ஆதலின் புருடன் சாங்கத்தியம் யான் இனி வேண்டேன் வேண்டேன்.

శ్లో॥ యదస్థిభిర్నిర్మితవంశ వంశ్యస్థూణంత్వచారోమనఖైఃపినద్ధం ।
క్షరన్నవద్వారమగారమేతద్విణ్మూత్రపూర్ణంమదుపైతికాన్యా ॥ 82.

தா.—மானிடசரீரம் எலும்புகளின் பஞ்சரம், தொக்கு மயிர் நகங்களாலே மூடப்பட்டும் சர்மத்தால் வர்ணம் பூசப்பட்டும் பிராணு பானவாயுக்களின் சஞ்சாரத்திற்குத் துவாரங்களை யுடையதாயும், குடுமியுடைய சிகாமுடையதாயும், நாடிகளாற் கட்டப்பட்டதாயும், மலமூத்திரந்தங்கும் பாண்டமாகியும் இவைகளுடைய பிரவாகம் துர்க்கந்தத்தை யுடையதாயும், எத்தனைதரங் கழுவினும் நிருமலத்தை யடையாமலு மிருக்கின்றது. இத்தகையதேகத்தை மலபாண்டமென உணராது வேளை வேளைக்கு அதனை ஆலிங்கனஞ்செய்வதிலேயே மோசம் போனேனே!.

శ్లో॥ విదేహానాంపురేహ్యస్మిన్నహమేకైవమూఢధీః ।
యాన్యమిచ్ఛంత్యసత్యస్మాదాత్మదాత్కామమచ్యుతాత్ ॥ 83.

தா.—விதேகபுரத்தில் நான் ஒருத்திதான் மூடத்தனத்தை யுடையவளாகி இருதயத்திலிருக்கும் ஸ்ரீஹரியைவிட்டு அசாதுக்களான மனிதருடன் வியபிசரித்துக்கொண்டிருந்தேன். இவ்வண்ணமான மனிதர் எத்தனைபேருடன் நான் போகித்தேனே அறிகிலேனே! பகவானுடைய ரதியுண்டாகும்போது சாசுவிதமான சுகம் லபிக்கும். புருஷர்களில் புருஷோத்தமரான அச்சுதன் சமீபத்திலிருந்து வீர்யத்தை விடாமல் ரமித்துக்கொண்டு ஆத்மானந்தத்தை யளித்துக்கொண்டிருக்கிறார். இப்படி இருதயத்தி லிருக்குமவனை மறந்தேனல்லவா? காமுகர்களுடைய சேர்க்கையால் துக்கமே மேவியது. இவர்கள்மேல் மூடத்தனத்தால் இதுகாறும் பிரமை வைத்திருந்தேன். இப்பொழுது இவர்கள் நட்பை யறவேதுறந்தேன். அச்சுதனுடைய சேர்க்கை இப்பொழுது எனக்குண்டாயிருக்கிறது. அச்சுதனளிக்குஞ் சுகத்தைப் போகிக்குந்தோறும் என்னுள்ளத்திலதிசயமான வின்பமுண்டாகின்றது.

శ్లో॥ సుహృత్ప్రేష్ఠతమోనాథ ఆత్మాచాయంశరీరిణాం ।
తంవిక్రీయాత్మనైవాహం రమేఽనేనయథారమా ॥ 84.

தா.—இருதயத்திலிருக்குமென்னுடைய நாயகன் சுகப்பிரீதிக்குப் பிரியனான வச்சுதன். அவன் சர்வாத்மன், ஆத்மநாதன், அப்படிப்பட்டவனை நான் விலைக்கு வாங்கிக்கொண்டு பரமானந்தத்தை யடைவேன். பெரிய பிராட்டியைப்போலச் சர்வகாலங்களிலும் சர்வதேசங்களிலும் சர்வரூபங்களுடனும் போகிப்பேன்.

ஶ்லோ॥ కియత్ప్రియం తేవ్యభజన్కామాయేకామదానరాః ।
ఆద్యంతవంతోభార్యాయా దేవావాకాలవిద్రుతాః ॥ 85.

தா.—இருதயபத்திலிருக்கு மச்சுதனைவிட்டு மனிதனை யிச்சிப்பதால் துவிதபயமும் காலபயமும் எப்போது முண்டாகும். எவன் பயத்தினால் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறானோ அவன் தன் மனைவிக் கெப்படிச் சுகத்தையளிப்பான். எல்லோரும் காலநேமியிலகப்பட்டவராதலால் சதானந்தத்தை யளிக்க வல்ல ஒரு மனிதனையுங் காணேன். இனித் தேவர்களும் சுராதிபதியான ஆயிரங்கண்ணனும் மனிதர்போலவே காலநேமியிலகப்பட்டு மரணத்தை யடைகிறார்கள், தங்கள் மனைவியருக்கு எப்படிச் சுகத்தைக் கொடுப்பார்கள்?

ஶ்లో॥ నూనంమేభగవాన్ప్రీతో విష్ణుఃకేనాపికర్మణా ।
నిర్వేదోయం దురాశాయా యన్మేజాతఃసుఖావహః ॥ 86.

தா.—இந்த ஜன்மத்தில் நான் இதுவரையில் செய்தது யாவரும் தூஷிக்கும்படியான துஷ்கர்மமே. ஆயினும் புருஷோத்தமன் என்மீது கிருபைசெய்ததால் இந்தவிவேகம் எனக்கு இப்பொழுதுண்டாயிற்று. பதிதபாவன னெனும் அவன்விருது என்மீது பிரயோஜனத்திற்கு வந்தது. கொடிய துராசை வியபிசாரத்தை யடைந்து யோனித் துவாரத்தால் சமுசாரத்தை நடத்திக்கொண்டு வந்தது. இப்போது எனக்கு வைராக்கியத்துடன் கூடின விசாரணை யுண்டானது ஸ்ரீ ஹரியினுடைய கடாக்ஷத்தினாலன்றோ? ஒருவேளை இது பூர்வ ஜன்ம விசேஷமென்றால் யோனித்துவார கர்மவாசனை எனக்கு வராதிருக்கவேண்டும். அப்படியில்லை, ஆனதால் நான் மகாபாபி. பதிதபாவனனான ஜகந்நாதன் என்மீது கருணைபுரிந்து விவேக வைராக்கியத்தை யருளினான். அதினால் என்னுடைய துராசை என்னை விட்டோடியது. பாக்கியவீனனுக்கு வைராக்கிய முண்டாகாது.

ஶ్లో॥ మైవంస్యుర్మందభాగ్యాయాః క్లేశానిర్వేదహేతవః ।
ఏనానుబంధంనిర్హృత్య పురుషశ్శమమృచ్ఛతి ॥ 87.

தா.—துக்கஹேதுவான துவித கோட்பாடுள்ள ஒருபுருடன் குரோத முடையவனாகி விவேகமற்று மந்த பாக்கியனாவான். விவேகத்தைக் கூடின வைராக்கியத்தை யுடையவன் உற்றார்மேலிருக்கும் சினேகத்தைச் சேதித்து நிஜபதத்தை யடைவான். புருஷன் நிதான

குணத்தை யுடையவளாய் விவேக வைராக்கியங்களைக் கொண்டு பிர சன்னளாகிச் சமாதான மடைவான். பூர்வம் நான் பாக்கிய வீனியா யிருந்தேன். மகா புருஷனால் நான் பாக்கியசாலியானேன். அந்தப் பாக்கியத்தால் எனக்கு வைராக்கிய முண்டாயிற்று. திரிலோகத்தி லும் மேன்மை யடைந்தேன்.

ஶ்லோ॥ తేనోపకృతమాదాయ శిరసాగ్రామ్యసంగతాః ।
త్యక్త్వాదురాశాఃశరణం వ్రజామితమధీశ్వరం ॥ 88.

தா.—பகவான் என் மீது கிருபைசெய்து நிஜவைராக்கியத்தை யெனக் கீந்து எனது துராசையை நீக்கியருளினது மன்றி வேச்யை தர்மத்தையும் போக்கடித்தார். இந்தப் பேருபகாரத்திற்காக நான் நன்றியுள்ளவளாகி ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய கமலபாதங்களைச் சரண மடைகிறேன்.

ஶ்லோ॥ సంతుష్టాశ్రద్దధత్యేత ద్యథాలాభేనజీవతీ ।
విహరామ్యమునైవాహ మాత్మానారమణేనవై ॥ 89.

தா.—கண்ணபிரான் திருப்பாத கமலங்களில் அடைக்கலம் புகு ந்த பின்னர் இந்தப் பிரவியிலேயே சகஜ சந்துஷ்டியாகச் சீவிக்கக் கடவேன். முனீஸ்வரர்க ளனுபவிக்கும் ஆத்மசுகத்தை நான் யென் நாயகரான ஆத்ம ராமருடனே போகிக்கிறேன். பிரமதேவன் முத லாய தேவர்களை யொருவிப் பகவானுடைய பஜனையிலேயே எனக் குப் பிரியமுண்டாயிருக்கிறது. கிருபா மூர்த்தியான ஸ்ரீ ஹரி கர்த்த ராகித் துராசாரமுடைய ஜட ஜீவர்களாகிய எப்போலியர்மீது கிருபாகடாக்ஷஞ் செய்து பவசாகரத்தி னின்றுங் கரையேறச் செய் யும் பேரருளுடையோராதலால் அவரைச் சரண்புகும்படி எனக் குப் புத்தி கொடுத்தருளினர்.

ஶ்லோ॥ సంసారకూపేపతితం విషయైర్ముషితేక్షణం ।
గ్రస్తంకాలాహినాత్మానం కోన్యస్త్రాతుమధీశ్వరః ॥ 90.

தா.—சமுசாரம் பாழ்ங்கிணறுகும், விஷயங்களென்னுங் குருட் டுப் பார்வையால் யான் மந்தபுத்தி யுடையவளாகிக் குருடரில் குருடி யாகிச் சமுசாரமாகிய பாழ்ங்கிணற்றில் விழுந்து வீட்டேன். கற்பனை யென்னுஞ் சலத்தில் மூழ்கிவிட்டேன். விஷயவாசனை யென்னுங் கல் லோலங்களால் கீழ்மேலாகப் புரட்டப்பட்டிருந்தேன். டம்பம் மதம் முதலான ஜலசரங்களா லடியுண்டேன். நாஸ்திக மென்னும் நீர்க்

குமிழிமேலே தோன்றியது. துக்கமென்னுங் கற்களிற் சிக்குண்டிருந்தேன். ஆசையென்னுஞ் சேற்றிலமிழ்ந்திருந்தேன். நிந்தனையென்னுஞ் சூலத்தாற் குத்துப்பட்டுத் துவேஷமென்னுங் கல்லாலடியுண்டேன். காமமென்னுங் கொடியால் அகமும் புறமுங் கட்டுண்டேன். குரோதமென்னும் வலை மேல்விழவே,வியாமோஹம் என்னும் முதலை என்னை இழுத்துக்கொண்டுபோயிற்று. காலமென்னும் மலைப்பாம்பு என்னைச் சர்வாங்கமுங் கடித்து என்னுடலில் அதன் விஷத்தைப் புகட்டியதால், ஸர்ப்பக்கடியினல் விஷமேறினவனுக்கு வெல்லம் கசப்பாயிருப்பதுபோலும், வேம்பு தித்திப்பதுபோலும், ஸ்வரூபநாச ஹேதுவான விஷயபோகங்கள் இன்பமாகவும் அமிர்த இரசமான ஞானம் துக்கமாகவும் எனக் கிதுகாறு மிருந்தது. கிணற்றிற்குள் வாசஞ் செய்பவருக்கு வெளிப்புறந் தெரியாது. கிணற்றின் வெளியிலிருப்பவர்களுக்கு அதினுள் ளிருப்பது புலப்படாது. இவ்வாறு கிணற்றிற்குள் வீழ்ந்திருக்கு மவர்கள் வெளியிலிருக்கு மவரைக் காணார். ஓ! இருடிகேசனே! ஜீவர்களை வெளியிலெடுக்க வுன்னைவிட எவராகிலு முளரோ? மகா பாபியான என் னிருதயத்தி லிருக்கும் ஓ பகவானே! ஓ கிருஷ்ணனே! ஓ நாதனே சமுசார வியாதியை நீக்கி யென்னைச் சீக்கிரத்தில் இரக்ஷிக்க வருள் புரியும்.

శ్లో॥ ఆత్మైవహ్యాత్మనోగోప్తా నిర్వేద్యేతయదాఖిలాత్ ।
అప్రమత్తఇదంపశ్యేద్గ్రస్తం కాలాహినాజగత్ ॥ 91.

தா.—சர்வ பதார்த்தங்களைச் சர்வகாலத்திலும் விசாரித்துப் பார்க்குமளவில் ஆத்மாவுக்கு ஆத்மாவே இரக்ஷகனென்று திருடமுண்டாகியது. திருட வைராக்கியத்தால் இந்திரியங்களுக்குச் சேதனத்வ மில்லாமற் போயிற்று. * கான்ற சோற்றினை ஒருவ னிச்சியாததுபோல விஷயங்களைக் கண்டு ஆசக்தியடையேன். இவ்வுலகமும் திக்குகளும் காலமெனும் ஸர்ப்பத்தால் சூழப்பட்டிருக்கின்றன. தகப்பன் பாட்டன் புத்திர பௌத்திரர்கள் மரிப்பதை எப்போதும் கவனித்துப்பார்க்கில் காலநேமியில் சரா சரங்கள் யாவு முட்பட்டு நசிக்கு மனித்தியத்வம் யாவர்க்கும் நன்கு தோன்றும். இவ்வனித்தியத்வம் மனதிற் பட்ட மாத்திரத்தில் வைராக்கியமுதிக்கும். வைராக்கிய மில்லான் காலனை நிராகரிக்கவல்லவனுகான். மத்தியலோகம், சுவர்க்கலோகம் இவ்விரண்டின் அநித்தியத்வத்தை நன்கு ஓர்ந்தாலன்றி ஜீவன் விச்ரரந்தி யடையான் என்று கீதங்களைப் பாடினுன்ன அவதூதர் சொல்லலுற்ருர்.

---

* கக்கின.

బ్రహ్మణోవాచ.

ஶ்லோ॥ ఏవంవ్యవసితమతి ర్దురాశాంకాంతతర్షజాం ।
ఛిత్వోపశమమాస్థాయ శయ్యాముపవివేశసా ॥ 92.

தா.—இந்தப் பிரகாரமாக அந்த வேசி தன் புத்தியினால் விசாரணை செய்து துக்கத்தைத் தரும் ஆதி வியாதிகளுக்குக் காரணமான பர புருஷ சங்கமத்திலிருக்குந் துராசையைச் சேதித்தாள். அந்த உபாதி ஜன்ம மரணங்களுக்குக் காரணமாகித் துக்கங்களை யனுபவிக்க ஹேதுவாயிருந்தது. விவேக பலத்தால் வைராக்கியத்தைக் கைக்கொண்டு துராசைக்கு மூலகாரணத்தை நீக்கி ஆத்ம சுகத்தை யடைந்து நித்திய சுகத்தை யளித்தவன் தன்னிருதயத்திலிருக்கும் நாயகனென்று தெரிந்துகொண்டு அவனை ஆச்ரயித்து இந்த விகற்பங்களைவிட்டு அனுபவரசத்தால் தத்காலத்திலேயே சுகத்தை யடைந்தாள். சொல்லைக் கைக்கொள்ளச் சொல்போயிற்று. வெட்கத்தைக் கைக்கொள்ள வெட்கம் போயிற்று. திருச்யம் திரூஷ்டாவி னிடமடங்கிற்று. விஷயங்களின் வழி மறைந்துவிட்டது. பாவாபாவங்கள் பரந்தோடின. நான் நீ யென்னும் பாவனை யகன்று சமரசம் சித்தித்தது. இவ்விதமாகச் சமாதி யென்னும் படுக்கையில் நிஜசுகமாகச் சயனித்தாள்.

ஶ்லோ॥ ఆశాహిపరమందుఃఖం నైరాశ్యంపరమంసుఖం ।
యథాసంఛిద్యకాంతాశాం సుఖంసుష్వాపపింగలా ॥ 93.

தா.—ஆசையினால் லோலத்வமும் தீனத்வமும் மமதையும் சோகமும், மஹா தோஷமும் அசேஷ பாவமும், அதர்மமும் இவை யெல்லா முண்டாகும், ஆசையானது இதைத் தீண்டலாம் இதைத் தீண்டக் கூடாது என்னும் பகுத்தறிவை மறைக்கும், காலவேளையைத் தெரிந்துகொள்ளும் சக்தியைக் குன்றச் செய்யும், நீசர் சேவையைச் செய்யும்படி ஏவும், இறந்தவர்களைக் கூடவிடாமல் பிசாசமாகப் பிறக்கச்செய்யும், பெரியோர்களுக்கு ஒருவேளை ஆசை சனிக்கின் அவர்களைக் கூட இழி தொழிலைப் புரியச்செய்யும். ஆசையானது தேவர்களையே தைன்னியர்களாகச் செய்விக்கு மென்றால் இதர ஜனங்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ. ஆகையால் ஆசை சுகமறியாது. எஞ்ஞான்றும் எல்லோருக்குந் துன்பத்தையே யளிக்கும். எவனுக்கு ஆசை சமூலமாகப் போய்விட்டதோ அவனே பரம சுகத்தை யடைந்தவனாவான். பிரமதேவர் முதலானோர் அவன் திருவடிகளை வந்திப்பார்கள். அஷ்டமாசித்திகளு மவனுக் கூழியஞ் செய்யும். சுத்தபாவனை யுண்டாகும். ஆசையற்றவன் வாக்கைப் பூபதியும் சுரபதியும் பரிபாலிப்பர். நிராசையே சத்புத்தி. நிராசையே விவேகநிதி. நிராசையுடையவர்களை நான்கு முக்திகளும் வந்திக்கும். நிராசையே தீர்த்தங்களுக்கெல்லாம் தீர்த்தமாகும். முமுக்ஷுவி

னுடைய அர்த்தமாகும். பாரமார்த்திகத்திற் கிருப்பிடமாகும். நிராசை யுடையவனுக்கு வைராக்கியம் தாசியமாகும். பகவான் இத்தகைய நிராசையுடையவனைப் பார்க்கச் சிந்தித்திருப்பார். நிராசையினிடம் ஆதி (மனோ விசாரம்) இராது நிராசை சச்சிதானந்த பதவியில் கலக்கச்செய்யும். நிராசையுடைய புருடனிடம் பகவான் விரைவாக வந்து தானின்னானென்ற ரூப நாமங்களை மறந்து அவனுக்குச் சேவைதருவார். இப்படிப்பட்ட நிராசையைப் பிங்கலை யடைந்து ஜாரபுருஷ வாஞ்சையை விட்டுப் பரவனத்தை யடைந்தாள். எல்லா ஜாதிகளுக்கும் ஈன வர்ணத்தளாகி நிந்திக்கப் படுவதாகிய கர்மத்தைச் செய்து வந்த அந்த வேசி வைராக்கியத்தால் இவ்வண்ணமான ஸ்திதியைப் பெற்றாள். ஆதலால் நிராசையை விடப் பாரமார்த்திகத்திற் குரிய சாதனம் வேறொன்றுமில்லை. இதர சாதனங்கள் நிராசையை யுண்டாக்கச் சாதனங்களாகும்.

## ௰௧-குரரம்.

శ్లో॥ పరిగ్రహో హి దుఃఖాయ యద్యత్ప్రియతమం నృణాం ।
అనంతసుఖమాప్నోతి తద్విద్వాన్యస్త్వకించనః ॥ 94.

தா.—எவனிடத்தில் பரிக்கிரகிக்கும் சுபாவமுண்டோ அவனுக்கு இரவும் பகலும் துக்கமே சம்பிராப்தமாகும். குடும்ப பரிக்கிரகத்தில் ஆசக்தி யுண்டாகிப் புறாப்பக்ஷிகள் பிராணனை விட்டன. கிரகஸ்தன் வீட்டைச் சம்பாதித்துக் கல்லிலும் மண்ணிலும் மமத்வமுண்டாகிக்கட்டைக்கும் கொம்புக்கும் கலகமுண்டுபண்ணிக்கொண்டு ஆப்தர்களைக் கைவிடுவான். சங்கத்தைவிட்ட சன்னியாசிக்கும் பரிக்கிரகமுண்டாகும், அது எப்படியெனில் சிஷ்ய சம்பிரதாயஞ்சேர்ந்து சாஸ்திர புத்தக சங்கிரக வசமாகி மடத்தினுடைய வாசை சமுசாரத்தை விட்டவனுக்கு முண்டாகும். அந்த மடம் சீடர்களுக்கென் றுரைத்து தைரியத்தை யடைந்து பரிக்கிரகத்தின் உபசமனத்திற்காக அபரிக்கிரகம் செய்வார்கள். இவ்வாறு அத்துறவி, மடத்தின் சிஷ்ய சம்பிரதாய வசமாய் விடுவான். சிஷ்யர்கள் கலகத்தைத் தாங்களே யுண்டாக்கிச் சன்னியாசி பரிக்கிரகஞ் செய்தாரென்றுரைத்து விரோதத்தை யுண்டாக்குவார்கள். பரிக்கிரகித்தவன் கோமண மில்லாதவன். அம்மடத்திச் செடிகளை வைத்துப் போஷிக்குமளவில் யாராகிலும் ஒரு இலையைப் பறித்தால் அச்சன்யாசி அவர்களுடன் சண்டை யிடுவான். இதுதான் பரிக்கிரகமென்னும் விலங்கு. இது எல்லாரையும் துக்கத்தி லாழ்த்திப் பீடிக்கச்செய்யும். இப்படியனுபவ மாகின்றதால் இதையறிந்த ஞாதாக்கள் வைராக்கியத்தை யடைந்து பரிக்கிரக ஆசக்தியை விட்டு அகிஞ்சனத்வத்தை யுண்டாக்கிக் கொள்ளவேண்டும். பிரபஞ்ச மநித்தியமானது, அதிலே சங்கிரகம் எது சாசுவிதமென்று விசாரித்துக் கொள்ளவேண்டும். பரிக்கிரகங்களுக் கெல்லாம் தேகப் பரிக்கிரகம் முக்கியமானதென்று

விவேகிகள் கண்டறிவார்கள். எவ்விடம் தேகப்பரிக்கிரகம் மித்தையாமோ அவ்விடம் அனந்த சுகமுண்டாயிருக்கும்.

ஶ்லோ॥ సామిషంకురరంజఘ్ను బలినోయేనిరామిషాః ।
తదామిషంపరిత్యజ్య ససుఖంసమవిందత ॥ 95.

தா.—குரரங்கள் (கறுப்பு மூக்கும் சிவந்தகால்களையு முடைய அன்னபக்ஷிகள்) வினோதமாக ஓசைசெய்து கொண்டிருக்குந் தருணத்தில் ஒரு மாமிசத்துண்டைக் கண்டன. அப்பக்ஷிகளிலொன்று பறந்தோடி மூக்கினு லெடுத்துக் கொண்டது. இதனைப் பிடுங்கிக் கொள்ள அங்கிருந்த மற்றப்பக்ஷிகள் அதன்பின் பறந்தோட, அப்பக்ஷியும் அந்தத்துண்டைக் கொடுக்க மனமில்லாததாகி இவைகளுக்ககப்படாது விரைவாகப் பறந்துசெல்ல வதைக்கண்ட வப்பக்ஷிகள் அதனைப் பலவாறு ஹிம்சிக்கத் தொடங்கின. சில பக்ஷிகள் அதனை மேலுங்கீழும் பறந்து சூழ்ந்துகொண்டன. சில மூக்கினுல் அதைக் குத்தின. சில இரக்கைகளினுல் அதனை மோதின. வேறுசில அதனை நகங்களாற் கீறின. இந்த வாதனையைப் பொறுக்க முடியாதபோதிலும் வாயில் மாமிசத் துண்டிருந்ததால் அந்தப் பக்ஷியால் கூச்சல் போடவும் முடியவில்லை. மாமிசத்துண்டை யிழந்துவிடவு மனமில்லை. பிறகு பின்வருமாறு அது யோசித்தது. இந்தப் பக்ஷிகள் என்னினமாயிருந்தும் என்னையேன் சிறிதும் சினேகிதபாவமின்றி இவ்வாறு வருத்துகின்றன? என் வாயிலிருக்கும் மாமிசத்துண்டிற் கல்லவா இப்பக்ஷிகள் என்னை இவ்வாறு வருத்தி அபாயத்திற் குட்படுத்துகின்றன? ஆதலால் இம்மாமிசத்துண்டை கீழே போட்டுவிடுவது நலமென்று தீர்மானித்து அவ்வாறே செய்தது. மாமிசத்துண்டு கீழே வீழ்ந்தவுடனே அதனை ஹிம்சித்துக்கொண்டிருந்த அந்தப் பக்ஷிகள் யாவும் அதனைவிட்டகன்றன. பிறகு இந்தப் பக்ஷிகள் அந்த மாமிசத்துண்டைக் கைப்பற்றிக் கொள்ளத் தமக்குள் ஒன்றோடொன்று சண்டையிடத் தலைப்பட்டன. இந்த மாமிசத்துண்டைத் தியாகஞ்செய்த பக்ஷியானது விந்தையாகப் பார்த்துக்கொண்டு தியாகத்தினுற் றனக்கு நேரிட்ட பரமசுகத்தை யனுபவித்துக் கொண்டிருந்தது. மெத்தை மேடைகள் தனந்தானியம் வஸ்திரம் இரத்தினம் பவழம் புத்திரன் பெண்சாதி இத்தியாதி சமுதாயத்தைப் பரிக்கிரகிக்கிறதற்குக் காரணம் தேஹபுத்தி. இந்தத் தேஹபுத்தி அபிமானத்தால் பலப்பட்டிருக்கிறது. ஒரு பெரிய விருக்ஷத்தின் வேரைவெட்ட அது கீழே விழுவதுபோலத் தேகாபிமா

னத்தை விடுபவர்களுக்குப் பிரபஞ்ச மழிந்துபோம். அபிமானதிற்கு ஜீவனம் தேகபுத்தி. தேகபுத்தியினுடைய சேர்க்கை பரிக்கிரகத்திற் கிருப்பிடமாயிருக்கும். இவ்வண்ணமாக ஒன்றிற் கொன்று காரணமாக விருக்கின்றது. இந்த வபிமானம் நீங்கிய வக்கணமே பரமசுக முதயமாகும். இதற்கைய மின்று. தேகாபிமானத்தை விடாவிடில் துக்கமே சம்பவிக்கும். இதி திண்ணம். பரிக்கிரகத்தியாகத்திற்கு முன்பு அபிமான ரகித சித்திபெறல் வேண்டும், இல்லாவிடில் விடம்பனமாகும். அபிமானத்தியாகத்துடன் சகலசுகமும் கைகூடும்.

## உ௰ - பாலகன்.

ஶ்லோ॥ నతేమానావమానాస్తో నచింతా గేహపుత్రిణాం ।
ఆత్మక్రీడఆత్మరతి ర్విచరేదిహబాలవత్ ॥ 96.

தா.—பாலகனுக்கு யான் எனது என்னுமபிமானங் கிடையாது. உயர்வு தாழ்வான அந்தஸ்துகளைப் பாலகன் நோக்குவதில்லை. குழந்தை மானாபிமான மின்றிச் சர்வ காலமும் சுகமாகவே விளையாடிக் கொண்டிருக்கும். பாலகன் இதரமனிதர்மேல் அபேக்ஷையானுகித் தனக்குத்தானே இன்பத்தை யுண்டாக்கிக்கொண்டு வீட்டைப் பற்றியும் தேகத்தைப் பற்றியும் யாதொரு வியாகூலமு மின்றி அபிமானமற்றுச் சுவபாவ மாகவே நிச்சிந்தையா யிருப்பான். இவ்வாறே சாதுக்களும் பிரபஞ்சத்தில் சத்திய புத்தியில்லாத படியால் மானாவமானங்களைச்சமமாகப்பார்ப்பார்கள். வீடு, மனைவி, பிள்ளை முதலானோர் மேல் அவர்களுக் கிருக்குஞ் சிந்தை யனைத்தும் மித்தைவாக்காயிருக்கும். ஏனெனில் தங்கள் உடலில் சத்யத்வபுத்தி யிருக்குமாயின் சிந்தனைக்கு மூலமாயிருக்கும். கற்பனையே சமுசாரபந்தத்திற்கு மூலகாரணமாம். இந்தக் கற்பனை மனதினுடையது. இந்த மனது ஸ்வரூபத்திலைக்கியமானால் பேரறிவாய்ச் சகலவிடங்களிலும் பார்க்கப்படும். சாதுக்கள் இவ்வாறு ஸ்வரூப அனுசந்தானத்தால் தேகாபிமான ரகிதர்களாகிச் சுகித்திருப்பார்கள். இந்தச் சுகப் பிராப்தியைப் பார்த்து மனது முதலான இந்திரியங்கள் உபரதியடைந்து ஸ்புரணமில்லாது விளங்கும். இதை நிவிர்த்தி யென்றுரைப்பர் சான்றோர். அந்த ஸ்வரூபமே மனதிலிருந்து வெளிஸ்பூர்த்தி இல்லாததை வ்யுத்தானதசை யென்று ஸ்திரமாகச் சாதகர்கள் கூறுவார்கள். உப்பு, சலத்துடனே சேர்ந்து சமரசமானாற்போலச் சித்தம் ஸ்வரூபத்தில் ஏகீபாவமாகிச் சகஜமான நிஜரூபத்தை யடைவதாகும். அவ்வண்ணமானவனுக்கு மானாவமான மெவ்விடம்? பெண்டுபிள்ளை முதலானவைகளிலாசை யெவ்விடம்? மனது ஸ்வரூபத்தால் மறைபட்டுச் சமாதானமடைகிறது. இவ்விதம் மனது இல்லாமல் ஒரு மாதவன் புரியுங் கிர்த்தியங்கள் பாலசேட்டைகள் போன்றிருக்கும். அன்னோன் தெய்வயோகத்தால் சலனத்வமுண்டாக விருத்தி சூன்னியனாகி வர்த்திப்பான்.

శ్లో॥ ద్వావేవచింతయాముక్తౌ పరమానందఆప్లుతౌ ।
యోవిముగ్ధోజడోబాలో యోగుణేభ్యఃపరంగతః ॥ 97.

தா.—சிந்தையின் சுழி பெரியதாகும். அதில் பிரம்மாதிகளும் மூழ்கிப்போவார்கள். அந்தச் சுழியில் இருவர் முக்தர் இருப்பார்கள். அவர்களுக்குத் த்விதபாவனையும் மானாபிமானங்களுமில்லை. அகத்திலேயே சுகசம்பன்னரா யிருப்பார்கள், மனதில்லாமல் விவகரிப்பார்கள். அவர்களுள் ஒருவனுக்குத் துக்கம் இனிமேலுண்டாகும். மற்றொருவன் சுகதுக்கங்களை ஜயித்தவன். முற்கூறப்பட்டவன் அறியாமையினால் சுகியாயிருப்பான். மற்றவன் நிஜஞானத்தில் சுகமடைந்து நிலையூன்றியிருப்பான். பாலகனுடைய ஸ்திதியைப் பார்க்குமளவில் அவனுடைய தேகத்தில் வாசனைகள் உள்ளடங்கி யிருப்பதாகத் தெரியவரும், அவை யங்குரித்தால் அபாயத்தை விளைவிக்கும். பிரபன்னர் அப்படியாகாமல் குணாதீதராயிருப்பதால் சுகதுக்கங்களென்னும் வார்த்தை யவர்களுக்குக் கிடையாது. தேகத்தில் ஜீவனிருக்கையில் குணாதீதர்கள் எப்படி ஆவார்களென்றால், சாதகர்கள் சாதுக்களைச் சேவித்துச் சத்வகுணத்தை யடைந்து ஞானத்தைச் சாதித்து ரஜோ தமோர்குணங்களைச் சேதித்து விடுகின்றனர். இதனால் துன்பமான மோஹமமதைகள் அவர்களை விட்டகலுகின்றன. இவ்வண்ணம் உத்தமமான சத்வத்தைப் பெற்று உபசமனத்தை யடைகிறார்கள். விசேஷமாக விறகு எங்கிருக்குமோ அவ்விடங்களில் நெருப்பு உல்லாசமாகப் பிரகாசிக்கும், காஷ்டங்க ளில்லாவிடில் அக்னி தன் நிஜதேஸ்ஸில் ஒடுங்கும். குணசம்பந்தமான அவஸ்தைகளை யோகிகள் இவ்வாறு கண்டறிந்து குணாதீதராகிறார்கள். அவர்களைப் பிரளய காலத்திலும் சம்சாரம் பாதிக்காது. அளவில் சுக ஸ்வரூபானுபவிகளாதலால் தேகத்தோடு கூடினும் தேகாதீதர்களாகிச் சிந்தையென்னும் சுழியி லகப்படார்.

## உக - குமாரி.

శ్లో॥ క్వచిత్కుమారీత్వాత్మానం వృణానాన్గృహమాగతాన్ ।
స్వయంతానర్హయామాస క్వాపియాతేషుబంధుషు ॥ 98.

தா.—தாய் தந்தையர்கள் தங்கள் கன்னிகையான ஓர் குமாரத்தியை வீட்டிற்குக்காவலாக் வைத்துவிட்டுக் குலதேவதை யாத்திரைக்காக வெளியூரிற்குச் சென்றனர். அக்கன்னிகையின் விவாக முகூர்த்தம் முன்னமே நிச்சயிக்கப்பட்டிருந்தது. இவளைக் கொள்

ளப்போகும் தனவந்தர்களான வேதியர் அவள் தாய் தந்தையர்க ளில்லாத காலத்தில் வீட்டிற்கு வந்து "யார் வீட்டில்" என்று வின வினூர்கள். அக்கன்னிகை வெட்கத்தினுல் மௌனத்தையடைந்து தன் முகத்தை யவர்களுக்குக் காண்பிக்காமல் உள்ளிருந்த வண்ண மே அவர்களுக்கு ஆதனம் சந்தனம் புஷ்பம் தாம்பூல முதலியவை யளித்து மௌனமாகவே உபசாரங்களைச் செய்தனள். இதைக்கண் ட பிராம்மணர்கள் கல்லியாணப்பெண் ஒருத்தியே வீட்டிலிருக்கி ருள் என்று தெரிந்து கொண்டார்கள்.

ஶ்లో॥ తేషామభ్యవహారార్థం శాలీన్ రహసిపాణ్డవ ।
అపఘ్నంత్యాఃప్రకోష్ఠస్థా శ్చక్రుశ్శంఖాఃస్వనంమహత్ ॥ 99.

தா.—வந்தவர்களுக்கு அடிசில் நல்கவேண்டிய திருந்ததால் அக்கன்னிகை பானையிலிருந்த அரிசியை எடுத்து உரலில் போட்டுக் குத்தவேண்டியதா யிருந்தது. அரிசி குத்துங்கால் தன் கையிலணிந் திருக்கும் வளையல்கள் கலகலவென ஒலிக்குமேயென் இதைத் தடு க்கும் சூழ்ச்சியை யுன்னலாயினுள்.

ஶ్లో॥ సాతజ్జుగుప్సితంమత్వా మహతీవ్రీడితాతతః ।
బభంజైకైకశశ్శంఖాన్ ద్వౌద్వౌపాణ్యోరశేషయత్ ॥ 100.

தா.—தானணிந்திருக்கும் சங்குவளையல்களின் ஓசை தன்னைப் பார்க்கவந்தவர் காதில் பட்டால் தனக்கு நாணமாகுமென்று சிந் தனை யடைந்து பின்வருமாறு யோசிக்கலாயினுள். "என்கையிலிருக் கும் வளையல்களை ஒடிப்பேனுகில் கல்யாண முகூர்த்தத்திற்கு அசுப மாகும். என்பர்த்தா நூற்றுண்டு உயிருடனிருக்க வேண்டும். ஆத லின் வளையல்களை உடைத்துவிடுவது மூட்த்தனம். ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு வளையலை வைத்துவிட்டு மற்றவைகளைக் கழற் றிப் பத்திரப்படுத்துவதே நன்றெனத் தோற்றுகிறது" என்று அறி யாத கன்னிகையாயினும் நல்ல தீர்மானத்தை யடைந்து அவ்வண் ணமே செய்தாள்.

శ్లో॥ ఉభయోరప్యభూద్ఘోషో హ్యవఘ్నంత్యాస్సశంఖయోః ।
తత్రాప్యేకంనిరభిదదేకస్మాన్నాభవద్ధ్వనిః ॥ 101.

தா.—இரண்டு வளையல்கள் ஓரிடத்திலிருந்தாலன்றோ ஒலியுண் டாகுமென்று நன்குணர்ந்த அம்மாது ஒவ்வொருகையில் ஒவ்வொரு வளையலைத் தவிர மற்றவைகளைக் கழற்றி வைத்துவிட்டு அரிசி குத்த வாரம்பித்தாள். அப்போது ஓசையுண்டாகாமலிருந்தது.

శ్లో॥ అన్వశిక్షమిమంతస్య ఉపదేశమరిందమ ।
లోకాననుచరన్నేతాంలోకతత్వవివిత్సయా ॥ 102.

தா.—ஓ அரசனே! அக்கன்னிகை செய்த ஓர் சூழ்ச்சியால் நான் ஒன்று கற்றுக்கொண்டேன். நீ அரசனென படியால் எல்லாரையுந் தொழிலாளராகச் செய்துகொண்டு "நான் சமர்த்தன், சத்துரு சம்ஹாரன்" என்று கூறுகிறாய். இது கர்வத்தினால் வரும் மித்தியாவாத மாகும். காமக்குரோதாதி பகைவர்களை வெல்லாமல் நான் சத்துரு சம்ஹாரன் என்று கூறுவது ஒவ்வாததாகும். சாஸ்திரங்களிற் கூறப் பட்டுள்ள அரிட்ட்வர்க்கத்தை வென்றானால் சமுசாரத்தில் விரோ திசளிரார். அந்தக்கன்னிகை ஏகாந்தத்தில் செய்த சங்கதி எனக்கு எப்படித் தெரியவந்தது என்று கேட்பாயாகில் சொல்லுகிறேன் கேள். விஜனஸ்தானத்தில் ஆதனத்தில் திருடமாக உட்கார்ந்து குரு வாக்கியத்தில் விசுவாசம் வைத்துத் தத்வத்தியானஞ் செய்யும்போது ஆத்ம பாவனையால் ஜனங்களிடத்திலும் வனங்களிடத்திலும் சஞ் சரித்துக்கொண்டு திருடபாகப் பார்க்கும்போது திருசிய தரிசனத் தில் திருசியத்வ மின்றித் திரஷ்டத்வ முண்டாகிக் குருத்வகுணத் தை யங்கிகரிக்கச் சைதன்னியப் பிரகாசமாக ஜகம் தோன்றிக் கொண்டிருக்கும். இப்படி நிஜதிருஷ்டியால் சராசரங்களில் சஞ்சரிக் கத் தற்செயலாக அந்தக் கன்னிகை தன் வளையல் விஷயமாகச் செய்த சங்கதி யெனக்குத் தோன்றியது. அதை ஸ்வஹிதத்திற் காகக் குறிப்பு வைத்துக்கொண்டேன். இதை இன்னும் விரிவாகச் சொல்லுகிறேன் கேளாய்.

శ్లో॥ వాసేబహూనాంకలహోభవేద్వార్తాద్వయోరపి ।
ఏకఏవచరేత్తస్మాత్కుమార్యాఇవకంకణః ॥ 103.

தா.—பலர் கூடியிருக்குமிடத்தில் கலகம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. இருவர் ஏகாந்தத்திலிருந்தால் வெகுவிதமான சொற்கள் உரையாடுவார்கள். எவ்விடம் வீண்பேச்சால் காலயாபனமாமோ அவ் விடம் ஸ்வகீயபலன் ஒன்று மிராது. ஆதலின் கங்கணங்களைக் கழற் றிய குமாரியைப்போல நான் ஒருவனாகச் சஞ்சரித்துக்கொண்டு வரு கிறேன். ஒருவனா யிருப்பதினாலேதான் ஏகாக்கிர லக்ஷணத்தைச் சாதிக்கிறேன்.

శ్లో॥ మనఏకత్రసంయుజ్యాజ్జితశ్వాసో జితాసనః ।
వైరాగ్యాభ్యాసయోగేన ధ్రియమాణమతంద్రితః ॥ 104.

தா.— வைராக்கியமின்றி அப்பியாசஞ்செய்தால் விஷயங்களென்னுந் திருடர்கள் வெளிவந்து காமத்தில் வீழ்த்தி நிஜஞ்ஞானத்தைக் கொள்ளைகொண்டு போவார்கள். விவேகமென்னுந் தீபத்தை யேற்றி அஞ்ஞானமென்னு மிருளையோட்டி வைராக்கியத்தின் பலத்தால் முத்திரைகள் என்னு முபாயத்தைப்பற்றி, பிராணபானன்களின் வித்தியாசங்களை வெகுகால வப்பியாசத்தினுற் கண்டறிந்து அவைகளைப் பிறகு ஒருமிக்கச்செய்து ஆதனத்தில் திருடமாக உட்கார்ந்து மனதை ஆத்மஸ்தானத்தில் வைக்கவேண்டும். சமதமங்களுடன் பிரத்தியாகாரத்தால் மனதை யேகாக்கிரஞ்செய்து உல்ஹாட யந்திரத்தினுல் ஷிட்சக்கரங்களைப் பேதித்து வைராக்கிய வஜ்ரகவசத்தைத் தரித்துக்கொண்டு தியானமென்னும் வாளைப்பிடித்துச் சந்தேகங்கள் யாவையுந் தக்ஷணத்திற் சேதித்து அச்சிரத்தையைப் போக்கி, நித்திரையைத் தனக்கடிமையாக்கிக் கொண்டு அல்லும் பகலும் சாவதானமாகவிருந்து யோகமென்னும் *துருக்கமேறி ரணரங்கத்தில் வீரனுகிச் சுபவாசனைகளான நிஜபலமானது முன்னே நடக்க ஞான விருத்தி வெளியாகிக் காமாதிபகைவருடன் பொருது அமர்க்களத்திற் பகைஞரை வென்று அநாகத ஓசையை அனுபவித்து ஆத்மாவினிடத்து ஏகாக்கிரமுண்டாகி அகம் மமதை யென்னுங் காவலாளிகளைக் கொலைபுரியல் வேண்டும்.

శ్లో॥ యస్మిన్మనోలబ్ధపదం యదేతచ్ఛనైఃశనైర్ముంచతికర్మరేణూన్ ।
సత్త్వేనవృద్ధేనరజస్తమశ్చవిధూయనిర్వాణముపైత్యనింధనం ॥ 105.

தா.—காமக்குரோதாதிகளென்னுஞ் சூரர்கள் தங்கள் புத்திரர்கள் (விஷயங்கள்) ரணக்களத்தில் விழுந்தனரென்னும் அதிகதுக்கத்தைநாடி மரணோன்முகபாக நின்றுர்கள், துருக்கத்தின் வார்த்தையைக் கேட்டு வீரர்கள் உல்லாச சித்தமுடையவரா யிருந்தனர், ஆயினும் திரும்பிக்காமாதி சூரர் துருக்கத்தைக் கைக்கொள்ள முன்வரப் பெரியதான கஷ்டத்தைப் பார்த்தார்கள்; கர்மங்களுடைய கோட்பாடு, விதிவாதத்தால் மெதுவாகச் சமூலமாகக் களையப்பட்டு ரஜோகுண தமோகுணங்களாகிய தீக்குழியில் மூடப்பட்டு நிவிர்த்தி என்னுங் கல்லால் சத்வகுணம் திருடமாக மறைக்கப்பட்டுப் புறத்துச் சஞ்சரிக்க வல்லமையில்லாமல் மனதென்னுங் கர்ணிகையில் நின்றுவிட்டது இராம இராஜ்யத்தின் களிப்பைப்போல விரோதிகள் யாரும் அகப்படாதிருந்தார்கள், தியானகட்கத்தின் பிடிப்பு விடுபட்டது. சமதிருஷ்டியினுல் வைராக்கிய கவசம் விட்டுப்போயிற்று.

* மலைமேற்கோட்டை.

தியானமும் தியேயமும், தியாதாவும் அகப்படாதிருந்தார்கள். அதனால் தியானமென்னும் வாள் தரிக்கப் படவில்லை, சத்வகுணம் துன்பமான யுத்தசாமக்கிரியைக் கற்றிருந்தது, விரோதிகளில்லாமையால் அந்தச் சாதனைகளை விட்டு விட்டது. ஆத்மா தன்மயமென்னுங் குடையைப் பிடித்துச் சமசாம்ய மெனும் சிம்மாதனத்தின்மீது சகஜசமாதானமாகி உட்காரும்போது ஜீவபாவமில்லாமற் போயிற்று. சத்வகுணம் பாதங்களில் விழுந்து சுவயமாக வுபரமித்தது. எப்படியென்றால், காஷ்டங்களுடைய சேர்க்கையினால் நெருப்புண்டாகிக் காஷ்டங்களெல்லாவற்றையும் எரித்துவிட்டுச் சாந்தியடைவதுபோல வுத்தமமான சத்வகுணந் தலையெடுத்து ரஜோ தமோ குணங்களை நசிக்கச் செய்து தானும் உபசமித்தது. அவ்விடத்தில் ஞாதிருத்வத்தில் ஞானம் லீனமாகிச் சின்மாத்திர பூரணமாகி யிருந்தது.

## உஉ. சரகாரன்.

(வில்லாண்மை யுடையவன்.)

శ్లో॥ తద్వైవమాత్మన్యవరుద్ధచిత్తో నవేదకించిద్బహిరంతరంవా ।
యథేషుకారోనృపతింవ్రజంతమిషౌగతాత్మానదదర్శపార్శ్వే ॥ 10.

தா.—சித்தத்தை நிரோதித்து இப்படிச் சின்மாத்திர பூரணத்தில் அதை வைக்குமிடத்தில் அது சைதன்னிய சுபாவத்தை யடையும். அப்போது உள்ளே பரம சைதன்னியமும் வெளியில் சின்மாத்திர பரிபூரணமுந் தவிர விருத்திக்கு வேறு தோன்றாது. தியானிக்கிறவன் தியானத்தையும் அதற்கு விஷயமான தியேயத்தையும் பார்க்குமளவில் உல்லாசத்தால் மனது உள்ளடங்கும். இது சம்பிரஞ்ஞாத சமாதியாகும். குணங்களில்லாமல் போகானுபவங்களுண்டாகும். அவ்விடத்தைச் சமாதி யென்று அறிவுடையோர் கூறுவார்கள். பிரமம் இந்திரியங்களுக்குத் தோன்றாது. குணங்கள் போயுங் குணங்கள் பூர்க்கின்றன. இது அநுபவிகளுக்கே தெரியுமல்லது வரியாற் சொல்லமுடியாது. இவ்விடத்தில் சாஸ்திர வாதங்கள் பிரயோசனமற்றிருக்கும். வேதங்களும் நேதி நேதி என்றாற்றுகின்றன. யோகிகளுடைய சமுதாயத்திற்குப் புலப்படாது. அநுபவத்தை யுடையவர்கள் தம்முடைய ஸ்வரூப வியக்தியிற் காண்பார்கள். இவ்விடத்தில் ஹேதுமாத்திர திருஷ்டாந்தங்களெல்லாம் சமூலமாக மூழ்கினவாகும். உள்ளும் புறம்பும் சமதரிசனமாகும். இது அநுபவத்தின் நிர்வாணக் குறிப்பு. இந்த இலக்ஷணத்தை மனதிற் றரித்துச் சரகாரனைக் குருவாகச் செய்து கொண்டேன். வில்லை வளைத்து நாணேற்றிப் பாணத்தைச் சந்திக்குமிடத்தில் அநுசந்தானம் திருடமாகின்றது. இவ்வளவுக்கே யவனுடைய பிரபஞ்சபாவனை தட்டுப்படும். பேரி, மிருதங்கவாத்தியங்கள், யானை, குதிரை, காலாட் சைன்னியங்கள் அரசர் முந

லான ரதிகர்கள் சரகாரனுடைய கண்ணிற்கும் புலப்படா. பின்னிட்டுச் சேனாதிபதி யொருவன் வந்து இவ்வழியால் அரசன் போனானென்று கேட்குமளவில், அரசன் போனதும் போகாததும் தான் பார்க்கவில்லை யென்றுரைப்பான். சரகாரனுக்குத் தன் குறிப்பிலிருக்கும்போது மற்றொன்றுந் தெரியாததுபோலச் சித்தத்தை யேகாக்கிரஞ்செய்தால் பிரபஞ்ச திருஷ்டியை வருவிக்க வொண்ணாது. இதைச் சாதிப்பதற்குச் சர்பத்தைக் குருவாகச்செய்து கொண்டேன்.

## உ௩. சர்ப்பம்.

శ్లో॥ ఏకచార్యనికేతః స్యాదప్రమత్తో గుహాశయః ।
అలక్ష్యమాణ ఆచారైర్మునిరేకోల్పభాషణః ॥ 107.

தா.—பாம்பு, சாங்கத்தியத்தைச் சகிக்காது, தனிமையாய்ச் சுகமாகச் சஞ்சரிக்கும். எப்பொழுதும் சாவதானமாக விருக்கும். சுவாசத்தை வீணிற்போகச்செய்யாது. சாதுக்களுடைய இலக்ஷணமும் அவ்விதமாகவே யிருக்கும். அவர்கள் துவித சாங்கத்தியத்தைச் சகிக்காராகி ஏகாந்தத்தில் ஏகாங்கியாய் இருக்க விரும்புவார்கள். பிரஜைகளிட மலக்ஷியமா யிருப்பார்கள். துஷ்ட சாங்கத்தியஞ் செய்யார். தம்மை யொத்தவருடனும் நண்புகொள்ளார். சர்ப்பம் தன் தோலைச் சுழற்றித்தானதற்கு வேறாக நிற்றல்போல யோகிகளும் தேக சங்கத்திற்கு வேறாகவே யிருப்பார்கள். யோகிகள் ஒரு நிமிடமும் வீண்போகாமல் எக்காலமும் தமது அனுசந்தானத்திலேயே இருப்பார்கள். பாம்பு புற்றிலிருந்து பலாத்காரமாக வெளியாகிறது. மார்க்கத்தில் அது முன்னும் பின்னும் சகலத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும். தனது பசியைத்தணிக்கும் வண்ணம் தனக்கு நேர்படும் பொருளைப் பக்ஷிக்கும். அப்படியே யோகிகள் யோகபலத்தால் சனங்களுடைய சமூகத்திலாகிலும் அல்லது தனித்தாயினு மிருந்து சஞ்சரிப்பார்கள். இதர ஜனங்களுடைய சவிகல்ப நிர்விகற்ப விசாரங்களை யறியார்கள். இவ்விதமான யோகியைப் பார்த்து, இவர்கள் கர்ம நிஷ்டர்களென்று சிலர் கூறுவார்கள். சிலர் கர்ம பிரஷ்டர்களென் றுரைப்பார்கள். வேறு சிலர் இவர்கள் ஆத்ம நிஷ்டர்களென்று புகல்வார்கள். பாம்பு பேசவே பேசாது. அப்படி பேசினும் மெல்லிய குரலுடன் அற்பசத்தஞ் செய்யும். அவ்விதமே யோகிகள் வாக்குவாதத்தில் ஆதாரணையார். உள்ளிருக்குங் கிருபாவிசேடத்தால் ஓரோர் வேளையில் மிருதுவானதாகியும், சந்தோஷத்தை யுண்டாக்கத் தக்கதாகியும் மதுரமானதாகியுமுள்ள வசனங்களை யுரைப்பார்கள். இவ்வசனங்கள் அற்பமானபோதிலும் சங்கற்ப விகற்பங்களைப் பரிச்சேதிக்கும். அவைகளின் இலக்ஷணத்தைச் சத்திய சங்கற்பரான சாதுக்களை யறிவார்கள்.

68102
R4
N22

ஶ்லோ॥ గృహారంభోతిదుఃఖాయ నిష్ఫలశ్చాధ్రువాత్మనః ।
సర్పఃపరకృతంవేశ్మ ప్రవిశ్యసుఖమేధతే ॥ 108.

தா.—"உடலிது நமதிடமல வென்றால் பேணவும்படுமோ இதற்கிடமதாம் பிறிதிவு தன்னை" என்று சான்றோர் கூறியிருக்க, மூடர்கள் தம்மனையாதிகளைச் சாசுவிதமென் றெண்ணுவார்கள். கர்பத்திலேயே மரித்து உதித்த பாலகனுக்கு ஜாதக மேற்படுத்தி நாமகரணஞ் செய்வது எப்படி நகைக் கிடமோ அதுபோல மண்ணினாலும், கற்களாலுஞ் சேர்த்துச் சுவரெழுப்பிக் கட்டைகளால் மேல் கூரையைப் போட்டு வீடுகட்டி அதன் நிலையாமையை மறந்து அதை யென்னுடையது உன்னுடையதென் றுரைப்பது மூடத்தனமன்றோ? செல்லுகள் அநாயாசமாகப் புற்றுகளைச் செய்ய அதில் பாம்பு பிரயாசையின்றிக் குடி புகுந்திருத்தல்போலச் சாதுக்களும் தேகாபிமானமும் வீடு என்னு மபிமானமுமின்றி அன்னியருடைய வீட்டில் வாசஞ் செய்து சுக சம்பன்னராயிருக்கவேண்டுமேயன்றித் தமக்கென ஓர் கிருகம் புதுக்கிக்கொள்ளக்கூடாது. இது சத்தியமெனக்கொள்ளவேண்டும்.

ஶ்லో॥ ఏకోనారాయణోదేవః పూర్వాసృష్టంస్వమాయయా ।
సంహృత్యకాలకలయా కల్పాంతఇదమీశ్వరః ॥ 109.

தா.—நாராயண என்னும் பதத்தால் நார்களுக்கு ஆஸ்ரய ஸ்தானமாக இருக்கப்பட்டவனென்றதாகும். நாராயணனே உயிர்களுக்கெல்லாம் உயிரானவன். சகலருக்கும் சுவாமியானவன். பூர்வத்தில் உபகரண சாமக்கிரயை யொன்றுமில்லாமல் அவரே தமது மாயையால் ஜகத்தை நிர்மாணம் பண்ணினார். மாயை தன்னிடம் கணக்கில்லாத ஜீவசாமக்கிரியை வைத்துக்கொண்டதாகி அவைகளைப் பார்த்துக்கொண்டு கிரீடிக்கிறது. நாராயணன் நிஜமாயையை வீக்ஷித்து அதைக் கிரீடிக்கும்படிசெய்து தாம் ஒட்டாமல் அலிப்தராயிருக்கிறார். தண்ணீரிலிருக்குந் தாமரை தன்னை நீர் சூழ்ந்து கொண்டிருந்தபோதிலும் அதில் எப்படி யொட்டாதிருக்கிறதோ அவ்வண்ணமே *சிச்சத்தாவின் வியாபகத்தில் மாயை ஆனந்தத்துடனிருக்கிறது. மாயைக்கெது அதிஷ்டானமோ அதுவே அதற்கு நிவாஸஸ்தானமாகும். இவ்வண்ணமாக நாராயணனே மாயைக்கு நியந்தாவாக விருக்கப்பட்டவன். ரஜோகுணத்தால் சிருஷ்டி செய்து சத்வகுணத்தால் பரிபாலித்துக் கற்பாந்தகாலத்தில் காலரூபனாகி யாவற்றையுஞ் சங்கரிக்கிறான். இதினால் நாராயணன் ஈஸ்வரரூபனென்று சொல்லப்படுவான்.

* சித்தும், சத்துமாயிருக்கும் வஸ்துவியாபகம்.

శ్లో॥ ఏకయేవాద్వితీయోఽభూదాత్మాధారోఽఖిలాశ్రయః ।
కాలేనాత్మానుభావేన సామ్యంనీతాసుశక్తిషు ॥ 110.

శ్లో॥ సత్వాదిష్వాదిపురుషః ప్రధానపురుషేశ్వరః పరావరాణాంపరమ్ ।
అస్తైకైవల్యసంజ్ఞితః । కేవలానుభవానంద సందోహోనిరుపాధికః ॥ 111.

தா.—இவ்வண்ணமாகக் காரியமும் காரணமும் தானேயாகி ஒருவனுன நாராயணன் குணகுணங்களை கிரசித்து இரண்டற்றவனுகிச் சஜாதிய விஜாதிய பேதமில்லாமல் பிரகிருதி புருஷர்களுக்கு ஈஸ்வரனுகி நிர்த்தாரகனுயிருப்பான். பிரகிருதி புருஷர்களை மனதற்ற மனதினுலே யாவன் கற்பித்தானே அவனே ஈஸ்வரன். ஈஸ்வரனுடைய சாமர்த்தியத்தால் பிரகிருதியும் புருஷனும் வர்த்திக்கிருர்கள். பிரகிருதியை யஜிசப்பிக்கும் சாமர்த்தியம் புருஷனுக்குளதாதலால் பிரகிருதியை யவன் பினைவியென் றுரைப்பார்கள். பராபரங்களிற் சேர்ந்த பிரமதேவன் முதலான தேவர்களும் மனு முதலான ஸ்தாவராந்தக ஜீவர்களும் இந்தப்புருஷனுடைய நியமனத்திலிருப்பார்கள். எவனுடைய ஆக்கினையினுல் வாயு தனது மிதந் தப்பாமல் வீசுகிறதோ, சமுத்திரம் தன்னெல்லையைத் தாண்டாமலிருக்கிறதோ, சூரியன் தன் தினமானத்தை யதிக்கிரமிக்காமலிருக்கிருனே, பிராணவாயு பன்னிரண்டங்குலத்தைக் கடந்து நடவாதிருக்கிறதோ மேருபர்வதம் தன்னிருப்பிடத்தை விட்டுக் கிளம்பாதோ அவ்வண்ணமானவன் சுயம் நிராதாரமாக விருந்து விசுவசித்தவர்களுக்கு ஆதாரமாகிருன். சத்வாதிகுண சக்திகள் காலகதியால் பிரகிருதியைச் சூழ்ந்து அதனைச் சமமான ஸ்திதிக்குக் கொண்டுவந்தது. அப்பிரகிருதி ஆலம்விதையில் விருக்ஷம் அடங்கியிருப்பதுபோலக் குணங்களற்ற ஸ்தானத்தில் ஒருமைப்படும், அனேகவிதமான அலங்காரங்களால் பின்னமாகிப் பூர்வரூபமான பொன் எப்படியிருக்குமோ அதுபோலும், குளிர்காலங் கழிந்த பிறகு பீஜங்கள் பூமியில் லீனமாவது போலும் பிரகிருதி லீனமாகிக் கேவலம் சுகமூர்த்தியே மிஞ்ச யிருப்பான். இப்படி நிருபாதிகனுயும், சத்தியஞானுனந்த சுவரூபனுயும் நிருமலனுயுமுள்ளவன் நாராயணனே.

శ్లో॥ కేవలాత్మానుభావేన స్వమాయాంత్రిగుణాత్మికాం ।
సంక్షోభయన్ సృజత్యాదౌ తయాసూత్రమరిందమ ॥ 112.

శ్లో॥ తామాహుస్త్రిగుణవ్యక్తిం సృజంతీంవిశ్వతోముఖం ।
యస్మిన్ ప్రోతమిదంవిశ్వం యేనసంసరతేపుమాన్ ॥ 113.

தா.—தான் தன்னுடைய ஆத்மமாயையைப் பார்ப்பதனுல் அது கிரியாசக்தி யுடையதாகித் திரிகுண வியக்தியினுல் அகங்கார

மூலமாகச் சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறது. ஜகம் உண்டாவதற்கு இதே மூலமாகும். குணகுணக் கோட்பாடுகளால் தேவர் மனிதர் பன்னகர்களுக்கிடமாய் ஊர்த்வமத்திய அதோபாகங்களாக ஜகம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. பிரமாண்டமென்னுஞ் சத்திரத்தில் பிராணிகளுடைய பிண்டங்கள் வர்த்திக்கின்றன. பிண்ட பிரம்மாண்டங்களின் நிதானம் கிரியாசக்தியால் செய்யப்பட்டுளது. ஜீவன் சமுசாரம் செய்யும் பொருட்டு ஆறுவிகாரங்களைச் சரீரத்திலுண்டாக்கி அதன்மீது பசிதாக முதலான ஆறு லக்ஷணங்களைச் சிருஷ்டித்திருக்கிறான். இந்தக்கிரியாசக்தி சூத்திரத்தினால் ஜகம் இவ்விதமாய் நடந்து வருகிறது. இதனில் திடமான கட்டுத் தேகாபிமானம், மாயை, இதனைச் சனிங்களுக்குக்கொடுத்து அநிவாரமான வாசனையை யுண்டாக்கிச் சமுசாரத்தில் பிரவிர்த்திக்கச் செய்து நானுயோனித் துவாரமாக ஜனிக்கும்படி செய்விக்கிறது. தந்தையின் சுக்கிலமும் தாயின் சுரோணிதமும் ஜடாக்கினி ஜ்வாலையினால் வெகுகாலம் சேர்க்கப்பட்டு அவயவாங்குரங்களுண்டாகிக் கரசரணுதிகளுடைய தேகத்தை யடைந்து வயிற்றில் கர்ப்பமாகவாகின்றன. இவ்வித கருப்பாசயப்பையில் ஜீவன் தங்கியிருக்கும்போது நானுவித துக்கத்தை யனுபவிக்கவேண்டியதா யிருக்கிறது. அத்துயரத்தை யெண்ணுங்கால் அளவிலாப் பயமுண்டாகிறது. யோனித் துவாரமாக ஜனிப்பது ஜீவனுக்குக் கொடிய நரகமாகும். இப்படி உலகில் ஜன்மித்து சுவர்க்கமென்னும் சிறைச்சாலையில் பிரவேசித்தால் தேகாபிமானத்தால் கீழே விழாதிருப்பனே? சுகதுக்கங்களின் சேர்க்கையால் திரிகுணங்களென்னும் விலங்கு வாய்த்திருக்கிறது. இந்தவிலங்கினால் கட்டுப்பட்டு அநேக துக்கங்களை யனுபவித்தது போதும். அவித்தையை யுலகத்தார் விடார். இது மாயையினுடைய மகத்தான வேலையாகும். ஓ அருசுனே! நீ அனுதாபத்தைக் கொண்டு அபிமானமென்னுந் தர்பத்தைச் சேதித்தால் உனக்குப் பயமிராது உன்னுடைய ஸ்திதிதிரும்பும் சிச்சத்தி பிரகடித்தபோது அவித்தையென்னு மிருள்போய் ஞானமென்னும் சூரியனுதயமாவான். தேகாபிமான ரகிதத்துடன் காமாதி பகைஞர்கள் நாசமுறுவார்கள். அதற்குத் திருஷ்டாந்தம் ஒரு புருஷனைச் சிரச்சேதஞ் செய்தால் கைகால்கள் தமக்குத் தாமே விழுந்து விடுகின்றன போலும் யென்னும் இந்தச் சம்வாதத்தால் இருவரும் பிரம்மானந்தத்தை யடைந்தார்கள்.

## ௨௪-சிலந்திப் பூச்சி:

ஶ்லோ॥ యథోర్ణనాభిర్హృదయా దూర్ణాం సంతత్య వక్త్రతః ।
తయాపహృత్య భూయస్తాం గ్రసత్యేవం మహేశ్వరః ॥ 114.

தா.—சிலந்திப் பூச்சி தனது சுபாவத்தால் இருதயத்திலிருக்கும் நூலை முகத்திலிருந்து வெளிக்கெடுத்து அதனை விஸ்தாரமாகச்செய்து தன்னுடைய லீலையால் அதின் பேரிலேயே விளையாடிக்கொண்டிருக்கும். நூலை விஸ்தரிக்கச்செய்து விளையாடுவது பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொண்டு பின்பு தன் இருதயத்தில் நூலை இழுத்து அடக்கிக்கொண்டு அத்துவித கலையைக் காண்பிக்கும். இவ்வண்ணமாகச் சர்வேசுரன் ஒருவனே யிருந்து ஜகத்தை யுண்டாக்கிக் கடைசியில் சம்ஹரித்து நிஜாத்ம பாவனையால் நிர்விகாரனாயிருப்பான். இந்த இலக்ஷணத்தின் நிர்த்தாரணையைப்பற்றிச் சிலந்திபூச்சைக் குருவாகச் செய்து கொண்டேன்.

ஶ்லோ॥ యత్ర యత్ర మనో దేహీ ధారయేత్సకలంధియా ।
స్నేహాద్ద్వేషాద్భయాద్వాపి యాతి తత్తత్సరూపతాం ॥ 115.

தா.—மனோவாக்குக் காயங்களால் எந்தவஸ்துவைப் புருஷன் ஏகாக்கிரமாகத் தியானிக்கிறானோ அந்த ரூபமே தானாவான். சிநேகத்தினாலாகிலும் பயத்தினாலாகிலும் அல்லது துவேஷத்தாலாகிலும் எவனுக்குத் திருடமான தியான முண்டாகிறதோ அவன் தியானிக்கப்படும் பொருள் தானாவான் என்பது நிச்சயமாகச் சொல்லக்கூடும்.

ஶ்லோ॥ కీటః పేశస్కృతం ధ్యాయన్ కుడ్యాం తేన ప్రవేశితః ।
యాతి తత్సాత్మతాం రాజన్ పూర్వరూపమసంత్యజన్ ॥ 116.

தா.—குளவியானது புழுவைக் கொண்டுவந்து மண் கூண்டில் வைக்குமளவில் அந்தப்புழு மாணபயத்தால் நிரந்தரம் குளவியையே தன்மனதில் வைத்துக்கொண்டிருக்க அந்தத் தீவிரதியானத்தால் கீடசரீரத்தைவிட்டுக் குளவியாகிக் கூண்டினின்றும் வெளியே பறந்துபோவதை நாம் கண்டிருக்கிறோமல்லவா! குளவி ஜடபதார்த்தத்தையொத்தது, கீடமும் அவ்வண்ணமானதே. ஆயினும் குளவியைத் தியானிக்கக் கீடம் குளவி ரூபத்தை யடைகிறது. பகவான் சடபதார்த்தமல்லன். அவன் பிறப்பிறப்பில்லான், சித்ரூபன், சுகமளிக்கும் தாதா. அதிகாரியான சேதனனும் ஞாதா. ஒருவன் பகவானைத் தியானித்தால் அவனும் பிறப்பிறப்பில்லானாகிச் சித்ரூபமடைந்து சுகஸ்வரூபமாவனென்பதற்குத் தடையில்லை. கீடத்திற்குக் குளவி வடிவம் வருவது தீவிரதியானத்தினாலேயே. விசாரிக்குமளவில இரண்டும் மூடங்களே. ஜடம் ஜடத்தை வேதிக்கிறது. பகவத்தியானம்

அவ்வண்ணமான தல்ல. தியானிக்கிறவன் பகவதம்ச ரூபமுடையவ னுகையால் தியானத்தால் பிரமை மாத்திரம் நசித்துப்போக அனுயாசமாக அந்த ரூபத்தை யடைகிறுன். எவனுக்குச் சைதன்னிய ஞான மில்லாமல் தேகவிருத்தி யுண்டாயிருக்கிறதோ அவன் பகவத் பிராப்தி யடையமாட்டான். அவனுடைய பிறப்பும் அவனுடைய தியானமும் அவனுடைய ஞானமும் யஜனயாஜனங்களும் தர்மாசரணங்களும் வியர்த்த மாய்விடும்.

శ్లో॥ ఏవంగురుభ్యఏతేభ్య ఏషామేశిక్షితామతిః ।

స్వాత్మోపశిక్షితాంబుద్ధిం శృణుమే వదతః ప్రభో ॥ 117.

தா.—ஓ அரசனே ! இத்தனைக் குருக்கள்களால் என்விவேகத்தைக் கொண்டு நானிவைதைக் கற்றுக்கொண்டேனே அதையுனக்குரைத்தேன். நிஜபுத்தியினுடைய வியுத்பத்தியினுல் ஒருயுக்தியை நான் கற்றுக்கொண்டேன். அதையுனக் கனன்னிய பிரீதியுடன் சொல்லுகிறேன். இருபத்துநான்கு குருக்களுக்கெல்லாம் குருவானது விவேகவைராக்கிய விசாரணையேயாம். இதற்கு நிலையானது இந்த நரதேகம், அதற்காக இந்தத் தேகத்தை நான் குருவாகச் செய்து கொண்டேன்.

శ్లో॥ దేహోగురుర్మమవిరక్తివివేకహేతు

ర్బిభ్రత్స్మసత్త్వనిధనంసతతార్త్యుదర్కం ।

తత్త్వాన్యనేనవిమృశామి యథాతథాపి

పారక్యమిత్యవసితో విచరామ్యసంగః ॥ 118

தா.—அத்தேகம் இரண்டு பிரகாரமாகக் குருவாயிருக்கும். தேகத்திற்குச் சமமான கெட்டபதார்த்தம் உலகில் எங்குமில்லை. அதைப்போல நல்லபதார்த்தம் எவ்வுலகிலும் கிடையாது. கெட்டதைவிடவேண்டும் அப்போது தான் மோக்ஷசுகம் கைகூடும். இந்தத் தேகத்தை நல்லதென்று போகித்தால் அவசியம் நரகத்திற்குப் போகவேண்டியது. இதைவிடாமலும் போகிக்காமலும் மத்தியபக்ஷமாகப் பங்கிடுமிடத்தில் ஆத்மசாதனத்திற் கனுகூலமாகும். பாரமார்த்திகத்தைப் பெற நாட்டங்கொண்டாராகி வீட்டில் வசித்துக் கொண்டு தேகாசக்தி இலக்ஷணம் புத்தியிற்படவொட்டாமல் தேகம் நிலையற்றதென்றெண்ணி அநித்தியமானவதின்மேல் ஆசைவையாது முமுக்ஷுக்களாய்ச் சஞ்சரிக்கவேண்டும். எவனுக்கு இவ்வித விரக்தி யுண்டாகிறதோ அவனை விவேகியென்று தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வண்ணமாக விவேக வைராக்கியவிரக்தி நரதேகத்தில் தானுண்டாகும். மற்றெந்தத் தேகத்திலும் இவ்விவேகமுதியாது. கேவலம் சிச்ஞேதரங்களுக்கே இந்தத்தேகத்துடன் வியவசாயஞ்

செய்து கொண்டிருப்பார்கள். பிரம்மசாயுஜ்யத்தையடைய இந்தத் தேகம் நிதானமாகவிருக்கும். இதற்காகவே தேவர்கள் மானிட சென்மம் எடுக்க விரும்புகிறார்கள். நரதேகம் பாவனமானது என்று எண்ணுங்கால் வெகுநிந்தியமாகும். யோனித்துவார மாக ஜனனமடைந்தது மரணமடையும். இதற்கையமில்லை. கர்ப் பத்திலிருக்கும்போதே மரணத்திற்குச் சூசனையுண்டாகும் தேகத் திற்கு நித்தியம் மிருத்தியு உண்டாகிக் கொண்டிருக்கப் பாலப்பருவத் தைத் தாண்டி யௌவனப்பருவத்தை யடையும்போது தன் மர ணத்தைமறந்து சாதுரியமும் லௌகிக யூகையுமடைந்து நான் பூரணபலசாலியானேனென்று கர்வத்தையடைவது வெகு தவறு. யௌவன தசைக்குப் பின்பு கிழத்தனம்வந்து மரணகாலம் நெருங் கும். மிருத்யு வரும்பொழுது உடல் நடுக்கலுறும் மனது சித றும் கண்கள் பஞ்சடையும் பற்கள் விழுந்துவிடும். இரண்டு காது களும் செவிடடையும் உபசாரங்கள் சகியா பக்கத்திலிருக்கும் சனங்கள் இந்தக் கிழவன் இன்னும் சாகவில்லையா என்றுகேட்பார் கள்; சர்வாங்கங்களிலிருக்கும் நாடிகள் தளர்ந்து பயனற்றனவாகும். மரணம் வராத வீட்டில் ஜரையின் விடம்பனம் சொலற்கரிது. தாரா புத்திரர்கள் இஷ்ட பந்துக்கள் முதலானோர் விமுகராவார்கள். பிறந்தது முதற்கொண்டு யாவர் பரிபாலிக்கப்பட்டனரோ அவரே தூரமாவார்கள். கிழத்தனம் வரவே அவன் பேச்சையொருவரும் கேளார்கள், இதுமாத்திரமன்று பரிகாசஞ்செய்வார்கள். வயோதி கர்களைக்கண்டால் நாய்களும் குலைக்கும். ஆசீர்வாதஞ்செய்தது பலிக்காவிட்டால் உலகோர் நிந்திப்பார்கள். ஆதலால் வயோதி கத்தின் துன்பமித்தன்மையதென நன்குணர்ந்து தாருண்யதசையி லேயே ஜாக்கிரதையடையவேண்டும். தேகம் ஆறு விகாரங்களு டன் கூடியது. ஒவ்வொரு விகாரத்தில் கோடியனர்த்தங்கள் கூடி யிருக்கும். நெருப்பின்மேல் நெய்யின் தாரையைப்போலப் பசி தாக முதலானவை இத்தேகத்திலுள்ளடங்கியிருக்கின்றன. இந்த விஷயபோகங்களுக்கு மூலம் தேகத்தின்மீதிருக்கும் மமத்வம். இம் மமத்வம் அதிகரிக்கப் பிரபலமான துக்கம் நேரிடும். தேகத்தின் கூட்டுறவு துக்கத்தையே யளிக்குமாதலால் அதின்மீது ஆசைவைக் கக் கூடாது ஆதலின் தியாஜ்ஜிபாம்சத்தை இத்தேகம் நமக்குக் கற்றுக்கொடுத்து விரக்திக்கு ஹேதுவானபடியால் இதை நான்குரு வாக்கிக்கொண்டேன் இது வொருபக்ஷம். தேகமிருந்தாலன்றிச்

சாதனையைக் கொள்ளவும் அதினால் அவினாசபதவியை யடையவு முடியாதாகையால் இத்தேகத்தை நான் குருவாக்கிக்கொண்டேன் இது இன்னொருபக்ஷமாகும். இந்தத் தேகம் நமக்குபகாரியும், அபகாரியு மாகும். இதை நன்கு விசாரித்துத் தன் இதத்தை யெவனொருவன் சாதுரியத்துடன்தேடிக்கொள்வானோ அவனே தன்னியனாவான். தத்வ விசாரணை செய்யுங்கால் தேகத்திற்கு மூலம் அஞ்ஞானமென நன்கு புலப்படும். நிஜரூபம் காண்கிலாமை பிரகிருதி சம்பந்தமாகும். பிரகிருதி திரிகுண சூத்திரத்துடன் கூடினது. திரிகுணம் திரிவித அஹங்காரங்களுடன் கூடினது. இவைகளால் மகா பூதங்களான விகாரங்களுண்டாயின. இப்பூத விகாரங்கள் மூலமாகத் தேகத்திற்கு இந்திரிய வியாபாரங்களுண்டாயின. இது பிரம்மாண்டத்தினுடைய படாடோபமாகும். இவையாவும் ஆரோபமெனவறிக. கயிறு எக்காலும் பாம்பானதின்று. ஆனால் பாம்பாகக்கண்ட பிராந்தி கானல் நீர்போலன்றோ? தேகபாவமில்லாவிடில் ஆரோபமுண்டாகாது. இனி அபவாத இலக்ஷணமெப்படி யென்றால் தேகம் பஞ்சபூத சம்பந்தமானதால் அதை நான் என்பது பொய். தேகம் மலினமானது. நான் சுத்தனாதலின் அது எனக்கு விரோதமானது. ஜடமானபிருதுவி நானல்ல இளகலான ஜலம் நானல்ல தகிக்குங் குணமுடைய வக்னி நானல்ல சஞ்சலமான வாயு நானல்ல சூனியமான ஆகாயம் நானல்ல திருசியத்தினால் அகங்காரம் நானல்ல பரிச்சின்னமான ஜீவன் நானல்ல மித்தையான மாயை நானல்ல, நிலையில்லாத் தேகம் நானல்ல பாதகத்வமான விஷயங்கள் நானல்ல. இந்தத் தத்வங்களுக்கும் எனக்கும் சம்பந்தமுமில்லை. பிரம்மாஸ்மி என்னும் அபிமானம் அம்ஸபாம். அது அம்ச சன்னியாசிகளால் மனனஞ்செய்யப்படும். அது சத்துவாவஸ்தையின் சாதனை. இந்த வபிமானங்கள் நானல்ல. தத்துவங்களுடைய அனுவாதமெல்லாம் என்னிடத்தில் அபவாதமே. இது என்னுடைய விவேகத்தின் ஞானமாகும். உன்னுடைய அனன்னியத்வத்தைக் கண்டு இவைகளை நான் உனக்குரைத்தேன். இவ்வண்ணம் ஒருமைப்பட்ட சம்வாதத்தால் இருவரும் சுத்த போதத்தில் நிலைமைபெற்றுக் கைதட்டிப் பகவதனுபவானந்த கல்லோலத்தில் பிரமசுகத்தைக் கண்டார்கள். இந்தத்தேகம் இவ்வளவு உபகாரமானது. ஆனால் இதற்குச் சமான நண்பன் இம்மேதினியில் ஒருவருமில னென்று தேகத்தைப் பத்திரப்படுத்த யத்தனிக்கில்

அதனால் விளையும் விபரீதத்தை யென்னென்றுரைப்பேன். நாய் நரிகளினுடைய வாகாரமானது அக்னிபகவானுடைய யக்யு சிஷ்டத்திற் குதவுமா? ஆனதால் ஓ யதுமகாராஜனே! நான் தேகத்தின் மீது ஆசையை வைத்திலனுகிச் சங்கத்தைவிட்டு ஆத்ம ஸ்திதியில் போதாகாரனுகி இப்புவியில் சஞ்சரித்துக்கொண்டு வருகின்றேன்.

శ్లో॥ జాయాత్మజార్థపశుభృత్యగృహాప్తవర్గాన్
పుష్ణాతియత్ప్రియచికీర్షయావితన్వన్ ।
స్వాంతేసకృచ్ఛ్రమవరుద్ధధనస్సదేహః
సృష్ట్వాస్యబీజమవసీదతి వృక్షధర్మః ॥ 119.

தா.—இந்தத் தேகம் எக்காலும் விடய போகங்களையே நச்சி நரகிலாழ்த்தும் நாரியர் நல்கும் சிற்றின்பத்தை நுகர்வதற்கே விரைந்து செல்லும். இச் சிற்றின்பத்தி னிமித்தம் புருடர்கள் சர்வ பொருள்களையும் இழந்து விடுகிருர்கள். ஸ்திரீயைக் கைபிடித்த பிறகு பிரபஞ்ச துக்கங்க ளனேகமாக உண்டாம். ஸ்திரீயுடன் போகிக்குப்பொருட்டு வீடும் அவ்வீட்டில் தானிருக்கும் பொருட்டுத் தன் தான்னியமு மின்றியமையாதனவாகும். குழந்தைகள் பிறந்தவுடன் அவைகளை யிரக்ஷித்து வளர்க்க ஏவலாளர்கள் முதலானுர்களைச் சம்பாதித்த லவசியமாகும். இவ்வாறு தன்னுல் போஷிக்கப் பட்டவர்களுடைய இரக்ஷணைக்காகத் திரைகடலோடியும் திரவியம் தேட வேண்டி வரும். புருஷன் தன்னுடைய தேகத்திற்குச் சுகத்தைக் கொடுக்கக் கோரி அனேக துக்கங்களைச் சம்பாதித்துக் கொள்ளுகிருன். தேகாபிமானத்தால் ஜனங்கள் மூர்க்கராகி வீணுசைகளில் விழுவார்கள். தேக சுகத்தைப்பற்றிப் பரசுகத்தைக் கைவிடுவார். இவ்வாறு தம்முடைய சாச்வித ஆத்ம சுகமான பிரயோசனத்தை முற்றிலும் மறந்து தமது வீடு மனை தனம் பெண்டு பிள்ளை இவைகளின் மேல் மிகுந்த ஆசையை வைத்துப் பித்தேறி நிஜமான தம்முடைய பிரயோஜனத்தைப் பாரார். இந்த வாசனையே யவனிடத்தில் மேலிட்டிருப்பதால் அந்தியத்தில் வேறுதேக மெடுக்கும் வரைக்கும் இதுவே பீஜமா யிருக்கும். செடியின் விதை பூமிமேல் வீழுந்து தண்ணீர் முதலாய கூட்டுறவால் திரும்பிச் செடியாகின்றதுபோலத் தேகவாசனையானது வேறு தேகங்களை யெடுக்கச் செய்யும்பொருட்டுத் தேகத்திலிருக்கிறது.

ஶ்லோ॥ జిహ్వైకతోఽముమపకర్షతి కర్హి తర్షా
శిశ్నోఽన్యతస్త్వగుదరంశ్రవణంకుతశ్చిత్ ।
ఘ్రాణోఽన్యతశ్చపలదృక్క్వచకర్మశక్తి
ర్బహ్వ్యాస్సపత్న్య ఇవగేహపతింలునంతి ॥ 120.

தா.—சிங்குவைக்குரசனத்தில் பிரீதி, தாக முண்டாகும்போது தண்ணீர் முதலானவைகளை வாயினாலருந்தும். சிச்னத்திற்குரதி சுகமிஷ்டம், ஸ்திரீகளுடன் கூடி ரமிக்க வபேக்ஷிக்கும். தொக்கு இந்திரியத்தின் மிருதுவாயிருக்கும் பொருள்களின் மேல் விருப்பம். உதரத்திற்கு அன்னத்தின் மீது பிரீதி. காது மதுரமான ஓசையையும் இனிய கானங்களையும் கேட்க விருப்பங்கொள்ளும். மூக்குப் பரிமளத்தை யபேக்ஷிக்கும். நயனங்கள் நல்ல ரூபங்களைக் காண விரும்பும். கைகள் நானாவிதமான லீலைகளைப் புரிய இஷ்டங்கொள்ளும். கால்கள் நடக்க விரும்பும் இவ்வண்ணமாக இந்திரியங்கள் வெகுவிதங்களாக விஷயாசக்தியை யுடையனவாய் வாசனைகள் த்ருடமாகித் தேகாந்தரப் பிராப்தி யுண்டாகின்றது. ஆகவே விஷயத் தியாகஞ் செய்யும் பொருட்டுத் தேக சங்கத்தை அவசியம் சேதிக்கவேண்டும். இந்த அர்த்தத்தில் மலினவிஷயங்களை விட்டுச் சுத்த விஷயங்களை நாடில் மானிடதேகம் நலமுறும். ஏனெனில் உடலிலிருந்து ஞானப்பிரிவு உண்டாகின்றது.

ஶ்லோ॥ సృష్ట్వాపురాణివివిధాన్యజయాత్మశక్త్యా
వృక్షాన్సరీసృపపశూన్ఖగదంశమత్స్యాన్ ।
తైస్తైరతుష్టహృదయః పురుషంవిధాయ
బ్రహ్మావలోకధిషణంముదమాపదేవః ॥ 121.

தா.—நாராயணன் தனது மாயையால் அனேகவித சரீரங்களைச் சிருஷ்டித்திருக்கிறார். இவைகளில் சில இம்மண்ணுலகில் சஞ்சரிக்கின்றவைகளாயும் சில ஆகாயத்தில் வர்த்திக்கின்றவைகளாகவும் சில சலத்தில் வசிக்கின்றவைகளாகவும் சில அரசங்களாவுமிருக்கின்றன. விருக்ஷங்கள் பசுக்கள் சர்ப்பங்கள் ஈக்கள் இராக்கதர் பிசாசங்கள் கொக்குகள் அன்னங்கள் மீன் ஆமை முதலான ஜீவராசிகள் ஜனிக்கும் யோனித்துவாரங்கள் 84 இலக்ஷம். இவைகளைச் சிருஷ்டித்த பிறகு ஜீவகோடிகள் நிஜப்பிராப்தி யடைவதற்கு

ஹேது ஒன்று மில்லையே யென்றிரக்கங்கொண்டு வேதங்களை மிக ஆதாரணையுடன் நாராயணன் நிருமித்தார். பலர் ஞானத்தை யறிந்தும் விதேகஸ்திதியை யடையவில்லை. ஆகாரம் நித்திரை பயம் மைதுனம் இவை மனிதருட்பட எல்லாப் பிராணிகளுக்கும் பொது. ஆயின் மனிதன் ஒருவனுக்கே பகுத்தறிய ஞான மிருப்பதை நாராயணன் கண்டு களித்துப் பிரம்ம ஞான முண்டாவதற் கதிகாரத்தையும் தம்முடைய பிராப்தியும் அவனுக்குண்டாகும்படி க்ருபை செய்தருளினன். மானிட வடிவத்தை யடைந்து பிரமஞானத்தைச் சாதிக்காதவன் விஷயானுபவத்தில் சஞ்சரிப்பான். இம்மானிட தேகத்திற் பிறந்த ஞானத்தினாலேயே சத்தியமானதும் ஞான ரூபமானதும் ஆனந்தமுமான பதவியை ஒருவ னடையக்கூடும். சர்வேஸ்வரன் தன் கிருபா நோக்கினல் மானிடர்களை யிவ்வளவு அதிகாரிகளாகச் சிருஷ்டித்திருக்கின்றான். இத்தேகமொன்றால் பிரம்ம ஞானத்தை யடையக் கூடுமே யல்லது வேறு தேகங்களா லடைதல் முடியாது.

శ్లో॥ లబ్ధ్వాసుదుర్లభమిదం బహుసంభవాంతే
మానుష్యమర్థదమ నిత్యమపీహధీరః । తూర్ణంయతె
తనపతెదనుమృత్యుయావన్నిః ।
శ్రేయసాయవిషయః ఖలుసర్వతఃస్యాత్ ॥ 122.

தா.—எண்பத்துநான்கு இலக்ஷம்யோனிகளில் ஒவ்வொன்றில் கோடிகோடிமுறை ஜீவன் ஜனித்து அவசிதமாகப் பாக்கியவிசேஷத்தால் இந்த நரதேகம் அவனுக்கு சம்பிராப்தமாயிற்று. இந்த ஜன்மம் அருமையாகக் கிடைத்ததென்றெண்ணிப் பாரமார்த்திகத்தைப் பெற யத்தனிக்கு மவனுடைய பிதுக்கள் இதைக்கண்டு உற்சவங்கொண்டாடுவார்கள். இங்ஙன மருமையாகிக்கிடைத்த மானிடதேகத்தைக்கொண்டு முதல்விஷயபோகங்களை யனுபவித்துப் பிறகு பாரமார்த்திகத்தைச் சாதிக்கலாமென்று எண்ணக்கூடாது. ஏனெனில் மிருத்யு அனிவாரமாகிக் குணதோஷங்களை யெண்ணமலும் தேசவிசேஷங்களை நோக்காமலும் இரவென்றும் பகலென்றும் பாராமலும் இவ்வுடலை நாசஞ்செய்யும். தேகம் சனித்தது முதல் காலன் பின்தொடர்ந்து கொண்டேவருகிறான். இவ்வாறு மிருத்யு அதனை விடாமல் பின்றொடர்ந்துவர ஜீவன் விஷயபோகங்களை நச்சுவது பாம்பின்வாய்ப் பட்டதேரை தன் மீது அப்போது

உட்கார்ந்த ஈயைப் பக்ஷிக்க இச்சிப்பது போலவாகும். தேகவ நித்தியத்தை நோக்காது விஷயசுகத்தை விரும்புவோன் தன் வாணாளை வீணாளாக்கிப் பாரமார்த்தத்தை யிழந்து சம்சாரசாகரச்சுழலிற் சிக்குறுவான். விவேகியானவன் இதை யோர்ந்து தன் தேகத்தைக் கொண்டு பாரமார்த்திகத்தைப் பெற வூக்கமுடையனாகி நித்திரையை வென்று, அமர்க்களத்தில் போர்புரியுஞ் சூரன் தன் பகைவருடைய சக்கரத்தைச் செயிக்க எவ்விதமாகப் போரவல் கொண்டு சுருசுருப்புடன் போர்புரிவனோ அவ்வண்ணம் அல்லும் பகலும் அனவரதம் ஆத்மசிந்தனையை வேகத்துடன் சாதித்தல் வேண்டும். ஆத்மலக்ஷியத்தைச் சாதிப்பதற்கு மனதைச் சாவதானப்படுத்த வேண்டும். இதின் மூலமாகச் சாயுஜ்யச் சேர்க்கையைச் சாதிக்க வேண்டும். ஏகபுத்திரனான இராஜகுமாரன் காணாமலிருந்தால் அவனைக்கண்டு பிடிக்க எல்லாதேசங்களையும் எப்படிச்சோதிப்பார்களோ அப்படி நிச சுகத்தைச் சாதிக்கவேண்டும். காலன் நம்மைக் கொண்டுபோகு முன்னரே நம்முடைய சொற்பவாயுளை வீணாக்காது பாரமார்த்தத்தைப் பெறவேண்டும். நரதேகத்தைப் பெற்றவர்கள் தங்கள் ஆயுளைப் பிரபஞ்சப் பிராந்தியினால் விஷய விலாசங்களில் போகங்களை யனுபவித்து வீணாளாக்கி விடுகின்றனர். பசு முதலான யோனிவழிப் பிறந்த பகுத்தறிவில்லாப் பிராணிகள், விஷயபோகங்களை விட மற்றெவற்றையும் மறிந்தில. நரர்களுக்கு மாத்திரம் விவேகபுத்தியை ஈஸ்வரன் அளித்திருக்கிறான். இந்த விவேகத்தைக் கொண்டு விஷயபோகங்களை விசாரித்துப்பார்த்தால் அவற்றின் நிலையாமையும் அவைகளால் தேகத்திற்கு ஹானியும் மூலத்திற்குக் கெடுதியுண்டாவது நன்கு விளங்கும். இவ்வாறு விசாரித்த எந்மானுடன் பிரமஞானத்தையடைய முயலாது தனது வாணாளை வீணாளாகக் கழிப்பானோ அவன் வாலில்லாத இருகால் கர்த்தபமெனச் சொல்லப்படுவான். அபரோக்ஷ ஞானத்தைவிட்டு வயிற்றின் நிமித்தம் யாவனொருவன் படாடோபம் செய்வனோ அவனை மதுபானம் பண்ணின மர்க்கடமெனக் கூறல் தகும். பிரமஞான மில்லாத சாஸ்திரஞானம் இருட்டு வீட்டிலுள்ள மின்னும் பூச்சை யொக்கும். அஞ்ஞானமென்னு மிருட்டில் அந்தச் சிற்றொளி மிக அல்பமாயிருக்கும். ஞானவொளியான சூரியனுதிக்கவே அதை யார் பார்ப்பார்? பிரமஞான மில்லாத சன்னியாசி நாடகத்திலிருக்கும் மொட்டைக்கூத்தாடியைப்போ லிருப்பான், இஷ்டான்ன பிக்ஷைக்

காக வீணாகத்தலையைச் சிறைத்துக் கொண்டவனாவான். விஷயாபிலாஷை மனதில் வைத்துக்கொண்டு வேதாத்தியயனஞ் செய்பவர் மனழக்காலத்தில் கூவும் சுவர்க்கோழி போலாவார்கள். விஷயப்பிராப்திக்காக மௌனத்தைத் தரித்துக் கொள்வது கொக்குகள் செய்யுந் தியானத்திற்குச் சமானமாகும். விஷயபுத்தியுடன் கானம் செய்வது ஒரு கழுதை மற்றொரு கழுதையைப் பார்த்துக் கத்துவதுபோலாகும். விஷயங்களைப் பற்றி நானா விலாச யுக்திகளுடன் கூடின வுபன்னியாசங்கள் காக்கைகள் பிண்டத்தைப் பார்த்து அனேக பிரகாரங்களாகக் கூச்சலிடுவது போலாகும். விஷயங்களுக்காகச் சாஸ்திர பிரசங்கஞ்செய்வது வயிற்றை நிறைப்பதற்குப் பக்ஷிகள்கூவும் கூச்சல்போலாகும். விஷயவாசனையை வைத்துக்கொண்டு வெளிக்கு ஆசாரத்தைக் காண்பிப்போர்கள் ஆசாரம், காகத்தின் சௌசாசாரம் போலாகும். செம்மையாகச் சீவிக்கவேண்டுமென்று மனதிலெண்ணிக்கொண்டு அக்னிஹோத்திரிகள் யாகஞ்செய்வது வேசி தன் சரீரத்தை விற்றுச் சமுசாரத்தை நடப்பிப்பதுபோலாகும். நரதேகத்திற்குப் பிரயோசனம் நான்காவதான பரமபுருஷார்த்த சாதனம். இந்தச் சாதனத்தைச் செய்யாதவனுக்கனர்த்த முண்டாகும். இந்தத் தேகத்தில் பிரம்ம ஞானத்தைச் சாதிக்காதவன் நாய் பன்றிகளுக்குச் சமான மாவதுமன்றி அவைகளுக்கும் ஈனனென்றும் மதிக்கப்படுவான். அஃது எங்ஙன மெனில் பசுவை யுதைத்தால் அது துவேஷத்தை வையாது. மனிதனோ தன்னை உதைத்தவனுக்குத் தீங்குசெய்யாதிரான். பசுவானது அதிகமேய்ச்சலிருந்தாலும் அதைவிட்டு விட்டுத் தனக்கு எவ்வளவு வேண்டுமோ அதைத் தின்று பிற்காலத்திற்கு வேண்டுமேயென்னுஞ் சிந்தனையாகிய லோபகுணம் அதனிடத்தில் வையாது, மனிதனோ தான் கோடீஸ்வரனாகவிருந்தாலும் தன்வயிற்றிற்கு வேண்டியமட்டும் புசியாது மேலும் மேலும் தனத்தை விர்த்திபண்ணும் லோபகுணத்தை யுடையவனாகி அந்த நிதியை யொருவேளை இழக்கின் தன்னுயிரை மாய்த்துக்கொள்வான். மனிதனுக்கோ நூறுஜன்மம் எடுத்தபோதிலும் அர்த்த சிந்தை தொலைவது அம்மா! அரிதரிது. ஒருவனுக்கு அமிதமான தனமிருந்தால் அனிவார்யமான சிந்தையும் பணம் செலவழிந்து போய் விடுமென்னும் பயமுமுண்டாகிவிடும். சரீரத்தின் அநித்தியத்தை நோக்காது விருத்தி க்ஷேத்திரங்களைச் சாதித்து வீடுகள் கட்டுவிக்கும்போது அஸ்திவாரம் பலமாகப் போட்டுத் தன் தலையர்கள்

ம்பரன் பௌத்திரர்கள் வாசம் செய்யவேண்டுமென்று எண்ணு வான். இவ்வித அபாரமான சிந்தை பசுக்களுக்கொரு காலத்திலு மிராது. பசுக்களுக்கு ருதுகாலந் தவிர மற்ற காலங்களில் மைதுன சிந்தை யுண்டாவதில்லை. மனிதனோ அங்ஙனமல்லாது தினமும் மைதுனத்தைக் கோரி ஸ்திரீ கர்ப்பவதியானாலும் அவளுடன் புணரு வதை விடான். காமம் குரோதம் கர்வம் நிந்தை இவை மனிதனி டத்திலுள்ளது, பசுவினிடத்தில் கிடையாது. பசு பக்ஷி முதலான வைகள் விஷயபோகங்களுக்காக விருக்கும். ஆனால் நரதேகம் விஷ யச் சேதனத்திற்கிருக்கும். இப்படிப்பட்ட நரதேகம் பாபபுண் ணிய சமானத்தினு லுண்டாகும். ஒருவன் புண்ணியம் அதிகம் செய்தால் சுவர்க்கத்திற்கேகுவான். பாவம் அதிகம் செய்தால் அதோகதிக்குப் போவான். பாபபுண்ணியங்கள் சமூலமாகப்போ கும்போது முத்தியடைவான். மனிதனிக்கர்ம பூமியில் ஜனித்து ஆச்சிரம தர்மங்களில் விவேகத்தை யுடையவனு யிருக்கவேண்டும். விலையில்லாத இரத்தினத்தைச் சம்பாதித்துக்கொள்ளலாம். ஆனு லம்மாதிரி சிந்தாமணியைச் சம்பாதித்துக்கொள்ள முடியுமோ? அப் படியே அனேகயோனிகளில் ஜனனங்களை யெடுக்கலாம். இந்த மானிட தேகம் துர்லபமாகக்கிடைக்கும். மிக வருமையான விந் தத் தேகங் கிடைத்த பின்னும் பிரம்ம சுகத்தைச் சாதிக்காதவன் மூர்க்கனும் பகவானிடத்து நன்றியறி வில்லாதவனுமாவான். நிஜாத்ம பிராப்திக்காகப் பகவான் மனிதயோனியைச் சிருஷ்டித் தனர். அக்கருணைகாக் கடவுண்மீது விசுவாசம் வையாது விஷயங் களில் அழுந்துவது அனர்த்தமாகும். புத்திரன் ஹரிபக்தனுகித் தங்கள் குலத்தை யுத்தரிப்பானென்று பித்துருக்கள் எண்ணியிருக் கிறார்கள். விஷய சுகங்களையே நச்சுவோன் இவர்கள் கோரிக்கையை நிறைவேறச் செய்யான். இந்த மானிடதேகம் சகல பாக்கியங்களின் பிரயோசனமாகும்; இதைச் சபலமாகும் பொருட்டு நான் வைராக் கியத்தை யடைந்தேன்.

శ్లో॥ ఏవంసంజాతవైరాగ్యో విజ్ఞానాలోకఆత్మని ।
విచరామిమహీమేతాం ముక్తసంగోనహంకృతిః ॥ 123.

தா.—தேகம் நிஜாத்த சாதனைக்கும் கருவியாகும். விஷய போகங்களைக் கொண்டால் அதுவே மிக்கவாதனையை விளைவிக்கும், இதைநான் கண்டறிந்து வைராக்கியத்தில் நிலைமை பெற்றேன்.

அந்த வைராக்கியத்தாலும் ஆசாரிய கிருபா விசேஷத்தால் வரும்
வசனத்தாலும் இந்திரியங்களுடைய போக்கை ஒருவேளையிலேயே
நிறுத்திவிட்டேன். அவித்தை யெப்பொழுதெப்போது ஜீவனை
மறைக்கிறதோ அப்போதைக்கப்போது ஸ்வஸ்வரூபத்தில் நிலைமை
பெறுவேன். அவித்தை மித்தையாகிப் போகுமாயின் சித்பிரகாச
பூரணமான பகவதனுபவங்கிடைக்கும். பின்பு தேகத்தின் மீதி
ருந்த அகந்தை சமூலமாய்ப் போய்விடும். எந்தத்தேகம் ஞான
சாதனைக் கனுகூலமோ அந்தத் தேகத்தில் வைராக்கியம் விளங்கி
நிற்கத் தேகசம்பந்தமான சிநேகம் அவ்விடம் எங்ஙனமிருக்கும்?
யான் இவ்வண்ணமான அனுபவத்தையுடையோனாகிச் சங்கமில்லா
மல் இவ்வுலகில் சஞ்சரித்து வருகிறேன். ஸ்வதேகத்தில் அகந்தை
யில்லை. எந்தப்புருஷனுக்கு அகந்தையில்லையோ அவனுடைய
தேகம் அதிர்ஷ்டயோகமாக விருக்கும். எப்படியென்றால் உலர்ந்த
இலை சருகுகள் வாயு பலத்தால் பறந்துபோவதுபோல அந்தத்
தேகத்தோடு இஷ்டமானபடி சஞ்சரிக்கக்கூடும் அதற்காகப் பிரம்ம
சாக்ஷாத் காரத்தால் விருத்தி லயமாகும் பரியந்தம் வைராக்கியம்
பங்கமாகாமல் பூர்த்தியாக விருப்பது புருஷார்த்தமாகும். நீ ஒரு
வேளை குருவினிடம் விசுவாசமில்லை யென்றுரைப்பாயாகில் அவ்
விஷயத்தை யுனக்கு விரைவாகச் சொல்லுகிறேன் கேள். உப்பும்
நீருங்கூடி ஒன்றுவதுபோலக் குரு உபதேசமாத்திரத்தில் விருத்தி
மறைபடு மவனுக்குச் சாதக பாதகங்களின் வாதை கூறுவது பொய்
யாகும். கர்த்தவ்யஞ் சுத்தமாயில்லாத அவஸ்தை கல்பாந்திரத்தி
லும் லபிக்காது. குரு உபதேசமாத்திரத்தில் ஸ்வரூபாவபோத
மனதிற்குண்டாகிறது. ஆனாலும் வெளி தரிசனத்தால் விக்ஷேபிக்கப்
பட்டு நிச்சலத்வமாக இருக்கமாட்டாது. அச்சமயத்தில் உட்கார்ந்த
போது ஸ்வரூபஸ்திதியும் ஆதனத்தை விட்டபோது பிரபஞ்சஸ்பூர்த்
தியுமான இத்தகைய வேகதேகஸ்திதியை யோகிகள் நாடார்கள். தே
கம் ஆதனத்தில் நிச்சலமாகிக் கர்மத்தில் சஞ்சலமாகவிருந்தாலும்
எப்பொழுதும் விருத்தி நிச்சலத்வத்தை யடைந்து நிருமலமாயிருப்
பது யோகிகளுக்குரிமை. பீஷ்மர் பரசுராமருடன் யுத்தஞ் செய்யும்
போது நிருவாண வாக்யைக் கேள்வியுற்றனர். சமாதி பங்கமில்லா
மல் இதைச் சாதிப்பதற்காக இருபத்துநான்கு குருக்களை யான்
செய்துகொண்டேன். தேக நிச்சலத்தால் விருத்தி நிச்சலமும்
தேக சஞ்சலத்தால் விருத்தி சஞ்சல முண்டாகுதல் தேகபுத்தியா

கும் அது நிஜபோதமாகாது. பிரபஞ்ச தரிசனமாகும்போது விருத்தி விக்ஷேபிக்கும். அந்த விக்ஷேபத்தைப் போக்கடிப்பதற்கு அனேக குருக்களை யான் சாதித்தேன்.

శ్లో॥ న హ్యేకస్మాద్గురోర్జ్ఞానం సుస్థిరం స్యాత్సుపుష్కలం ।
బ్రహ్మైతదద్వితీయం వై గీయతే బహుధర్షిభిః ॥ 124.

தா—எனது ஆசாரியன் சொன்ன ஞானத்தால் இருதயத்தில் சித்கனம் (பேரறிவு) பிரகாசித்தது. அது மின்னலைப்போலச் சஞ்சலமுள்ளதாயிருந்ததே யன்றி ஸ்தைரியத்தை யடைந்ததில்லை. மூலத்தில் சஞ்சலமுடையது எப்போதும் பூரண பிரயோசனத்திற்கு வாராது. க்ஷணந்தோன்றி க்ஷணமறையு மாகையால் சாதகர்கள் தொந்தரை யடைவார்கள். பிரமம் இரண்டற்ற தென்பதும் நித்திய மான தென்பதும் யாவருக்கும் சம்மதமே. அதனைக் கண்டறிய வேண்டியாராயப்புகின் அதைச் சிலர் சகுணமென்றும் சிலர் நிர்க்குண மென்றும் இப்படி பலவாராக வாதித்து அபிமானத்தால் யுக்தியை விட்டுவிடுவார்கள். சிலர் பிரமம் பிரபஞ்சத்துடன் கூடினதென்றும் சிலர் அதனை நிஷ்பிரபஞ்ச மென்றும் கூறி வாதாடுவார்கள். பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது விக்ஷேபிக்கிறதினால் நிஜ ஐக்கியத் தைச் சாதிப்பதற்கு நானு பதார்த்தங்களை நல்லபுத்தியால் பார்த்துக் குணத்தைக் கிரகிப்பதனால் அவைகள் குரு ரூபங்களாயின. ஒரு குருவை யனுசரிப்பதால் தோன்றும் சங்கையாவற்றிற்கும் சமா தானங் கிடைப்ப தருமையாதலின் யான் பல குருக்களை யனுசரித் தேன். எவ்விடத்தில் விக்ஷேப முண்டாயிற்றோ அவ்விடத்திலேயே ஐக்ய முண்டாகும். எந்தக் குருக்களுடைய இலக்ஷணங்களைச் சொன்னேனோ அவை நிஜபுத்தியின் சாதனங்கள். அவை விக்ஷே பங்களைச் சமூலமாகத் தீவிர தியானத்தினால் சேதித்தன. அதனால் சஞ்சலத்வம் போய் நிஜபோத மூலமான நிச்சலத்வ மடையப்படு கின்றது. திருசியம் சின்மாத்திரமாகத் தோன்றப்பட்டது, முன்பு என்னுடைய குரு எனக்கு எதைப் போதித்தனரோ அதனையே மேற்சொன்ன இருபத்து நான்கு குருக்கள் மூலமாகச் சாதித்து விக்ஷேபத்தைச் சேதித்தேன். நிஜகுரு ஒருவனே யாவன். ஏனைய குருக்கள் சாதகத்வத்தால் சாதனமாவார்கள். அலைகள் சமுத்தி ரத்தில் கிரீடித்துக்கொண்டிருந்தபோதிலும் ஜலத்துடன் ஒருமித்த தன்மையை விடுவதில்லை. அவ்விதம் நான் இச்சகத்தில் சஞ்சரித்

துக்கொண்டிருந்தபோதிலும் இரண்டென்னும் வார்த்தை எனக்கில்லை. சகலமும் சகலத்திலும் ஆசாரியனே. ஆசாரியனையன்றி வேற்றுமை சற்றேனு மில்லை. என்னுடைய நானென்கிற சுபாவம் சதாசாரியனே. இப்படிச் சதாசாரியன் கதையாகிய பாரமார்த்தத்தை யுனக்குக் கழறினேன் என்று கூறி அந்த அவதூதர் அரசனை ஆலிங்கனஞ் செய்ய அவ்விருவரும் ஞானாநந்தத்தில் ஒருமித்தனர்.

శ్రీభగవానువాచ.

శ్లో॥ ఇత్యుక్త్వాసయదుంవిప్ర స్తమామంత్ర్యగభీరధీః ।
వందితోభ్యర్థితోరాజ్ఞా యయౌప్రీతోయథాగతం ॥ 125.

தா.—ஸ்ரீ கிருஷ்ணபகவான் வாக்கியம்.—இவ்விதமாக யதுமகாராஜனுக்கு அவதூதர் பிரம்ம ஞானத்தைப் போதித்து அவன் சமாதானப்படுவதைக் கண்டு அவனுடன் சொல்லாமலேபோக வாரம்பித்தார். இதைக்கண்ட அவ்வரசன் ஓடிச்சென்று அவர் திருவடிகளைப் பிடித்துப் பரம பிரேமையினால் பூசைசெய்தான், மறுபடியும் பிரதக்ஷணஞ்செய்து அவர் பாதங்களைப் பிடித்துக்கொண்டு அந்த அவதூதரை இருக்கும்படி பிரார்த்தித்தான். அதைக்கண்ட அவதூதர் அவன் மீது க்ருபைகொண்டு அவன் சிரசின்மீது கையை வைத்துப் பிரசன்னராகி யின்றுமுதல் உனக்கு மெனக்கும் வியோகமிராதென்று ஆசீர்வதித்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தமக்கிஷ்டமானவிடஞ் சென்றனர்.

శ్లో॥ అవధూతవచఃశ్రుత్వా పూర్వేషాంనఃసపూర్వజః ।
సర్వసంగవినిర్ముక్తః సమచిత్తోబభూవహ ॥ 126.

தா.—ஓ உத்தவரே! நம்முடைய வம்சத்திற்கு முதற் பிறந்தவனான யதுமகாராஜன் அவதூதருடைய வாக்கியங்களைக் கேட்டுச் சகலமான சேர்க்கைகளிலிருந்து விடுதலை யடைந்து சமத்வமான சித்தத்தையுடையவனானா னென்று கிருஷ்ணபகவான் சொல்லி முடித்தனர். அப்படியே இதனைப் படிப்போர்கேட்போர், ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களில் நிலைமை பெறுவார்.

முற்றிற்று.

ஸ்ரீ வேங்கடகிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

The Arrow Press, Mount Road, Madras.

# அவதூத யது சம்வாதம்.

| ஸ்லோகம். | பக்கம். | வரி. | பிழை. | | திருத்தம். |
|---|---|---|---|---|---|
| 4 | 4 | 13 | தவிர்ந்து | ... | தவிர்த்து |
| 8 | 6 | 12-13 | முரம் | ... | முறம் |
| ,, | ,, | 20 | யாவு | ... | யாவும் |
| 17 | 11 | 6 | பொருந்தாதால் | ... | பொருந்தாதத[லால் |
| 18 | 11 | 16 | மடுவின்னீரால் | ... | மடுவிந்நீரால் |
| 19 | 12 | 1 | பிரிதிவு | ... | பிருதிவி |
| ,, | ,, | 13 | அதினால் | ... | அதனால் |
| 20 | 14 | 6 | சத்தியமாகலின் | ... | சத்தியமாதலின் |
| 23 | 15 | 10 | அவனாலிவாறு | ... | அவனாலிவ்வாறு |
| 26 | 16 | சுலோகம் | 6 | ... | 26 |
| 31 | 18 | 7 | பரந்து | ... | பறந்து |
| 32 | 19 | 15 | அநன்னியார் ஹசேஷத்வம் | ... | அநந்நியார்ஹ சேஷத்வம் |
| 39 | 21 | 4 | வேளியே | ... | வெளியே |
| 51 | 25 | 2 | வறுமானமுமில்லை | ... | வருமானமுமில்லை |
| 91 | 41 | 13 | விச்ரரந்தி | ... | விச்ராந்தி |
| ,, | ,, | 14 | பாடினானென | ... | பாடினாளென |
| 94 | 43 | தலைப்பு | ௰௧ | ... | ௰௯ |
| 95 | 45 | 1 | அபிமானதிற்கு | ... | அபிமானத்திற்கு |
| 101 | 47 | 1 | ஒலி | ... | ஓலி |
| 118 | 57 | 11 | னெருங்கும் | ... | நெருங்கும் |
| 119 | 59 | 6 | தன் | ... | தன |
| 122 | 61 | 6 | மருமையாகிக்கிடைத்த | | மருமையாகக் கி[டைத்த |
| 124 | 66 | 9 | தாதித்து | ... | வாதித்து |
| ,, | 66 | 16 | தருமையாகலின் | ... | தருமையாதலின் |
| ,, | 67 | 2 | ஆசாரினே | ... | ஆசாரியனே |
| 125 | 67 | 5 | செய்தால் | ... | செய்தான் |

68102

R4
N22

ஸாது வே. பாலகிருஷ்ண முதலியாரால், வடமொழியிலிருந்து தமிழ், தெலுங்கு பாஷையில் மொழி பெயர்க்கப்பட்ட, அடியில் கண்ட புத்தகங்கள், பின்வரும் விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

| | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| *1. | அத்யாத்ம ராமாயண வசனம் | (தமிழ்) ... | 2 | 12 | 0 |
| 2. | ,, ,, | (தெலுங்கு) ... | 2 | 8 | 0 |
| 3. | அவதூத யது சம்வாதம் | (தமிழ்) .... | 0 | 6 | 0 |
| 4. | ஷை முதலியாருடைய சரித்திரமும் அவருடைய அனுபவரஸ வாக்கியங்களும், | (இங்கிலீஷ்).... | 0 | 8 | 0 |

(தபாற் கூலி வேறு.)

விலாசங்கள் :—

பெ. லோ. திருவேங்கிடசாமி முதலியார்,
நெ. 1, மீரான் சாயபு தெரு,
நரசிங்கபுரம், மவுன்ட் ரோட், சென்னை.

... எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்,
நெ. 18, சுங்குவார் அக்ரஹாரம்,
சிந்தாதிரிப்பேட்டை,
மவுன்ட் ரோட், சென்னை.

... மாணிக்க முதலியார்,
2/48, துளசிங்க பெருமாள் கோவில் தெரு...
திருவல்லிக்கேணி, செ...

---

...த்யாத்ம ராமாயண வசனம்" வாங்குபவர்... கண்டிருக்கிற ஒரு புத்தகம், இனாமாக அனுப்ப...